# 5

# வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

## 5.1 பொதுநோக்கு


**முன்னைய ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த கொள்கை வழிமுறைகளின் தொடர்ச்சியான தாக்கத்தினைப் பிரதிபலித்து வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவை என்பனவற்றின் சீராக்கங்கள் மற்றும் ஒதுக்குகள் கட்டியெழுப்பப்பட்டமை என்பன 2013இல் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க சிறப்பாகக் காணப்பட்டன.** ஏற்றுமதி வருவாய்களில் காணப்பட்ட வரவேற்கத்தக்க வளர்ச்சி மற்றும் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக வர்த்தகக் கணக்கில் காணப்பட்ட பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவிற்கு குறுக்கமடைந்தது. 2013இல் தொழிலாளர் பணவனுப்பல்களின் பேரிலான பெறுகைகளும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்களும் வர்த்தகப் பற்றாக்குறையின் தாக்கத்தைக் குறிப்பிடத்தக்களவிற்கு குறைத்தன. இது, ஏனைய பணிகளிலுள்ள வர்த்தகக் கணக்கின் மீதான அதிகரித்த பெறுகைகளுடன் சேர்ந்து இவ்வாண்டுப் பகுதியில் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட பற்றாக்குறை கணிசமானளவிற்கு குறுக்கமடைவதற்கு உதவியது. அதேவேளை, நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு அரசாங்கம், வங்கித்தொழில் மற்றும் தனியார் துறைகளுக்கான உட்பாய்ச்சல்களே காரணமாகும். மேம்பட்ட முதலீட்டாளர் மனோபாவம் மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் மேலும் தளர்த்தப்பட்டமை என்பன வெளிநாடுகளிலிருந்து நிதிகளைத் திரட்டுவதற்கு வங்கிகளையும் தனியார் துறையினையும் ஊக்குவித்தன. வெளிநாட்டு துறையில் காணப்பட்ட இம்முன்னேற்றங்கள் சென்மதி நிலுவையில்[1] கணிசமானளவு மிகையினை விளைவித்ததுடன் அதன் மூலம் நாட்டின் மொத்த உள்நாட்டு ஒதுக்குகளையும் 2013இல் ஆரோக்கியமான மட்டமொன்றிற்கு அதிகரித்தன. இதன் விளைவாக 2013இன் நடுப் பகுதியில் ஒரு சில தளம்பல்கள் காணப்பட்ட போதும் இவ்வாண்டுப் பகுதியில் இலங்கை ரூபா ஒப்பீட்டு ரீதியில் உறுதியாகவே காணப்பட்டது.

**முக்கிய ஏற்றுமதி நாடுகளிலிருந்தான கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பிலிருந்து கிடைத்த நன்மைகளுடன் வெளிநாட்டு வர்த்தகம் நன்கு செயலாற்றியது.** முன்னேற்றம்கண்ட பொருளாதாரங்களின் படிப்படியான மீட்சி மற்றும் குறிப்பாக 2013இன் நான்காம் காலாண்டுப் பகுதியில் உலகளாவிய வர்த்தகம் மீண்டும் வலுவாக எழுச்சியடைந்தமை என்பனவற்றின் காரணமாக 2013இல் உலகளாவிய பொருளாதாரம் 6.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இலங்கையின் ஏற்றுமதிகள், உலகளாவிய பொருளாதாரத்தில் ஏற்பட்ட சாதகமான அபிவிருத்திகளுக்குச் சிறந்த முறையில் பதிலிறுத்ததன் மூலம் 2013இல் 6.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையின் விளைவாக வர்த்தக நிலுவை குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டது.


---

1 சென்மதி நிலுவையின் சமர்ப்பிப்பானது பன்னாட்டு நாணய நிதியத்தால், வெளியிடப்பட்ட 2009இன் சென்மதி நிலுவை மற்றும் பன்னாட்டு முதலீட்டு நிலைமைக் கைநூலின் மிகப் பிந்திய (ஆறாவது) பதிப்புடன் ஒத்துச் செல்கின்றது.

வரைபடம் 5.1 சென்மதி நிலுவை




வரைபடம் 5.2 வெளிநாட்டு செலாவணி வருவாய்களின் முக்கிய மூலங்கள்




**பணிகளிலுள்ள வர்த்தகமும் தொழிலாளர் பணவனுப்பல்களும் 2013இல் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவு செய்ததன் மூலம் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை கணிசமானளவிற்கு குறைவடைந்தது.** சுற்றுலா, போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளுதல், வெளியிலிருந்து அறிவினைப் பெற்றுக் கொள்ளுதல் என்பனவற்றிலிருந்தான உயர்ந்த வருவாய்கள் சான்று பகிர்கின்றவாறு பிராந்தியத்தில் பணிகளின் முன்னணி ஏற்றுமதியாளராக தோற்றம் பெறுவதற்கான உள்ளார்ந்த வளத்தினை இலங்கை கொண்டிருக்கிறது. இதன்படி, அறிவு மையம், கடல் போக்குவரத்து மையம், வான் போக்குவரத்து மையம், வலு மையம், வர்த்தக மையம் மற்றும் சுற்றுலா மையமாக இலங்கையை அபிவிருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்ட ஐந்து + 1 மையங்கள் உபாயமானது வளர்ச்சிக்கான எண்ணிறந்த உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருக்கிறது. அண்மைய ஆண்டுகளில் விரைந்து வளர்ச்சியடைந்த பயணம் மற்றும் சுற்றுலாத் துறை 2013இல் தொடர்ந்தும் விரிவடைந்தது. அதேவேளை, புலம்பெயரும் நாடுகள் பெருமளவிற்கு பன்முகப்படுத்தப்பட்டதன் காரணமாக தொழிலாளர் பணவனுப்பல்களில் உயர்ந்த வளர்ச்சி உத்வேகம் பேணப்பட்டது. கடன்பாடுகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள், வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் இலாபங்கள் தாய்நாட்டிற்கு அனுப்பப்பட்டமை என்பனவற்றின் காரணமாக ஆரம்ப வருமானக் கணக்கின் பற்றாக்குறை விரிவடைந்த போதும் வர்த்தக நிலுவையில் காணப்பட்ட முன்னேற்றம் மற்றும் பணிகள் மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்குகளில் காணப்பட்ட மிகைகளும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட பற்றாக்குறையினை 2012இன் மொ.உ.உற்பத்தியின் 6.7 சதவீதத்திலிருந்து 2013இன் மொ.உ.உற்பத்தியின் 3.9 சதவீதத்திற்கு குறுக்கமடைய உதவின.

**2013இல் சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவையும் பன்னாட்டு ஒதுக்குகளும் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டன.** நடைமுறைக் கணக்கில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் மற்றும் நிதியியல் கணக்கிற்கு ஏற்பட்ட அதிகரித்த உட்பாய்ச்சல்கள் என்பனவற்றின் காரணமாக சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை 2012இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 151 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 985 மில்லியன் கொண்ட மிகையைப் பதிவு செய்தது. இவ்வாறு தோன்றிய திரண்ட மிகை மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை 2013 இறுதியில் ஐ.அ.டொலர் 7.5 பில்லியனுக்கு அதிகரிக்க வழிவகுத்தது. இது 5 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகும். குறுங்காலப் படுகடன் மற்றும் பொறுப்புக்களின் நியதிகளில் ஒதுக்குப் போதுமை 63 சதவீதமாகக் காணப்பட்ட வேளையில், மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் திறைசேரி முறிகள் நீங்கலான குறுங்காலப் படுகடன் 2013 இறுதியில் 85 சதவீதமாக இருந்தது. மேம்பட்ட சென்மதி நிலுவை நிலைமை மற்றும் அதிகரிக்கப்பட்ட ஒதுக்கு என்பன உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை மேலும் உறுதியடைவதற்கும் நாட்டின் வெளிநாட்டுத்துறை தோற்றப்பாடு மேம்படுவதற்கும் உதவியது. அதேவேளை, உலகின் எஞ்சிய பகுதிகளுக்கெதிராக இலங்கையின் நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலைமைகளைப் பதிவு செய்யும் பன்னாட்டு முதலீட்டு நிலைமை 2013 இறுதியில் தேறிய பொறுப்பு நிலைமையில் ஒரு அதிகரிப்பினைக் காட்டி வெளிநாட்டு நேரடி முதலீட்டு வடிவில் வெளிநாடடு உட்பாய்ச்சல்களிலும் அரச பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகளிலும் அரச மற்றும் தனியார் துறை கம்பனிகளுக்கான நீண்ட காலப் படுகடன் உட்பாய்ச்சல்களிலும் வங்கித்தொழில் துறையின் பன்னாட்டு முறி வழங்கல்களிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களைப் பிரதிபலித்தது.

அட்டவணை 5.1

## சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை

(பிபீஎம்6 இன்படியான சமர்ப்பிப்பு வடிவமைப்பு)

| வகை | ஐ.அ.டொ. மில்லியன் | | ரூபா மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 2012 (அ) | 2013 (ஆ) | 2012 (அ) | 2013 (ஆ) |
| நடைமுறை கணக்கு | -3,982 | -2,607 | -501,869 | -332,580 |
| வர்த்தக நிலுவை | -9,417 | -7,609 | -1,196,348 | -979,074 |
| ஏற்றுமதி | 9,774 | 10,394 | 1,245,531 | 1,344,054 |
| இறக்குமதி | 19,190 | 18,003 | 2,441,879 | 2,323,128 |
| பங்களிப்பு (தேறிய) | 1,262 | 1,180 | 160,755 | 152,630 |
| பெறுகைகள் | 3,800 | 4,685 | 484,936 | 605,213 |
| கொடுப்பனவுகள் | 2,538 | 3,505 | 324,181 | 452,583 |
| முதன்மை வருமானம் (தேறிய) | -1,219 | -1,817 | -154,889 | -234,814 |
| பெறுகைகள் | 142 | 148 | 18,137 | 19,100 |
| கொடுப்பனவுகள் | 1,361 | 1,965 | 173,027 | 253,914 |
| இரண்டாந்தர வருமானம் (தேறிய) | 5,392 | 5,639 | 688,613 | 728,678 |
| இரண்டாந்தர வருமானம்: கொடுகடன் | 6,038 | 6,428 | 770,879 | 830,407 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 5,985 | 6,407 | 763,980 | 827,689 |
| அரசாங்க மாற்றங்கள் | 53 | 21 | 6,899 | 2,718 |
| இரண்டாந்தர வருமானம்: செலவு | 646 | 788 | 82,266 | 101,728 |
| மூலதண கணக்கு | 130 | 71 | 16,951 | 9,188 |
| மூலதன கணக்கு: வரவு | 146 | 90 | 18,884 | 11,596 |
| மூலதன கணக்கு: செலவு | 15 | 19 | 1,933 | 2,409 |
| நடைமுறை கணக்கு மற்றும் மூலதன கணக்கு | -3,851 | -2,536 | -484,918 | -323,392 |
| நிதியியல் கணக்கு | 4,263 | 3,126 | 525,889 | 394,785 |
| நேரடி முதலீடு சொத்துக்கள் | 64 | 65 | 8,157 | 8,399 |
| நேரடி முதலீடு பொறுப்புக்கள் | 941 | 916 | 119,813 | 118,607 |
| சொத்துப் பட்டியல்: முதலீடு சொத்துக்கள் | -10 | - | -1,295 | -29 |
| படுகடன் பிணையங்கள் | -10 | - | -1,295 | -29 |
| சொத்துப் பட்டியல்: முதலீடு பொறுப்புக்கள் | 2,116 | 2,106 | 272,691 | 273,175 |
| மூலதனப் பிணையங்கள் | 272 | 263 | 34,493 | 36,499 |
| படுகடன் பிணையங்கள் | 1,844 | 1,843 | 238,198 | 236,676 |
| நிதியியல் பெறுமதிகள் | - | - | - | - |
| ஏனைய முதலீடு: சொத்துக்கள் | 363 | -222 | 47,384 | -28,468 |
| நாணய மற்றும் வைப்புக்கள் | 162 | -459 | 22,178 | -58,839 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணம் | 90 | 195 | 11,769 | 25,190 |
| கிடைக்கவேண்டிய ஏனைய கணக்கு | 111 | 42 | 13,437 | 5,181 |
| ஏனைய முதலீடு: பொறுப்புக்கள் | 2,384 | 1,060 | 319,695 | 137,965 |
| நாணய மற்றும் வைப்புக்கள் | 447 | 108 | 61,447 | 14,960 |
| கடன்கள் | 3,070 | 949 | 389,956 | 122,747 |
| மத்திய வங்கி | 780 | -453 | 100,493 | -57,683 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 579 | 124 | 69,170 | 15,940 |
| பொது அரசாங்கம் | 992 | 821 | 127,434 | 105,707 |
| ஏனைய துறைகள் | 719 | 456 | 92,860 | 58,783 |
| வர்த்தக கொடுகடனும் முற்பணங்களும் | -571 | -54 | -70,629 | -8,089 |
| செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள் | -563 | 58 | -61,078 | 8,348 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | - | - | - |
| ஒதக்கு சொத்துக்கள் | 760 | 1,112 | 132,063 | 155,060 |
| நாணைய தங்கம் | 178 | 351 | 22,679 | 44,862 |
| சிறப்பு எடுப்பனவு உரிமை | -0.5 | 12 | -88 | 2,440 |
| ப.நா.நி.இல் ஒதுக்கு நிலமை | - | - | - | - |
| ஏனைய ஒதுக்கு சொத்துக்கள் | 583 | 749 | 109,473 | 107,758 |
| நாணயமும் வைப்புக்களும் | -801 | 1,297 | -67,194 | 179,394 |
| பிணையங்கள் | 1,384 | -548 | 176,666 | -71,636 |
| தேறிய பிழைகளும் தவறுகளும் | -412 | -590 | -40,957 | -71,394 |
| திரண்ட நிலுவை | 151 | 985 | 72,638 | 229,692 |
| நாணய அசைவுகள் | -151 | -985 | -72,638 | -229,692 |
| சதவீதங்களில் மொ.உ.உ.யின் சதவீதம் (இ) | | | | |
| வர்த்தக நிலுவை | -15.9 | -11.3 | -15.8 | -11.3 |
| பொருட்கள் மற்றும் பணிகள் | -13.7 | -9.6 | -13.7 | -9.5 |
| நடைமுறை கணக்கு | -6.7 | -3.9 | -6.6 | -3.8 |
| நடைமுறை மற்றும் மூலதன கணக்கு | -6.5 | -3.8 | -6.4 | -3.7 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது
(இ) நடைமுறை சந்தை விலைகளில் தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டது. ஆண்டு காலப்பகுதியில் நாணய மாற்று விகிதத்தின் மாறல்கள் காரணமாக ரூபா பெறுமதி மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் பெறுமதியில் கணிப்பிடப்பட்ட விகிதங்களில் மாற்றம் காணப்படுகின்றது.

ஐக்கிய அமெரிக்காவின் கணியசம்சார் தளர்த்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் அளவு குறைக்கப்பட்டமை தொடர்பான கரிசனைகளுக்கு மத்தியிலும் கடுமையான தேய்வினால் பாதிக்கப்பட்ட இப்பிராந்தியத்திலுள்ள மற்றைய பல நாணயங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபா ஒப்பீட்டு ரீதியில் உறுதியாகக் காணப்பட்டது. உயர்ந்த இறக்குமதிக் கேள்வி மற்றும் ஐக்கிய அமெரிக்கா முறிகள் வாங்குகின்ற நிகழ்ச்சித்திட்டம் ஒடுங்கிவிடக்கூடிய சாத்தியங்கள் எதிர்பார்க்கப்பட்டமையினைத் தொடர்ந்து அரச பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வெளிச் செல்வதற்கான எதிர்பார்ப்பு என்பனவற்றின் காரணமாக ஆண்டின் நடுப் பகுதியில் ரூபா சில அழுத்தங்களுக்கு உட்பட்ட போதும் இலங்கை ரூபா, பல பிராந்திய நாணயங்களுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலருக்கெதிராக மிதமான வீதத்தில் மாத்திரம் தேய்வடைந்தது. இதன்படி, 2013 இறுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 2.75 சதவீதத்தினால் தேய்வடைந்த வேளையில் இந்திய ரூபா மற்றும் யப்பானிய யென் போன்ற மற்றைய முக்கிய நாணயங்களுக்கெதிராக குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது.

**இலங்கையின் வெளிநாட்டுத் துறை, வெளிநாட்டு அதிர்வுகளுக்கான அதன் தாக்குபிடிக்கும் தன்மையினை அதிகரிப்பதற்காக 2014இலும் அதற்கு அப்பாலும் மேலும் வலுப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.** சாதகமான தோற்றப்பாட்டிற்கு உலகளாவிய பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படும் மீட்சியும் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் காணப்பட்ட மேம்பட்ட வளர்ச்சி வாய்ப்பும் ஆதரவளிக்கும். வணிகப் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக இலக்கிடப்பட்ட வழிமுறைகள் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதுடன் சேர்ந்து வர்த்தகப் பற்றாக்குறையினை கணிசமானளவிற்குக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பாரிய உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களிலிருந்து, குறிப்பாக சுற்றுலா, துறைமுகம் மற்றும் வானூர்திநிலையம் மற்றும் தகவல் தொழில்நுட்பம்/ வெளிமூலங்களிலிருந்தான வியாபாரப் பணிகள் ஆகியவற்றின் மூலம் நாட்டின் பொருளாதார மையங்கள் பெருமளவு நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுமென்பதனால் ஏற்றுமதிகள் நடுத்தர காலத்தில் விரைந்த வேகத்தில் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. புலம்பெயர் நாடுகளைப் பன்முகப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகள் தொழிலாளர் பணவனுப்பல்களை அதிகரிக்கும். இது நடுத்தர காலத்தில் வெளிநாட்டுச் செலாவணியின் வலுவான மூலமாக தொடர்ந்துமிருக்கும். அதேவேளை, அண்மையில்

அறிமுகப்படுத்தப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டு தளர்த்தல் வழிமுறைகளும் மேம்பட்ட வியாபாரத்தினை மேற்கொள்ளும் சூழலும் நாட்டில் முதலீட்டாளர் நம்பிக்கையினை உயர்வடையச் செய்து, கூடுதலான முதலீட்டுப்பாய்ச்சலை குறிப்பாக வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் படுகடன்களை உருவாக்காத நிதியியல் பாய்ச்சல்களைக் கவரும்.

## 5.2 வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகளும் நிறுவன ரீதியான ஆதரவும்

**2013இல் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையானது அதிகரித்த வெளிப்படையான தன்மைகளினூடாக வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் மற்றும் விரிவடைந்து வரும் பொருளாதார நடவடிக்கைகளின் மூலமாக உலகப் பொருளாதாரத்திற்குள் இலங்கை ஒருங்கிணைக்கப்படுவதனை மேம்படுத்துவது தொடர்பில் தொடர்ந்தும் கவனம் செலுத்தப்பட்டது.** அதிகரித்த ஒருங்கிணைப்பு இலங்கை உற்பத்திகள் வெளிநாட்டுச் சந்தைகளுக்குள் நுழைவதனை வலுப்படுத்துவதற்கும் இலங்கைக்குள் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்கும் இறக்குமதிச் செலவினத்தை சிக்கனப்படுத்துவதற்கும் உதவும். நிறுவன ரீதியான ஆதரவு தொழில்நுட்ப நவீனத்துவ முறைகளினூடாக கைத்தொழில் துறையில் பன்னாட்டு போட்டித்தன்மையினை மேம்படுத்துவதற்கும் அரச தனியார் பங்குடமைகளை மேம்படுத்துவதற்கும் உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏனைய தொடர்பான உட்கட்டமைப்பு பணிகளுக்கும் விரிவாக்கப்பட்ட வேளையில் உறுதியான பேரண்டப் பொருளாதார சூழல் பேணப்படுகின்றமையும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

**முக்கிய வர்த்தகக் கொள்கை கருவியான நான்கு பிரிவுச் சுங்கத் தீர்வை அமைப்பு, உள்நாட்டு உற்பத்தி மற்றும் வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்காக மேலும் இலகுபடுத்தப்பட்டது.** 0, 5, 15 மற்றும் 30 சதவீதங்களாகக் காணப்பட்ட தீர்வைப் பிரிவுகள் 2013 நவெம்பரிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 0, 7.5, 15 மற்றும் 25 சதவீதத்திற்கு திருத்தப்பட்டது. பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள் மற்றும் பொறிகளுக்கு ஏற்புடைத்தான முன்னைய தீர்வை அமைப்பான 5 சதவீத சுங்கத்தீர்வை ஒழிக்கப்பட்டு அவ்விடயங்களில் பெரும்பாலானவை பூஜ்ய தீர்வை வீதத்தில் வைக்கப்பட்ட வேளையில் ஒரு சில விடயங்கள் 7.5 சதவீதப் பிரிவிற்குள் அடக்கப்பட்டன. இதன்படி, 6,577 தீர்வை விடயங்களில் 3,379 தீர்வை விடயங்கள் பூஜ்ய தீர்வை பிரிவில் வைக்கப்பட்டன. தீர்வை அமைப்பினை மேலும் இலகுபடுத்துதல் மற்றும் வரித் தளத்தினை குறைத்தல் ஆகிய கொள்கையுடன் இசைந்து செல்லும் விதத்தில் முடிவுப் பயன்பாட்டு உற்பத்திகளுக்கு ஏற்புடைத்தாக இருந்த 30 சதவீத சுங்கத்தீர்வை 25 சதவீதத்திற்கு கீழ் நோக்கி திருத்தப்பட்டது.

**ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களை வலுப்படுத்துவதற்காக 2013இல் பல முக்கியமான கொள்கை வழிமுறைகள் பின்பற்றப்பட்டன.** 2013ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க நிதிச் சட்டவாக்கம் சுதந்திரத் துறைமுகம் மற்றும் சுதந்திரமான சுங்கவரி செலுத்தப்படாத பொருட்களை களஞ்சியப்படுத்தும் இடம் என்பனவற்றை நிறுவுவதற்காக ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினைத் திருத்துகின்றது. இதன்படி, கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைகங்கள் “சுதந்திரத் துறைமுகங்களாக” பிரகடனம் செய்யப்பட்ட வேளையில், கட்டுநாயக்கா, கொக்கல மற்றும் மத்தள என்பனவற்றிலுள்ள ஏற்றுமதி பதனிடல் வலயங்கள் சுதந்திரமான சுங்கவரி செலுத்தப்படாத பொருட்களை களஞ்சியப்படுத்தி வைக்கும் இடங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. சுங்கம் செலுத்தப்படாத களஞ்சிய இடங்களில் தொழிற்படுகின்ற கைத்தொழில்கள் உள்நாட்டு வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. மேலும், மீள்ஏற்றுமதிகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் சிறுபதனிடல் மற்றும் ஏற்பாட்டுப் பணிகள் அல்லது பல்வேறு நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட உதிரிப்பாகங்கள் உடற்கோப்புச் செய்தல் என்பனவற்றுடன் தொடர்பான துறைமுகத்திலான வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஏற்றுமதியாளர்கள் இச்சுதந்திர வலயங்களில் தொழில்களை அமைப்பதன் மூலம் பல்வேறு நன்மைகளையும் அடைவர். மேலும், பன்னாட்டு கப்பற்படுத்தல் வர்த்தகத்தில் ஏகபோக விலையிடலைத் தடுக்கும் நோக்குடன் நிதிச் சட்டத்திற்கான திருத்தங்களினூடாக, கொள்கலன் சரக்குகளுக்கான குறித்துரைக்கப்பட்ட பன்னாட்டு கட்டணங்களுக்குப் புறம்பாக முனைக்கோடி கையாளல் மீதான தீர்வை மற்றும் ஏனைய கட்டணங்கள் நீக்கப்பட்டு அனைத்தையுமுள்ளடக்கிய சரக்குக் கட்டண வீதம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆடைத் துறையினைப் பொறுத்தவரையில், அரசாங்கம் 2020 அளவில் உலகின் முதல் பத்து உயர்தர கைத்தொழில் ஆடைத் தயாரிப்பாளர்களிடையே இலங்கையின் ஆடைத்தொழிலையும் நிலைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கிறது. இக்குறிக்கோள்களை அடையும் பொருட்டு, இக்கைத்தொழிலில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 300 சதவீத வரிச் சலுகை வழங்க முன்மொழியப்பட்டுள்ளது.

உள்ளூர் உற்பத்திகளுக்காக வர்த்தக நாமங்கள் போன்ற பன்னாட்டு ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட புலமைச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதனை மேம்படுத்தும் நோக்கத்துடன் அத்தகைய உரிமைகளைக் கொள்வனவு செய்வதற்காக ஏற்படும் செலவுகளுக்கும் அதேபோன்று இவ்வேத்துரிமைகளின் பேரில் வெளிநாட்டு நாணயங்களில் உழைக்கப்படும் ஏதேனும் வருமானங்களுக்கும் வரிக் கழிவுகள் வழங்கப்பட்டன. புடவைகள் மற்றும் ஆடைகளின் உற்பத்திச் செலவினைக் குறைப்பதற்காக சலவை செய்யப்படாத பருத்தித் துணிகள் மற்றும் ஏனைய துணிகளின் இறக்குமதி மீதான செஸ்வரி முறையே கி.கிறாமிற்கு ரூ.75 இற்கும் கி.கிறாமிற்கு ரூ.100 இற்கும் குறைக்கப்பட்டது. மேலும், புடவைகள் மற்றும் ஆடைகளின் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களின் வழங்கலையும் ஏனைய பணிகளையும் ஊக்குவிப்பதற்காக ஆடை ஏற்றுமதியாளர்களுக்கான குறிப்பிட்ட பணிகளின் வழங்கலிலிருந்து பெறப்பட்ட இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீது பிரயோகிக்கப்பட்ட 12 சதவீதம் கொண்ட சலுகை ரீதியான வரி மேலும் நீடிக்கப்பட்டது. ஆரம்பப் பண்ட ஏற்றுமதிகள் மீதான உயர்மட்ட தீர்வை பேணப்படுவதன் மூலம் உயர் பெறுமதி கொண்ட தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் ஊக்குவிக்கப்படும். மேலும், 2014இற்கான வரவு செலவுத்திட்டத்தில், தேயிலைக் கைத்தொழிலின் பெறுமதிகூட்டலை மேம்படுத்தும் பொருட்டு பாரம்பரியமற்ற சந்தைகளில் கலந்த தேயிலைக்கு வளர்ந்துவரும் கேள்வி காணப்படுவதனால் மிகச் சிறந்த சமச்சீரான சுவையினை உருவாக்குவதற்காக கலக்கும் நோக்கங்களுக்காக கட்டுப்பாடுகளெதுவுமின்றி சிறப்புத் தேயிலைகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

**இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கும் அநேக வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** உள்ளூர் மீன்பிடிக் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்காக கருவாடு மற்றும் நெத்தலி, மாசிக் கருவாடு, தகரத்திலடைக்கப்பட்ட மீன் மற்றும் மீன் உணவு என்பன மீது உயர்ந்த இறக்குமதி வரிகள் பேணப்பட்ட வேளையில், பாற்பண்ணை கைத்தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு வெண்ணெய்க்கட்டி, யோகட், பாற்பண்ணை உற்பத்திகள் மீது உயர்ந்தளவிலான செஸ் வரிக்கு மேலதிகமாக 2014 வரவு செலவுத்திட்டத்தில் சிறப்புப் பண்டத் தீர்வை விதிக்கப்பட்டது. மேலும், தேங்காய் எண்ணெய் மற்றும் தாவர உள்ளீடுகளின் இறக்குமதி மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட வேளையில் தெங்குக் கைத்தொழிலைப் பலப்படுத்துவதற்காக தேங்காய் எண்ணெய் ஆலைகள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மூன்றாண்டு காலப்பகுதிக்கு நீக்கப்பட்டது. ஊர்திகளின் இறக்குமதியினை ஒழுங்குமுறைப்படுத்தும் பொருட்டு பாவிக்கப்பட்ட ஊர்திகளுக்கான தேய்மான அட்டவணை 2013 நவெம்பரில் திருத்தப்பட்டது. உள்ளூர் படகுத் தயாரிப்பு கைத்தொழில் ஊக்குவிப்பதற்காக, மீன்பிடிப் படகுகளின் இறக்குமதி மீது உயர்ந்த வரியைப் பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்ட வேளையில், மீன்பிடி படகுகளை தயாரிப்பதற்கான வழங்கல்கள் அல்லது உதிரிப்பாகங்களின் இறக்குமதிக்கு பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. மீன்பிடிக் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்காக உறையவைக்கப்பட்ட தூண்டில் இரை, மீன் கொழுக்கிகள், தூண்டில்கள் மற்றும் சுழற்றிகள் போன்ற பொருட்களின் இறக்குமதி அல்லது வழங்கல் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன. உள்நாட்டு வேளாண்மை மற்றும் மீன்பிடிக் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்காக பல உணவுப்பொருட்களின் மீது செஸ் மற்றும் சிறப்புப் பண்டங்களுக்கான தீர்வைகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

**அதிகரித்த உலகளாவிய போட்டித்தன்மையினை எதிர்த்து நிற்பதற்கும் புதிய சந்தைகளை அணுகுவதற்கும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கும் ஏற்றுமதி யாளர்களை இயலச் செய்வதற்காக நிறுவன ரீதியான ஆதரவு வழங்கப்பட்டது.** புடவைகள் மற்றும் ஆடைகள் சந்தைகளுக்குள் நுழைவதனை அதிகரிக்கும் நோக்குடன் கூட்டு ஆடைகள் சங்க அரங்கத்தின் பிரதிநிதிகள் சீனா, யப்பான், ருஷியா, பிரேசில் போன்ற நாடுகளுக்கு அந்நாடுகளின் சந்தைகளை அணுகுவதற்கான முன்னுரிமைகளைப் பெறுவதற்கான சாத்தியங்களைக் கண்டறிவதற்காக விஜயம் செய்தனர். வெளிநாட்டு வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்காக 1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி சபைச் சட்டத்தின் கீழ் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை 26 மதியுரைக் குழுக்களை நிறுவியது. மேலும், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை பிறிக்ஸ் நாடுகள் (பிரேசில், ருஷியா, இந்தியா மற்றும் சீனா) மற்றும் ஆபிரிக்கா, சுதந்திர நாடுகளின் பொதுநலவாயம் மற்றும் துருக்கி போன்ற ஏற்றுமதி செய்யப்படாத ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கு ஏற்றுமதியினை விரிவடையச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. இவ்வாண்டுப் பகுதியில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அமெரிக்கா, ஆசியா, மத்திய கிழக்கு, ஆபிரிக்கா மற்றும் சுதந்திர நாடுகளின் பொதுநலவாய பிராந்தியம் ஆகிய இடங்களில் பல கடல்கடந்த சந்தைப்படுத்தல் ஊக்குவிப்புப்

பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் பல உள்முக வாங்கல் பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை 2013இல் வேளாண்மை, மீன்படி மற்றும் கைத்தொழில் அபிவிருத்திக்காக தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இதன்படி, 'தூய்மையான இலங்கைக் கறுவா' பன்னாட்டுச் சந்தையில் உலகளாவிய வர்த்தக நாமமாக நிறுவப்பட்டதுடன் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற முக்கிய சந்தைகளில் வர்த்தக அடையாளங்களைப் பதிவு செய்யும் வேலைகள் நிறைவடைந்தன. நாமத்தைப் பதிவு செய்வதற்காக உலக புலமைச் சொத்து அலுவலகத்திற்கு ஏற்கனவே விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகாரசபையுடன் சேர்ந்து இலங்கை நீல இரத்தினக்கற்களின் தனிச்சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றதன் மூலம் இத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் தொழிலை மேம்படுத்துவதற்கான ஊக்குவிக்கின்ற பிரச்சாரங்களை மேற்கொண்டது. இலங்கை பன்னாட்டு அடையாளங்களுக்கு உலகத் தரத்திலான இறப்பர் உற்பத்திகளை தயாரித்து வழங்குகின்ற நாடாக இலங்கை தோற்றம் பெற்றிருப்பதனால் தரம் மற்றும் நம்பகத்தன்மையும் அவற்றிற்கீடான முக்கியத்துவத்தினைப் பெறுகின்றன. இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதியாளர்களுக்கு உதவுவதற்காக ஏற்றுமதி அபிவிருத்திச்சபை இலங்கையில் தற்பொழுது கிடைக்காத தரச் சான்றிதழைப் பெறுவதற்காக ஏற்றுமதியாளர்களுக்கு திட்டமொன்றினைத் தொடங்கியது. அதிகரிக்கின்ற போட்டித்தன்மையின் கீழ் உலகளாவிய சந்தையில் இலங்கையின் ஏற்றுமதிப் பங்கு மேம்பட்டு வருவதன் முக்கியத்துவத்தினை அடையாளம் செய்கின்ற விதத்தில், இலங்கை ஏற்றுமதியாளர் சங்கம் "அடுத்த ஐந்தாண்டுகளில் ஏற்றுமதிகள் எங்கிருந்து எங்கே" என்ற தலைப்பிலான அரங்கத்திற்கு வசதியளித்தது. இவ்வரங்கமானது முக்கிய ஏற்றுமதியாளர்கள் அடுத்த ஐந்தாண்டுகளில் தமது இலக்குகளை எய்துவதற்குத் தேவையான உபாயங்கள் பற்றி ஆராய்வதற்கான தளமொன்றினை வழங்கும். இலங்கை கட்டளைகள் நிறுவனம் சார்க் பிராந்தியத்தில் தரங்களை இணங்குவிப்பதற்கான பணியில் தென்னாசிய பிராந்திய தரங்கள் அமைப்புடன் தீவிரமாகச் செயற்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில் கறுவா ஏற்றுமதியில் இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஏற்றுமதித் தரச் சான்றுபடுத்தல் திட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கான பணிப்புரை விடுக்கப்பட்டது. இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் ஆதரவின் கீழ், வெளிநாட்டு வர்த்தகத்தினை மேம்படுத்துவதற்காக பிரித்தானியா, சேர்மனி, அவுத்திரேலியா, நியூசிலாந்து, போலந்து மற்றும் மாலைதீவு உள்ளடங்கலாக முக்கிய பல நாடுகளில் அந்நாடுகளிலுள்ள வியாபாரச் சபைகளினால் ஆய்வரங்குகள், கலந்துரையாடல்கள், கூட்டங்கள், வியாபார அரங்குகள் பலவும் ஒழுங்கு செய்யப்பட்டன.

**2013இல் இலங்கை இதற்கு முன்னர் நாட்டில் ஒரு போதும் நடத்தப்படாத மிகப் பெரும் வியாபார நிகழ்வான பொதுநலவாய வியாபார ஆய்வரங்கினை நடத்தும் சிறப்பினைப் பெற்றது.** "செல்வத்தை உருவாக்குவதிலும் சமூக அபிவிருத்திக்குமான பங்காளர்கள்: பொதுநலவாயம், இந்து சமுத்திரம் மற்றும் சார்க்" என்பதே பொதுநலவாய வியாபார அரங்கத்தின் தொனிப்பொருளாக இருந்தது. பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டத்துடன் இணைந்ததாக நடைபெற்ற பொதுநலவாய வியாபார அரங்கத்தில் உலகம் முழுவதிலுமிருந்து வந்த அரச தலைவர்கள், அமைச்சர்கள், உயர் வியாபாரத் தலைவர்கள் எல்லோரும் கலந்து கொண்டார்கள். இக்கூட்டம் கூட்டுமுயற்சிகளை மேற்கொள்வதற்கான சாத்தியங்களைப் பற்றி கலந்துரையாடவும் வெளிநாட்டு முதலீடுகளுக்கான ஒரு இடமாக இலங்கையை மேம்படுத்தவும் வெளிநாட்டு தூதுக்குழுவினரை உள்நாட்டு வியாபார சமூகத்தினர் சந்திப்பதற்கான மிகப் பெரும் வாய்ப்பினை உருவாக்கியமையினால் இதன் மூலம் இலங்கை பெருமளவு நன்மைகளைப் பெற்றிருக்கிறது. இக்கூட்டங்களின் பெறுபேறு யாதெனில் சுற்றுலா விடுதிகள் மற்றும் கலப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் முதலீடு செய்வதற்காக முக்கிய வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டமையாகும். மேலும், பொதுநலவாய வியாபார அரங்கம் வெளிநாட்டு வியாபாரத் தலைவர்கள் மற்றும் அரச தலைவர்கள் மற்றைய நாடுகளிலிருந்து வருகை தந்த அவர்களின் இணைத்தரப்பினருடன் முதலீட்டு வாய்ப்புக்களைப் பற்றி கலந்துரையாடுவதற்கும் மேம்படுத்துவதற்கும் ஏற்ற தளமொன்றினை அமைத்துக் கொடுத்தது.

**இலங்கை, முன்னுரிமை மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளினூடாக சந்தைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் இருபுடை, பிராந்திய மற்றும் பல்புடைப் பேச்சு வார்த்தைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்தது.** இவ்வாண்டுப் பகுதியில், குறைந்த வியாபாரத் தடைகளையும் திருத்தப்பட்ட வர்த்தக ஒழுங்குவிதிகளையும் அறிமுகப்படுத்துவதனூடாக பன்னாட்டு வர்த்தக முறைமைக்குள் முக்கிய சீர்திருத்தங்களை அடைந்து கொள்ளும் நோக்குடன் உலக வர்த்தக அமைப்புடனான இறுதிச் சுற்று வர்த்தக பேச்சுவார்த்தையாக இருந்த டோகா சுற்று தொடர்பில் குறிப்பிடத்தக்க

முன்னேற்றமெதுவும் அடையப்படவில்லை. எனவே, பரந்தர டோகா சுற்றுவட்ட பேச்சுக்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்களைப் பற்றி தொடர்ந்தும் கலந்துரையாடுவதற்காக உலக வர்த்தக மையத்தின் பாளி அமைச்சரவை மாநாடு 2013 திசெம்பரில் நடத்தப்பட்டது. இது, அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளை உணவுப் பாதுகாப்பினை வழங்குவதற்கு கூடிய தெரிவுகளை அனுமதித்தல் மற்றும் மிகக் குறைந்தளவில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் வர்த்தகத்தினை உத்வேகப்படுத்தல் போன்ற வர்த்தகத்தினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட பரந்தளவு விடயங்கள் தொடர்பில் உடன்படிக்கைகள் கையெழுத்திடப்பட்டதுடன் நிறைவடைந்தது. வர்த்தக வசதிப்படுத்தல் ஏற்றுமதி நாடுகளிலுள்ள கட்டுப்பாடுகள் மற்றும் கையாள்வதற்கு கடினமான நடவடிக்கை முறைகள் என்பனவற்றைக் குறைக்கக்கூடும் என்பதனால் இது சிறந்த சந்தை வசதிகளை அணுகுவதற்கு வசதியளிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன், இதன் மூலம் வர்த்தகக் கொடுக்கல்வாங்கல் செலவு, கொடுக்கல்வாங்கல் நேரம் என்பனவற்றைக் குறைக்கின்ற வேளையில் கொடுக்கல்வாங்கல்களின் தெளிவான தன்மை, வினைத்திறன் மற்றும் வெளிப்படையான தன்மை என்பனவற்றையும் மேம்படுத்துகின்றது. 2016இல் நிறைவு செய்வதற்கு அட்டவணையிடப்பட்டுள்ள தென்னாசிய சுதந்திர வர்த்தகப் பிராந்தியத்தின் வர்த்தகத் தாராளமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிராந்தியங்களிலிருந்தான உற்பத்திகள் மீதான சுங்கத்தீர்வைகள் படிப்படியாக குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை, மற்றைய உறுப்பு நாடுகளிலிருந்தான உற்பத்திகளுக்கு 2014 அளவில் ஆறு சமமான தவணைகளில் 0-5 சதவீத சுங்கத் தீர்வைகளைக் குறைப்பதற்கு இணங்கியுள்ளது. பொருளாதாரத்தின் அளவு மற்றும் பாதிக்கப்படக்கூடிய தன்மை என்பனவற்றைக் கருத்திற்கொண்டு இலங்கை குறைந்த அபிவிருத்தி அல்லாத நாடாக வகைப்படுத்தப்பட்டு கூடியளவு சலுகைகளைப் பெறக்கூடிய நிலையில் இருப்பதுடன் தென்னாசிய சுதந்திர வர்த்தகப் பிராந்தியத்தின் பேச்சுவார்த்தைகளில் காணப்பட்ட அனைத்துத் தீர்வைகளையும் நிறைவேற்றும் நடைமுறைக் காலமும் நீடிக்கப்பட்டது. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை மீது தொடர்ந்து இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில், உறுப்பு நாடுகள் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழான நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தையினை தாய்லாந்தில் 2014 மாச்சில் நிறைவு செய்ய தீர்மாணித்துள்ளது. கலந்துரையாடல்கள், தீர்வைச் சலுகைகள், ஆரம்ப விதிகளில் மேற்கொள்ளப்பட்ட மற்றும் வர்த்தக வசதிகள் மற்றும் பணிகள் வர்த்தகத்திலான முதலீடு என்பன தொடர்பான உடன்படிக்கைக் கட்டமைப்பு மீது கவனத்தினைச் செலுத்தும். மொங்கோலியா மற்றும் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் மற்றைய பங்கேற்கும் அரசுகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிவடைந்திருப்பதனால், மொங்கோலியா 2013இல் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் உறுப்பு நாடாக சேர்க்கப்பட்டுள்ளது.

**இவ்வாண்டுப் பகுதியில், இலங்கையினால் பெருமளவிற்குப் பயன்படுத்தப்பட்ட வர்த்தக உடன்படிக்கைகளான இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் பாகிஸ்தான் - இலங்கை வர்த்தக உடன்படிக்கை என்பனவற்றினூடாக இருபுடை வர்த்தகத்தினை மேலும் ஆழமாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன.** இலங்கையும் இந்தியாவும் இருபுடை வர்த்தகத்தினை மேலும் மேம்படுத்துவதற்கான வழிவகைகளையும் இரு நாடுகளுக்குமிடையிலான முதலீடுகளையும் கண்டறிவதற்காக இலங்கையும் - இந்தியாவும் ஏற்படுத்திய இந்திய - இலங்கை கூட்டு செயலணிக்குழுவின் முதலாவது கூட்டம் 2013 யூனில் நடைபெற்றது. இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் ஆடை ஏற்றுமதி அனுமதிப்பங்கின் கீழான மொத்த எட்டு மில்லியன் துண்டுகளில் எஞ்சியுள்ள ஐந்து மில்லியன் துண்டுகள் மீதான துணி மூலங்களுடன் தொடர்பான நிபந்தனைகளை இந்தியா அகற்றியிருப்பதன் மூலம் தீர்வையற்ற உடன்படிக்கையின் கீழ் மொத்த அனுமதிப்பங்கு நிபந்தனையற்றதாக்கப்பட்டது. பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ், வெளிநின்ற பல விடயங்களையும் கலந்துரையாடுவதற்காக பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மீதான ஐந்தாவது தொழில்நுட்பக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டது. இதற்கமைய, இலங்கை நுளம்புச்சுருள், போத்தல்களை குளிர்விக்கும் எந்திரங்கள், மசகுத் தேங்காய் எண்ணெய், வெற்றிலை, மூலிகை ஒப்பனை உற்பத்திகள் போன்ற ஐந்து உற்பத்திகளுக்கான சந்தைகளைப் பெறக்கூடியதாக இருந்தது. சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றினைச் செய்து கொள்வதற்கான சாத்தியங்கள் பற்றி இலங்கை ஆராய்ந்து வருகின்றது. சீனாவிற்கும் இலங்கைக்குமிடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஆற்றல் வாய்ந்த தன்மை பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான சாத்தியவள ஆய்வுகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கை வியாபார அடையாளமிடப்பட்ட புடவைகள் மற்றும் ஆடைகள், தேயிலை, இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணம் போன்ற உயர்தர உற்பத்திகளை சிறிய பெறுமதிகூடிய சந்தைகளுக்கு நிரம்பல்


செய்வதற்கு உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் சீனாவிற்கான இலங்கையின் ஏற்றுமதிகளை உத்வேகப்படுத்த முடியும். இது, சீனாவுடனான எதிர்மறையான வர்த்தக நிலுவையினைக் குறைக்க உதவும். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013இல் வர்த்தக உடன்படிக்கைகளின் ஒட்டுமொத்தப் பயன்பாட்டில் ஒரு அதிகரிப்பு அவதானிக்கப்பட்டிருக்கிறது.

## 5.3 பொருட்களிலான வர்த்தகம், வர்த்தக நிலுவை, வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகத்தின் போக்கு

### 5.3.1 ஏற்றுமதிச் செயலாற்றம்

**உலகளாவிய பொருளாதாரத்தில் மிதமான வீச்சுக்கிடையிலும் இலங்கையின் ஏற்றுமதிகள் 2013இல் மீட்சியடைந்தன.** ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 15 மாத சுருக்கத்தினைத் தொடர்ந்து 2013 யூனிலிருந்து நேர்க்கணிய வளர்ச்சியைப் பதிவு செய்தன. ஏற்றுமதி வருவாய்கள் 2012இல் ஐ.அ.டொலர் 9,774 மில்லியனுக்கு 7.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு மாறாக 2013இல் ஐ.அ.டொலர் 10,394 மில்லியனுக்கு 6.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இலங்கையின் பாரம்பரிய சந்தைகளான குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றின் பொருளாதார மீட்சியுடன் 2013 ஏற்றுமதிகளில் வரவேற்கத்தக்க வளர்ச்சியை பதிவுசெய்தது. உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையில் ஏற்பட்ட விரிவாக்கம், சாதகமான முதலீட்டுச் சூழல் மற்றும் நிறுவன ரீதியான ஆதரவுடன் கூடிய தூண்டுதலளிக்கும் வெளிநாட்டு வர்த்தக கொள்கைகள் என்பன 2013இல் ஏற்றுமதிகளின் வளர்ச்சிக்குப் பங்களித்தன.

வரைபடம் 5.3 பண்டங்களின்படி ஏற்றுமதிகள் - 2013




**ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வளர்ச்சிக்கான பாரிய பங்களிப்பு கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்ததுடன் இது, மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ நான்கில் மூன்று பங்கிற்கு வகைகூறியது.** கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2013இல் ஐ.அ.டொலர் 7,749 மில்லியனுக்கு 5.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2013இல் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 43.4 சதவீதத்திற்குப் பங்களித்த புடவை மற்றும் ஆடைகளின் சிறந்த செயலாற்றமே முக்கிய காரணமாகும். புடவை மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2013இல் ஐ.அ.டொலர் 4.5 பில்லியனுக்கு 13 சதவீதத்தினால் அதிகரித்து ஆடைக் கைத்தொழிலினால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ஐ.அ.டொலர் 4 பில்லியனை விஞ்சிக் காணப்பட்டது. முக்கிய ஏற்றுமதி நாடுகளான ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகள் 2013இல் முறையே 6.7 சதவீதம் மற்றும் 21 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்து அப்பொருளாதாரங்களின் மீட்சியிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொண்டது. பன்முகப்படுத்தப்பட்ட சந்தை, நிபுணத்துவ அறிவின் கையகப்படுத்தல், நிலைக்குத்தான மற்றும் பின்புற ஒருங்கிணைப்புக்கள் மற்றும் பெறுமதிச் சங்கிலியின் உயர் பெறுமதியில் காணப்பட்ட நடவடிக்கைகள் மீதான பெருமளவு வலியுறுத்தல்கள் என்பன புடவை மற்றும் ஆடைக் கைத்தொழிலின் வீரியம் மிக்க செயலாற்றத்திற்குப் பங்களித்தன. பெறுமதிகூட்டலில் காணப்பட்ட அதிகரிப்பு 2013இல் புடவைகள் மற்றும் புடவைப்பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியில் பிரதிபலிக்கப்பட்டவாறு இறக்குமதியின் மீது கைத்தொழில் தங்கியிருப்பதனைக் குறைத்தது. இதற்கமைய, முழு ஆடைக் கைத்தொழிலுக்குமான இறக்குமதியில் தங்கியிருக்கும் சராசரி விகிதம் 2012இன் 57 சதவீதத்திலிருந்து 2013இல் 45 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**2013இல் ஏனைய கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வேறுபட்ட செயலாற்றத்தினைப் பதிவு செய்தன.** 2013இல் இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 888 மில்லியனுக்கு 3.3 சதவீதத்தினால் அதிகரித்து கைத்தொழில் ஏற்றுமதிகளின் வளர்ச்சிக்குப் பங்களித்த இரண்டாவது பெரிய பங்களிப்பாளராக இதனை மாற்றியது. இயற்கை இறப்பர் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் பெறுபேறாக அறுவைச் சிகிச்சைக்கான மற்றும் ஏனைய தேவைக்கான கையுறைகள் மற்றும் டயர்களின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் ஐக்கிய

**அட்டவணை 5.2** ஏற்றுமதிகளின் பகுப்பாய்வு

| வகை | 2012 பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2012 பங்கு % | 2013 (அ) பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2013 (அ) பங்கு % | பெறுமதியில் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்காண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **2,331.5** | **23.9** | **2,581.1** | **24.8** | **249.6** | **10.7** | **40.2** |
| தேயிலை | 1,411.9 | 14.4 | 1,542.2 | 14.8 | 130.3 | 9.2 | 21.0 |
| இறப்பர் | 125.1 | 1.3 | 71.3 | 0.7 | -53.8 | -43.0 | -8.7 |
| தெங்கு | 208.9 | 2.1 | 204.6 | 2.0 | -4.3 | -2.0 | -0.7 |
| வாசனைப் பொருட்கள் | 256.1 | 2.6 | 355.4 | 3.4 | 99.3 | 38.8 | 16.0 |
| மரக்கறிகள் | 13.3 | 0.1 | 24.9 | 0.2 | 11.6 | 86.8 | 1.9 |
| உற்பத்தியாக்கப்படாத புகையிலை | 42.2 | 0.4 | 47.6 | 0.5 | 5.4 | 12.9 | 0.9 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 76.0 | 0.8 | 101.3 | 1.0 | 25.3 | 33.3 | 4.1 |
| கடல் உணவுகள் | 198.0 | 2.0 | 233.7 | 2.2 | 35.7 | 18.1 | 5.8 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **7,371.2** | **75.4** | **7,749.4** | **74.6** | **378.3** | **5.1** | **60.9** |
| புடவைகளும் ஆடைகளும் | 3,991.1 | 40.8 | 4,508.3 | 43.4 | 517.2 | 13.0 | 83.3 |
| இறப்பர் உற்பத்திகள் | 859.4 | 8.8 | 887.8 | 8.5 | 28.4 | 3.3 | 4.6 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 463.0 | 4.7 | 427.7 | 4.1 | -35.2 | -7.6 | -5.7 |
| இரத்தினம், வைரம் மற்றும் ஆபரணங்கள் | 558.9 | 5.7 | 445.5 | 4.3 | -113.4 | -20.3 | -18.3 |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 284.3 | 2.9 | 235.2 | 2.3 | -49.1 | -17.3 | -7.9 |
| பொறி மற்றும் இயந்திர துணைக்கருவிகள் | 297.5 | 3.0 | 312.3 | 3.0 | 14.8 | 5.0 | 2.4 |
| அச்சு கைத்தொழில் உற்பத்திகள் | 41.8 | 0.4 | 36.3 | 0.3 | -5.5 | -13.1 | -0.9 |
| போக்குவரத்துக் கருவிகள் | 164.9 | 1.7 | 146.3 | 1.4 | -18.6 | -11.3 | -3.0 |
| தோல், பயணப்பொருட்களும் காலணியும் | 55.4 | 0.6 | 76.8 | 0.7 | 21.5 | 38.7 | 3.5 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 35.8 | 0.4 | 40.4 | 0.4 | 4.6 | 13.0 | 0.7 |
| ஏனைய கைத்தொழில்கள் உற்பத்திகள் | 619.2 | 6.3 | 632.7 | 6.1 | 13.5 | 2.2 | 2.2 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **61.3** | **0.6** | **51.6** | **0.5** | **-9.7** | **-15.9** | **-1.6** |
| **பாகுபடுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **9.6** | **0.1** | **12.2** | **0.1** | **2.6** | **26.6** | **0.4** |
| **மொத்த ஏற்றுமதிகள் (ஆ) (இ)** | **9,773.5** | **100.0** | **10,394.3** | **100.0** | **620.7** | **6.4** | **100.0** |
| **ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் (ஈ)** | **127.60** | | **129.11** | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) சீராக்கப்பட்டவை
(இ) மீள் ஏற்றுமதிகள் தவிர்ந்த
(ஈ) ரூபா/ஐ.அ.டொலர் செலவாணி வீதம்

மூலங்கள்: இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கற்கள் ஆபரண அதிகார சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

அமெரிக்கா மற்றும் ஐரோப்பா போன்ற முன்னேற்றம்கண்ட பொருளாதாரங்களிலிருந்தான அதிகரித்த வெளிநாட்டுக் கேள்வி என்பன இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தன. 2013இல் தோல் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 77 மில்லியனுக்கு 38.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு காலணிகளின் ஏற்றுமதிகள் இருமடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் கைத்தொழில் வர்த்தக அமைச்சு என்பனவற்றினால் தொடர்ச்சியாக வழங்கப்படும் உதவிகளுக்குப் புறம்பாக, தோல் பதனிடல் எந்திரத்தினைப் பெறுவதற்கு ஏற்றவிதத்தில் தீர்வையற்ற இறக்குமதிகளை அனுமதித்ததன் மூலம் அரசாங்கம் இத்தொழிலுக்கு ஆதரவளித்தது. மின்மாற்றிகள், மின்னோட்டமானிகள், மின்சேமிப்பிகள், நிறுவை எந்திரங்கள் மற்றும் ஏனைய வீட்டுச் சாதனங்கள் உள்ளடங்கலாக பொறிகள் மற்றும் எந்திர சாதனங்களின் ஏற்றுமதிகள் 2013இல் அதிகரித்தன. எனினும், 2013இல் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 446 மில்லியனுக்கு 20.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு உலகளாவிய கேள்வி வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். பன்னாட்டுச் சந்தைகளில் தங்க விலைகளிலான கடுமையான வீழ்ச்சியும் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பங்களித்தது. பிராந்திய துறைமுகங்களிலிருந்தான உயர்வடைந்துவரும் போட்டி மற்றும் பன்னாட்டு நீர்க்கல எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் விளைவாக பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி

வருவாய்கள் ஐ.அ.டொலர் 428 மில்லியனுக்கு 7.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. உணவு, குடிபானம் மற்றும் புகையிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 235 மில்லியனுக்கு 17.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு முக்கிய வர்த்தகப்படுத்தல் பங்காளரினால் கோதுமை மாவின் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் விளைவாக கோதுமை மாவின் ஏற்றுமதி குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். இவ்வாண்டுப் பகுதியில் பயணப்படகுகள் மற்றும் ஏனைய மிதக்கும் அமைப்புக்களின் ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த போதும் 2013இல் போக்குவரத்துச் சாதனங்களின் ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 146 மில்லியனுக்கு 11.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு ஈருருளிகள் மற்றும் உந்து ஊர்திகள் போன்ற வீதி ஊர்திகளின் ஏற்றுமதி குறைவடைந்தமையே காரணமாகும்.

**மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ நான்கிலொரு பங்கிற்கு வகைகூறும் வேளாண்மை ஏற்றுமதிகள் 2013இன் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட ஒட்டு மொத்த அதிகரிப்பில் ஏறத்தாழ 40 சதவீதத்திற்கு பங்களித்தன.** 2013இல் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், ஆண்டிற்காண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 2,581 மில்லியனுக்கு 10.7 சதவீதத்தினால் அதிகரித்தன. தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் என்றுமில்லாத உயர்ந்த ஆண்டு வருவாயான ஐ.அ.டொலர் 1,542 மில்லியனுக்கு 9.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு சிலோன் தேயிலையின் மிக உயர்தரம் மற்றும் மரபுவழித் தேயிலைக்கான பன்னாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட உயர்வு என்பனவற்றின் காரணமாக இத்தேயிலைக்கு கிடைத்த உயர் விலைகளே முக்கிய காரணமாகும். தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை 2012இன் கி.கிறாமொன்றிற்கான ஐ.அ.டொலர் 4.41 இலிருந்து 2013இல் கி.கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 4.82 இற்கு 9.3 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், தேயிலையின் ஏற்றுமதி அளவு 2012இனைப் போன்றே 2013இலும் 320 மில்லியன் கி.கிறாம்களாகவே காணப்பட்டது. மூலப்பொருள் வடிவிலான இறப்பர் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2013இல் 43 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பெறுமதிகூட்டப்பட்ட இறப்பர் உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்காக உள்நாட்டுச் சந்தையில் இறப்பரின் பயன்பாடு அதிகரித்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். எனினும், முக்கிய இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளில் காணப்பட்ட உயர்ந்த உற்பத்தி ஆண்டு முழுவதும் இறப்பர் விலைகளின் மீது கீழ் நோக்கிய அழுத்தத்தினைத் தோற்றுவித்தது. இறப்பரின் சராசரி ஏற்றுமதி விலை 2012இன் கி.கிறாமொன்றிற்கான ஐ.அ.டொலர் 3.35 இலிருந்து 2013இல் கி.கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 3.02 இற்கு 9.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தெங்கு உள்ளீட்டு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 86 மில்லியனுக்கு 7.6 சதவீதத்தினால் அதிகரித்த போதும் கயிறு, தேங்காய்ச் சிரட்டை போன்ற உள்ளீடு அல்லாத உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமையினால் தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் 2013இல் ஐ.அ.டொலர் 205 மில்லியனுக்கு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.


**வாசனைத் திரவியங்கள், காய்கறிகள், தயாரிக்கப்படாத புகையிலை, சிறுவேளாண்மை உற்பத்திகள் மற்றும் கடலுணவு போன்ற ஏனைய வேளாண்மை உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2013இல் கணிசமாக அதிகரித்து வேளாண்மை ஏற்றுமதிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பங்களித்தன.** வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2013இல் ஐ.அ.டொலர் 355 மில்லியனுக்கு 38.8 சதவீதத்தினால் அதிகரித்தன. இதற்கு, மிளகிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 128 மில்லியனுக்கு 82.9 சதவீதத்தினால் அதிகரித்தமையும் கராம்பிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 50 மில்லியனுக்கு 169.4 சதவீதத்தினால் அதிகரித்தமையுமே முக்கிய காரணமாகும். சாதகமான விலைகளின் காரணமாக நடுகைகள் அதிகரித்தமை, கமநகும நிகழ்ச்சித்திட்டத்தினூடாக வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்கள் மற்றும் ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மேம்பட்ட விரிவாக்கல் பணிகள் என்பன இவ்வாண்டுப் பகுதியில் வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்குப் பங்களித்தன. அதேவேளை, தயாரிக்கப்படாத புகையிலையின் ஏற்றுமதிகள் மற்றும் சிறுவேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2013இல் முறையே 12.9 சதவீதத்தினாலும் 33.3 சதவீதத்தினாலும் அதிகரித்தமைக்குச் சாதகமான வானிலை நிலைமைகளே முக்கிய காரணமாகும். இவ்வாண்டுப் பகுதியில் கடல் உணவிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 234 மில்லியனுக்கு 18.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உடன் மீன், பதனிடப்பட்ட மீன், உறைய வைக்கப்பட்ட மீன் அதேபோன்று இறால் நண்டு வகைகளிலிருந்தான அதிகரித்த வருவாய்களே காரணமாகும்.

### 5.3.2 இறக்குமதிச் செயலாற்றம்

**ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2012 ஏப்பிறலிலிருந்து தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்த இறக்குமதிகள் மீதான செலவினம் 2013இலும் தொடர்ச்சியாக சுருக்கமடைந்தது.**

2013இல் இறக்குமதிகள் மீதான செலவினம் முன்னைய ஆண்டிலிருந்து ஐ.அ.டொலர் 18,003 மில்லியனுக்கு 6.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, 2012இல் இறக்குமதிகளைச் சிக்கனப்படுத்துவதற்காகப் பின்பற்றப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தினையும் அதேபோன்று எரிபொருள் இறக்குமதிகள் மீதான குறைந்த செலவினம் பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட குறைவடைந்த பண்ட விலைகளையும் பிரதிபலித்தது. நுகர்வுப் பொருட்கள் தவிர்ந்த இறக்குமதிகளின் அனைத்து முக்கிய வகைகளும் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. உலகம் முழுவதிலுமுள்ள முக்கிய பொருளாதாரங்களில் காணப்பட்ட குறைந்த மீட்சி பெற்றோலிய விலைகள் உட்பட பன்னாட்டு பண்ட விலைகளை மிதமாக்கி இறக்குமதிச் செலவினத்தின் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. 2013இல் எரிபொருள் அல்லா இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 13,695 மில்லியனுக்கு 3.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**வரைபடம் 5.4 பண்டங்களின்படி இறக்குமதிகள்**




ஒட்டுமொத்த இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான பாரிய பங்களிப்பு, எரிபொருள், புடவை மற்றும் புடவைப் பெருட்கள், வளமாக்கி மற்றும் வைரங்கள் மற்றும் அருங்கற்கள் என்பனவற்றின் மீது ஏற்பட்ட குறைந்த செலவினத்தின் காரணமாக இடைநிலைப் பொருட்கள் மீதான

**அட்டவணை 5.3 இறக்குமதிகளின் பகுப்பாய்வு**

| வகை | 2012 (அ) பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2012 (அ) பங்கு % | 2013 (ஆ) பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2013 (ஆ) பங்கு % | பெறுமதியில் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்காண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | **2,995.2** | **15.6** | **3,182.5** | **17.7** | **187.3** | **6.3** | **-15.8** |
| உணவும் குடிபானங்கள் | 1,304.4 | 6.8 | 1,368.1 | 7.6 | 63.7 | 4.9 | -5.4 |
| அரிசி | 24.4 | 0.1 | 17.9 | 0.1 | -6.5 | -26.6 | 0.5 |
| சீனி மற்றும் சீனி இனிப்பு வகை | 346.7 | 1.8 | 290.6 | 1.6 | -56.0 | -16.2 | 4.7 |
| பால் உற்பத்திகள் | 307.3 | 1.6 | 291.0 | 1.6 | -16.4 | -5.3 | 1.4 |
| பருப்பு வகை | 69.0 | 0.4 | 104.1 | 0.6 | 35.1 | 51.0 | -3.0 |
| ஏனையவை | 557.0 | 2.9 | 664.4 | 3.7 | 107.4 | 19.3 | -9.0 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 1,690.8 | 8.8 | 1,814.4 | 10.1 | 123.6 | 7.3 | -10.4 |
| வாகனங்கள் | 495.1 | 2.6 | 582.2 | 3.2 | 87.1 | 17.6 | -7.3 |
| மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 372.2 | 1.9 | 378.3 | 2.1 | 6.1 | 1.6 | -0.5 |
| வீட்டுப் பாவனைப் பொருட்கள் | 218.5 | 1.1 | 192.2 | 1.1 | -26.2 | -12.0 | 2.2 |
| புடவைகள் மற்றும் அதற்கான துணைப் பொருட்கள் | 174.5 | 0.9 | 201.7 | 1.1 | 27.2 | 15.6 | -2.3 |
| ஏனையவை | 430.5 | 2.2 | 460.0 | 2.6 | 29.5 | 6.9 | -2.5 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **11,577.6** | **60.3** | **10,553.7** | **58.6** | **-1,023.8** | **-8.8** | **86.2** |
| எரிபொருள் | 5,044.6 | 26.3 | 4,308.2 | 23.9 | -736.4 | -14.6 | 62.0 |
| புடவைகள் | 2,266.4 | 11.8 | 2,045.8 | 11.4 | -220.5 | -9.7 | 18.6 |
| வைரங்கள் மற்றும் அருமையான உலோகங்கள் | 587.7 | 3.1 | 482.9 | 2.7 | -104.9 | -17.8 | 8.8 |
| இரசாயன உற்பத்திகள் | 669.7 | 3.5 | 734.3 | 4.1 | 64.6 | 9.6 | -5.4 |
| கோதுமை மற்றும் சோளம் | 363.8 | 1.9 | 323.2 | 1.8 | -40.6 | -11.2 | 3.4 |
| வளமாக்கி | 311.0 | 1.6 | 238.7 | 1.3 | -72.3 | -23.3 | 6.1 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 2,334.4 | 12.2 | 2,420.8 | 13.4 | 86.4 | 3.7 | -7.3 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4,589.8** | **23.9** | **4,252.7** | **23.6** | **-337.1** | **-7.3** | **28.4** |
| கட்டடப் பொருட்கள் | 1,237.4 | 6.4 | 1,357.2 | 7.5 | 119.8 | 9.7 | -10.1 |
| போக்குவரத்துக் கருவிகள் | 991.9 | 5.2 | 667.8 | 3.7 | -324.1 | -32.7 | 27.3 |
| பொறியும் கருவியும் | 2,356.0 | 12.3 | 2,221.9 | 12.3 | -134.1 | -5.7 | 11.3 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 4.5 | 0.0 | 5.8 | 0.0 | 1.3 | 28.5 | -0.1 |
| **பாகுபடுத்தப்படாத இறக்குமதிகள்** | **27.7** | **0.1** | **13.9** | **0.1** | **-13.8** | **-50.0** | **1.2** |
| மொத்த இறக்குமதிகள் (இ) (ஈ) | 19,190.2 | 100.0 | 18,002.8 | 100.0 | -1,187.4 | -6.2 | 100.0 |
| ஆண்டுச்சராசரி செலாவணி வீதம் (உ) | 127.60 | | 129.11 | | | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) சீராக்கப்பட்டது
(ஈ) மீள் இறக்குமதிகள் நீங்கலாக
(உ) ரூபா/ ஐ.அ.டொ. செலவாணி வீதம்

மூலங்கள்: இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை
வரையறுக்கப்பட்ட செரண்டிப் (தனியார்) மா ஆலை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.4 முக்கிய இறக்குமதிகளின் அளவு

'000 மெ.தொ.

| விடயம் | 2009 | 2010 | 2011 | 2012 | 2013(அ) |
|---|---|---|---|---|---|
| **அரிசி** | **52** | **126** | **28** | **36** | **23** |
| 1ஆம் காலாண்டு | 3 | 121 | 8 | 15 | 9 |
| 2ஆம் காலாண்டு | 3 | 2 | 2 | 7 | 6 |
| 3ஆம் காலாண்டு | 2 | 2 | 9 | 10 | 4 |
| 4ஆம் காலாண்டு | 44 | 1 | 9 | 4 | 4 |
| **கோதுமை (ஆ)** | **1,026** | **1,051** | **1,242** | **1,084** | **895** |
| 1ஆம் காலாண்டு | 288 | 352 | 322 | 353 | 197 |
| 2ஆம் காலாண்டு | 229 | 171 | 455 | 235 | 326 |
| 3ஆம் காலாண்டு | 220 | 292 | 254 | 291 | 170 |
| 4ஆம் காலாண்டு | 289 | 236 | 211 | 205 | 201 |
| **சீனி** | **466** | **548** | **606** | **569** | **548** |
| 1ஆம் காலாண்டு | 123 | 145 | 163 | 158 | 126 |
| 2ஆம் காலாண்டு | 110 | 145 | 170 | 135 | 175 |
| 3ஆம் காலாண்டு | 142 | 154 | 124 | 114 | 118 |
| 4ஆம் காலாண்டு | 92 | 104 | 149 | 162 | 129 |
| **மசகெண்ணெய் (ஆ)** | **2,066** | **1,819** | **2,070** | **1,486** | **1,743** |
| 1ஆம் காலாண்டு | 559 | 332 | 557 | 558 | 482 |
| 2ஆம் காலாண்டு | 417 | 541 | 555 | 413 | 545 |
| 3ஆம் காலாண்டு | 416 | 541 | 410 | 137 | 315 |
| 4ஆம் காலாண்டு | 673 | 405 | 547 | 379 | 401 |
| **சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம்(ஆ)** | **2,162** | **2,882** | **3,501** | **3,961** | **3,201** |
| 1ஆம் காலாண்டு | 411 | 789 | 702 | 1,036 | 673 |
| 2ஆம் காலாண்டு | 607 | 881 | 807 | 903 | 756 |
| 3ஆம் காலாண்டு | 567 | 507 | 1,022 | 997 | 791 |
| 4ஆம் காலாண்டு | 577 | 705 | 970 | 1,025 | 981 |
| **வளமாக்கி** | **462** | **649** | **801** | **640** | **600** |
| 1ஆம் காலாண்டு | 46 | 88 | 131 | 129 | 61 |
| 2ஆம் காலாண்டு | 83 | 238 | 207 | 176 | 139 |
| 3ஆம் காலாண்டு | 110 | 165 | 266 | 226 | 187 |
| 4ஆம் காலாண்டு | 223 | 158 | 197 | 108 | 214 |

(அ) தற்காலிகமானது
(ஆ) சீராக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி பி.எல்.சி
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை
வரையறுக்கப்பட்ட செரண்டிப் (தனியார்) மா ஆலை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

**செலவினத்தில் ஏற்பட்ட குறைப்பிலிருந்தே கிடைத்தது.** பெறுமதி நியதிகளில், மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 59 சதவீதத்திற்கு வகைகூறும் இடைநிலைப்பொருட்கள் மீதான செலவினம் 2013இல் ஐ.அ.டொலர் 10,554 மில்லியனுக்கு 8.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மொத்த இறக்குமதிச் செலவினத்தில் ஏறத்தாழ நான்கிலொரு பங்கிற்கு வகைகூறும் எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 4,308 மில்லியனுக்கு 14.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு இவ்வாண்டுப் பகுதியில் மின்வலு உருவாக்கத்திற்காக வெப்பவலு குறைந்தளவிற்குப் பயன்படுத்தப்பட்டமையும் பன்னாட்டுச் சந்தையில் பெற்றோலியத்தின் விலைகள் வீழ்ச்சியடைந்தமையும் முக்கிய காரணங்களாகும். மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலை 2012இன் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 114.00 இலிருந்து 2013இல் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 109.84 இற்கு வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக புடவை மற்றும் புடவைப் பொருட்களின் இறக்குமதிகள் 2013இல் ஐ.அ.டொலர் 2,046 மில்லியனுக்கு 9.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, ஆடைக் கைத்தொழிலின் பெறுமதிகூட்டலை உயர்த்தியது. வளமாக்கி இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 239 மில்லியனுக்கு 23.3 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. வளமாக்கி இறக்குமதிகளின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு, ஏற்கனவேயிருந்த இருப்புக்கள் பயன்படுத்தப்பட்டமையும் மிகையான வளமாக்கிப் பாவனையைக் குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்ட வேளையில், வேளாண்மை உற்பத்தியில் சேதன வளமாக்கிப் பயன்பாடு ஊக்குவிக்கப்பட்டமையும் ஓரளவிற்குக் காரணங்களாக அமைந்தன. அதேவேளை, வைரங்கள், அருங்கற்கள் அதேபோன்று உலோகங்களின் மீதான இறக்குமதிச் செலவினம், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் 17.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், 2013இல் வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்களுள் முக்கிய துணை வகையாக இருக்கும் தங்கத்தின் இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 200 மில்லியனுக்கு 17.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஆண்டின் முதலரைப் பகுதியில் தங்க இறக்குமதிகள் 47.1 சதவீதத்தினால் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். தங்கத்தின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்காக 2013 யூனில் 5 சதவீதம் கொண்டதொரு சுங்கத் தீர்வையும் சுங்கத் தீர்வை மீதான 100 சதவீத மேலதிகக் கட்டணமும் தங்கத்தின் இறக்குமதி மீது விதிக்கப்பட்டன. எனினும், மேலதிக் கட்டணம் 2013 நவெம்பரிலிருந்து நீக்கப்பட்டதுடன் சுங்கத் தீர்வை 7.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. இரசாயன உற்பத்திகள், பிளாத்திக்கு, தாள் மற்றும் தாள் அட்டைகள், வேளாண்மை உள்ளீடுகள், உணவுத் தயாரிப்பு மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் போன்ற இடைநிலைப் பொருட்களின் ஏனைய வகைகள் மீதான இறக்குமதிச் செலவினம் இவ்வாண்டுப் பகுதியில் அதிகரித்தது.

2013இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 7.3 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 4,253 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்து **போக்குவரத்துச் சாதனங்கள், எந்திரங்கள் மற்றும் சாதனங்களின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.** இறக்குமதிகளை இறுக்கமாக்குவதற்காக 2012இல் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில், போக்குவரத்துச் சாதனங்கள் மீதான செலவினம்

2013இல் ஐ.அ.டொலர் 688 மில்லியனுக்கு 32.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கப்பல்கள், படகுகள் மற்றும் வானூர்திகள் நீங்கலாக போக்குவரத்துச் சாதனங்களின் அனைத்து வகைகள் மீதுமான செலவினம் இவ்வாண்டுப் பகுதியில் வீழ்ச்சியடைந்தது. பொறியியல் சாதனம், இலத்திரனியல் சாதனம், தொலைத் தொடர்பூட்டல் கருவிகள், அலுவலக எந்திரங்கள், மருத்துவ மற்றும் ஆய்வுகூடச் சாதனங்கள் மற்றும் எந்திரங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய பொறிகள் மற்றும் சாதனங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2013இல் ஐ.அ.டொலர் 2,222 மில்லியனுக்கு 5.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், சிமெந்து, இரும்பு மற்றும் உருக்கு, அலுமினியப்பொருட்கள் மற்றும் கனிமப்பொருட்களை உள்ளடக்கிய கட்டடப்பொருட்களின் இறக்குமதி, அரச மற்றும் தனியார் துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பாரிய உட்கட்டுமான அபிவிருத்திச் செயற்றிட்டங்களிலிருந்து தோன்றுகின்ற அதிகரித்த கேள்வியை ஈடுசெய்யும் விதத்தில் ஐ.அ.டொலர் 1,357 மில்லியனுக்கு 9.7 சதவீதத்தினால் அதிகரித்தது.

**நுகர்வுப்பொருட்களின் இறக்குமதியினைப் பொறுத்தவரையில் 2013இல் உணவு மற்றும் குடிபானம் அதேபோன்று உணவல்லா விடயங்கள் மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.** மொத்த இறக்குமதியில் ஏறத்தாழ 18 சதவீதத்திற்கு வகைகூறும் நுகர்வுப்பொருட்கள் மீதான ஒட்டுமொத்த இறக்குமதிச் செலவினம் 2012இன் ஐ.அ.டொலர் 2,995 மில்லியனிலிருந்து 2013இல் ஐ.அ.டொலர் 3,182 மில்லியனுக்கு 6.3 சதவீதத்தினால் அதிகரித்தது. உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 4.9 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 1,368 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு காய்கறிகள், கடல் உணவு, அதேபோன்று எண்ணெய் மற்றும் கொழுப்பு என்பனவற்றின் இறக்குமதி மீதான உயர்ந்த செலவினமே காரணமாகும். எனினும், சீனி, இனிப்புப் பண்டங்களின் உற்பத்தி, பண்ணை உற்பத்திகள், குடிபானம் மற்றும் தானிய உணவுகள் மற்றும் அரைக்கும் ஆலை கைத்தொழில் உற்பத்திகள் என்பனவற்றின் இறக்குமதி மீதான செலவினம் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. உள்நாட்டு பால் உற்பத்தியினை ஊக்குவிக்கும் பொருட்டு வெண்ணெய்க்கட்டி, யோக்கட் மற்றும் பண்ணை உற்பத்திகளின் இறக்குமதி மீது விடுக்கப்பட்ட செஸ் தீர்வையின் அதிகரிப்பு பண்ணை உற்பத்திகளின் மீதான இறக்குமதிச் செலவினத்தினை 5.3 சதவீதத்தினால் குறைப்பதற்குப் பங்களித்தது. அதேவேளை உணவல்லா நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 1,814 மில்லியனுக்கு 7.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உந்து ஊர்திகளின் இறக்குமதி 17.6 சதவீதத்தினால் அதிகரித்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். மருத்துவ மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள், ஆடைகள் மற்றும் துணை உற்பத்திகள், தொலைத் தொடர்பூட்டல் கருவிகள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் போன்ற உணவல்லா பொருட்களின் ஏனைய வகைகளின் இறக்குமதிகளும் இவ்வாண்டுப் பகுதியில் அதிகரித்தன.

### 5.3.3 வர்த்தக நிலுவை

**ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றுடன் 2013இல் வர்த்தக பற்றாக்குறை பெருமளவிற்குச் சுருக்கமடைந்தது.** இதற்கமைய, வர்த்தகப் பற்றாக்குறை 2012இன் ஐ.அ.டொலர் 9,417 மில்லியனிலிருந்து 2013இல் ஐ.அ.டொலர் 7,609 மில்லியனுக்கு 19.2 சதவீதத்தினால் குறுக்கமடைந்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வர்த்தக நிலுவையின் பற்றாக்குறை 2012இன் 15.9 சதவீதத்திலிருந்து 2013இல் 11.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

### 5.3.4 வர்த்தக மாற்று விகிதம்

**இறக்குமதி விலைகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பு மற்றும் ஏற்றுமதி விலைகளில் காணப்பட்ட சிறிதளவு அதிகரிப்பு என்பன 2013இல் வர்த்தக மாற்று விகிதத்தில் முன்னேற்றமொன்றினைத் தோற்றுவித்தது.** ஏற்றுமதி விலைச்சுட்டெண் 103.5 சுட்டெண் புள்ளிகளுக்கு 0.4 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்த வேளையில் இறக்குமதி விலைச் சுட்டெண் 108.4 சுட்டெண் புள்ளிகளுக்கு 5.9 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. இதற்கமைய, வர்த்தக மாற்று விகிதச் சுட்டெண் 2012இன் 89.5 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2013இல் 95.5 சுட்டெண் புள்ளிகளுக்கு 6.7 சதவீதத்தினால் மேம்பட்டது.

**பன்னாட்டுச் சந்தைகளில் முக்கிய பண்டங்களின் விலைக்குறைப்பு குறிப்பிடத்தக்கதாக இருந்தபோதும் பொதுவான விலைச்சுட்டெண் சிறிதளவில் அதிகரித்தது.** மொத்த ஏற்றுமதிகளில் 58 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்கு வகைகூறும் இரண்டு முக்கிய விடயங்களான புடவைகள் மற்றும் ஆடைகள் மற்றும் தேயிலையின் சராசரி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு ஏற்றுமதி விலைச்சுட்டெண்ணினை உயர்வடையச் செய்தது. புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதி விலைகள் 2.4 சதவீதத்தினால் உயர்வடைந்த வேளையில்

**அட்டவணை 5.5** வர்த்தகச் சுட்டெண்கள் (அ)

2010 = 100


| வகை | பெறுமதிச் சுட்டெண் | | | அளவுச் சுட்டெண் | | | அலகு விலைச் சுட்டெண் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 (இ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | 2012(இ) | 2013(ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | 2012 (இ) | 2013 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) |
| **ஏற்றுமதிகள்** | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **101.1** | **112.0** | **10.7** | **92.0** | **97.4** | **5.9** | **109.9** | **115.0** | **4.6** |
| தேயிலை | 98.1 | 107.1 | 9.2 | 93.5 | 95.0 | 1.6 | 104.9 | 112.8 | 7.5 |
| இறப்பர் | 72.2 | 41.2 | -43.0 | 69.6 | 45.5 | -34.6 | 103.9 | 90.5 | -12.9 |
| தெங்கு | 126.1 | 123.5 | -2.0 | 110.0 | 112.7 | 2.4 | 114.6 | 109.6 | -4.3 |
| வாசனைப் பொருட்கள் | 123.6 | 171.5 | 38.8 | 84.1 | 115.2 | 37.0 | 147.0 | 148.9 | 1.3 |
| ஏனைய வேளாண்மை உற்பத்திகள் | 106.4 | 141.8 | 33.3 | 132.9 | 162.6 | 22.3 | 80.0 | 87.2 | 9.0 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **121.0** | **127.2** | **5.1** | **120.2** | **127.4** | **6.0** | **100.7** | **99.8** | **-0.8** |
| புடவைகளும் ஆடைகளும் | 119.0 | 134.4 | 13.0 | 109.8 | 121.1 | 10.3 | 108.4 | 111.0 | 2.4 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 175.9 | 162.5 | -7.6 | 115.3 | 116.9 | 1.4 | 152.6 | 139.0 | -8.9 |
| இறப்பர் உற்பத்திகள் | 154.4 | 159.5 | 3.3 | 112.6 | 109.0 | -3.2 | 137.1 | 146.3 | 6.7 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **252.9** | **212.8** | **-15.9** | **106.7** | **81.0** | **-24.0** | **237.0** | **262.6** | **10.8** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **113.4** | **120.6** | **6.4** | **110.0** | **116.4** | **5.9** | **103.1** | **103.5** | **0.4** |
| **இறக்குமதிகள்** | | | | | | | | | |
| **நுகர்வுப்பொருட்கள்** | **121.0** | **128.6** | **6.3** | **111.9** | **119.2** | **6.6** | **108.2** | **107.9** | **-0.3** |
| உணவும் குடிப்பானங்களும் | 98.6 | 103.4 | 4.9 | 100.1 | 105.4 | 5.3 | 98.5 | 98.1 | -0.4 |
| ஏனைய நுகர்வுப்பொருட்கள் | 146.8 | 157.6 | 7.3 | 125.3 | 135.1 | 7.8 | 117.2 | 116.7 | -0.4 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **143.8** | **130.8** | **-9.1** | **118.3** | **113.6** | **-4.0** | **121.6** | **115.1** | **-5.3** |
| வளமாக்கி | 129.5 | 99.4 | -23.3 | 97.0 | 88.4 | -8.8 | 133.5 | 112.3 | -15.9 |
| எரிபொருள் | 165.9 | 140.8 | -15.1 | 120.8 | 110.0 | -8.9 | 137.4 | 128.0 | -6.8 |
| இரசாயன உற்பத்திகள் | 128.8 | 141.2 | 9.6 | 116.9 | 128.1 | 9.6 | 110.2 | 110.3 | 0.1 |
| கோதுமை மற்றும் சோளம் | 137.1 | 121.8 | -11.2 | 102.0 | 84.8 | -16.9 | 134.4 | 143.6 | 6.9 |
| புடைவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 125.3 | 113.1 | -9.7 | 114.3 | 104.7 | -8.4 | 109.6 | 108.0 | -1.5 |
| பிளாத்திக்குகள் மற்றும் பொருட்கள் | 114.7 | 121.8 | 6.2 | 116.9 | 116.9 | 0.1 | 98.1 | 104.2 | 6.2 |
| வைரங்கள் மற்றும் மதிப்புமிக்க உலோகங்கள் | 155.7 | 127.9 | -17.8 | 134.4 | 131.7 | -2.0 | 115.8 | 97.1 | -16.2 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **166.6** | **154.4** | **-7.3** | **156.1** | **157.6** | **1.0** | **106.7** | **97.9** | **-8.2** |
| கட்டடப் பொருட்கள் | 150.6 | 165.2 | 9.7 | 137.6 | 153.9 | 11.9 | 109.5 | 107.3 | -1.9 |
| போக்குவரத்துக் கருவிகள் | 167.4 | 112.7 | -32.7 | 147.6 | 103.5 | -29.9 | 113.4 | 108.9 | -4.0 |
| பொறியும் கருவியும் | 176.2 | 166.1 | -5.7 | 171.4 | 183.9 | 7.3 | 102.8 | 90.3 | -12.1 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 135.4 | 174.0 | 28.5 | 131.0 | 161.8 | 23.5 | 103.3 | 107.5 | 4.1 |
| **மொத்த இறக்குமதிகள்** | **143.1** | **134.3** | **-6.2** | **124.2** | **123.8** | **-0.3** | **115.2** | **108.4** | **-5.9** |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | | | | | | **89.5** | **95.5** | **6.7** |

(அ) ஐ.அ.டொலர் நியதிகளில்
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது


மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை 7.5 சதவீதத்தினால் அதிகரித்தது. புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புத்தம் புதிய முறைகள் பின்பற்றப்பட்டமை மற்றும் பெறுமதிமிக்க சிறிய சந்தைகளை நோக்கி வழங்கல்கள் நகர்ந்தமை என்பனவற்றின் காரணமாக ஆடைக் கைத்தொழில்களில் காணப்பட்ட பெறுமதிகூட்டல், புடவை மற்றும் ஆடைகளின் அலகு விலைகளில் அதிகரிப்புக்களைத் தோற்றுவித்தது. 2013இல் கொல்கத்தா மற்றும் மும்பாசா ஏலங்களில் தேயிலை விலை குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்த போதும் உயர்தர சிலோன் தேயிலைக்கான அதிகரித்த கேள்வியின் விளைவாக, சிலோன் தேயிலையின் சராசரி விலை குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. எனினும், கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் மற்றும் அடிப்படை உலோகங்களின் விலைகள் மற்றும் வேளாண்மை உற்பத்திகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட இறப்பர், தெங்கு, கடல் உணவு மற்றும் காய்கறிகளின் ஏற்றுமதிகள் 2013இல் வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இதன்படி, வேளாண்மை மற்றும்

**வரைபடம் 5.5** ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மற்றும் வர்த்தக நிலுவை



**வரைபடம் 5.6 வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தக சுட்டெண்கள்**




கனிப்பொருள் ஏற்றுமதிகளின் சராசரி ஏற்றுமதி விலைச்சுட்டெண் முறையே 4.6 சதவீதத்தினாலும் 10.8 சதவீதத்தினாலும் அதிகரித்த வேளையில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் ஏற்றுமதி விலைச்சுட்டெண் 0.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.


**அனைத்து முக்கிய இறக்குமதி வகைகளினதும் இறக்குமதி விலை முன்னைய ஆண்டிலும் பார்க்கக் குறைவாக விளங்கி முன்னேற்றம்கண்ட பொருளாதாரங்களின் மீட்சி எதிர்பார்க்கப்பட்டதிலும் மெதுவாக இருந்தமை மற்றும் தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களில் காணப்பட்ட மெதுவான போக்கு என்பனவற்றின் காரணமாக, உலகளாவிய பண்ட விலைகள் மிதமான தன்மையினைப் பிரதிபலித்தன.** பெற்றோலியம், மற்றும் வளமாக்கியின் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பு பொதுவான இறக்குமதி விலைச்சுட்டெண் வீழ்ச்சியடையப் பங்களித்தது. சராசரியாக, 2013இல் பெற்றோலியம் மற்றும் வளமாக்கியின் விலைகள் முறையே 6.8 சதவீதத்தினாலும் 15.9 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. மரபு வழியற்ற எண்ணெய் உற்பத்திகளின் விரைந்த விரிவாக்கம் அதேபோன்று ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிலிருந்தான குறைந்த கேள்வி என்பன எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பங்களித்தன. உணவு மற்றும் குடிபான வகையில் பிரேசிலின் நாணயம் பலயீனமடைந்தமை மற்றும் மிகையான உற்பத்தி என்பனவற்றின் காரணமாக சீனியின் விலை 12.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி விலை வீழ்ச்சியடைந்தமைக்கு பெரும்பாலும் அனைத்து துணை வகைகளினதும் விலைகள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். இதற்கமைய, 2013இல் நுகர்வோர் இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருள் வகைகளின் சராசரி இறக்குமதி விலைச்சுட்டெண் முறையே 0.3 சதவீதத்தினாலும் 5.3 சதவீதத்தினாலும் 8.2 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

### 5.3.5 வர்த்தகத்தின் போக்கு


**2013இல் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான முக்கிய சேரிடங்களாக கைத்தொழில் நாடுகள் தொடர்ந்தும் விளங்கிய வேளையில் ஆசிய நாடுகள் நாட்டிற்கான இறக்குமதியில் பெரும் பங்கிற்கு வகைகூறின.** 2013இல் ஐக்கிய அமெரிக்கா பாரிய ஏற்றுமதி நாடாக தொடர்ந்தும் விளங்கிய வேளையில் அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியமும் இந்தியாவும் காணப்பட்ட வேளையில் இந்தியா பாரிய இறக்குமதி நாடாகவும் அதனைத் தொடர்ந்து சீனா மற்றும் சிங்கப்பூரும் காணப்பட்டன. இந்தியாவுடனான மொத்த இருபுடை வர்த்தகம் 2013இல் ஐ.அ.டொலர் 3.7 பில்லியனையும் விஞ்சியதன் மூலம் இலங்கையின் முன்னணி வர்த்தகப் பங்காளராவதற்கு வழிவகுத்தது.

**இலங்கையின் முக்கிய ஏற்றுமதிச் சந்தையான ஐக்கிய அமெரிக்கா மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 24 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியமும் (10.4 சதவீதம்) இந்தியாவும் (5.2 சதவீதம்) வகைகூறின.** ஐக்கிய அமெரிக்காவிற்கும் ஐக்கிய இராச்சியத்திற்குமான பாரிய ஏற்றுமதிகளாக புடவைகளும் ஆடைகளும் விளங்கின. அப்பொருளாதாரங்களில் ஏற்பட்ட மீட்சியின் காரணமாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியத்திற்கான மொத்த ஏற்றுமதிகள் முறையே 17.3 சதவீதத்தினாலும் 1.8 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இந்தியாவிற்கான முக்கிய ஏற்றுமதிகளாக வாசனைத்திரவியங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், பொறிகள் மற்றும் எந்திர துணைக்கருவிகள் மற்றும் விலங்குத்தீன் என்பன காணப்பட்டன. 2013இல் ஐரோப்பிய நாடுகளிடையே ஐக்கிய இராச்சியம் தவிர இத்தாலி, சேர்மனி, பெல்ஜியம் - லக்சம்பேர்க் என்பன முன்னணி ஏற்றுமதி நாடுகளாக விளங்கி, மொத்த ஏற்றுமதிகளில் முறையே 4.9 சதவீதம், 4.5 சதவீதம் மற்றும் 4.3 சதவீதங்களைப் பிரசன்னப்படுத்தின. இத்தாலி மற்றும் சேர்மனிக்கான ஏற்றுமதிகள் முக்கியமாக ஆடைகளை உள்ளடக்கியிருந்ததுடன் மொத்த ஆடை ஏற்றுமதிகளில் 14 சதவீதத்திற்கு வகைகூறின. வைரத்திற்கான உலகின் முன்னணி வர்த்தக மையங்களிலொன்றான பெல்ஜியத்திற்கு இலங்கையின் இரத்தினக்கல், வைரங்கள் மற்றும் ஆபரணங்களில் ஏறத்தாழ 42 சதவீதம் ஏற்றுமதி செய்யப்பட்டன. 2013இன் மொத்த ஏற்றுமதிகளில் மத்திய கிழக்கு மற்றும் பொதுநலவாய சுதந்திர நாடுகளுக்கான தேயிலை ஏற்றுமதிகள் முறையே ஏறத்தாழ 46.3 சதவீதத்திற்கும் 24.1 சதவீதத்திற்கும் வகைகூறியதுடன் சிலோன் தேயிலைக்கான முக்கிய சேரிடங்களாக அவற்றை மாறச் செய்தன.

**வரைபடம் 5.7 நாடுகளின்படி ஏற்றுமதிகள்**




**வரைபடம் 5.8 நாடுகளின்படி இறக்குமதிகள்**




**2013இல் இந்தியா இறக்குமதிக்கான பாரிய மூலமாகத் தொடர்ந்தும் விளங்கி இலங்கையின் இறக்குமதிகளில் ஏறத்தாழ 17.6 சதவீதத்திற்கு வகைகூறியது.** எனினும், இந்தியாவிலிருந்தான இறக்குமதிகள் 2013இல் ஐ.அ.டொலர் 3,171 பில்லியனுக்கு 12.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இந்தியாவிலிருந்தான முக்கிய இறக்குமதிகளாக பெற்றோலிய உற்பத்திகள், புடவை மற்றும் புடவைப்பொருட்கள், கட்டட மூலப்பொருட்கள் என்பன காணப்பட்டன. இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இவ்விடயங்களில் பெரும்பாலானவை தீர்வையற்ற வசதிகளைக் கொண்டிராத போதும் விலைப் போட்டித்தன்மை இப்பொருட்களுக்காக குறிப்பிடத்தக்க சந்தைப் பங்கினைப் பெற்றுக்கொள்ள இந்தியாவை இயலச் செய்தது. சீனாவும் சிங்கப்பூரும் இரண்டாவது மற்றும் மூன்றாவது பாரிய இறக்குமதிக்கான மூல நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் முறையே 16.4 சதவீதத்திற்கும் 9.3 சதவீதத்திற்கும் வகைகூறின. சீனாவிலிருந்தான இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 2,953 மில்லியனுக்கு 10.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் சிங்கப்பூரிலிருந்தான இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 1,682 மில்லியனாக விளங்கின. சீனாவிலிருந்தான முக்கிய இறக்குமதிகள், பொறி மற்றும் சாதனங்கள், புடவை மற்றும் புடவைப்பொருட்கள் மற்றும் கட்டடவாக்கப்பொருட்களை உள்ளடக்கியிருந்தன. சிங்கப்பூரிலிருந்தான முக்கிய இறக்குமதிகள் பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் பொறிகள் மற்றும் சாதனங்களை உள்ளடக்கியிருந்தன. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நான்காவது பாரிய இறக்குமதி மூலமாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் 6.6 சதவீதத்திற்கு வகைகூறியது. 2013இல் ஓமானிலிருந்தான இறக்குமதி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஆறு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்து இறக்குமதி மூலத்திற்கான ஐந்தாவது பெரிய நாடாக மாற்றமடைந்தமைக்கு மசகெண்ணெய் இறக்குமதி ஈரானிலிருந்து ஓமானுக்கு மாறியமையே காரணமாகும்.

## 5.4 நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு

### 5.4.1 பணிகளிலுள்ள வர்த்தகம்

**உலகளாவிய பொருளாதார நடவடிக்கையின் செயலாற்றத்தில் காணப்பட்ட மேம்பாட்டின் காரணமாக பணிகளிலுள்ள வர்த்தகம் 2013இல் உயர்ந்த உட்பாய்ச்சலைப் பதிவு செய்தது.** 2013இல் பணிகள் கணக்கு ஐ.அ.டொலர்கள் 4,685 மில்லியன் கொண்ட மொத்த உட்பாய்ச்சலைப் பதிவு செய்து முன்னைய ஆண்டுடன்

**அட்டவணை 5.6 நடைமுறை மற்றும் மூலதன கணக்கு (பீ.பி.எம்.6 சமர்ப்பிப்பு வடிவமைப்பு)**

ஐ.அ.டொ.மில்லியன்

| விடயம் | 2012 (அ) | | | 2013 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | செலவு | தேறிய | வரவு | செலவு | தேறிய |
| **பொருட்கள் மற்றும் பணிகள்** | **13,573** | **21,729** | **-8,155** | **15,079** | **21,508** | **-6,429** |
| **பொருட்கள்** | **9,774** | **19,190** | **-9,417** | **10,394** | **18,003** | **-7,609** |
| பொது வணிகம் | 9,759 | 19,020 | -9,261 | 10,392 | 17,802 | -7,410 |
| நாணயமல்லா தங்கம் | 14 | 170 | -156 | 2 | 201 | -199 |
| **பணிகள்** | **3,800** | **2,538** | **1,262** | **4,685** | **3,505** | **1,180** |
| போக்குவரத்து | 1,634 | 1,172 | 462 | 1,784 | 1,382 | 402 |
| கடல்வழி போக்குவரத்து | 825 | 597 | 229 | 893 | 686 | 208 |
| சரக்குத் தொகுதி | 825 | 597 | 229 | 893 | 686 | 208 |
| வான்வெளி போக்குவரத்து | 808 | 576 | 233 | 890 | 696 | 194 |
| பயணிகள் | 717 | 509 | 207 | 791 | 620 | 171 |
| சரக்குத் தொகுதி | 92 | 66 | 25 | 99 | 76 | 23 |
| பயணம் (இ) | 1,039 | 710 | 328 | 1,715 | 1,188 | 527 |
| கட்டுமானப் பணிகள் | 50 | 9 | 41 | 55 | 26 | 29 |
| காப்புறுதியும் ஓய்வூதியப் பணிகளும் | 107 | 64 | 43 | 109 | 85 | 24 |
| நிதியியல் பணிகள் | 232 | 279 | -46 | 235 | 328 | -93 |
| தொலைதொடர்பு, கணனி மற்றும் தகவல் பணிகள் | 673 | 207 | 466 | 719 | 368 | 351 |
| தொலைத்தொடர்புகள் | 109 | 68 | 41 | 114 | 87 | 27 |
| கணனி பணிகள் | 564 | 139 | 425 | 604 | 281 | 324 |
| ஏனைய வர்த்தக பணிகள் | 39 | 46 | -8 | 39 | 55 | -15 |
| அரச பொருட்கள் மற்றும் பணிகள் (என்.ஐ.இ) | 27 | 51 | -24 | 28 | 73 | -45 |
| **முதலாந்தர வருமானம்** | **142** | **1,361** | **-1,219** | **148** | **1,965** | **-1,817** |
| ஊழியர்களுக்கான நட்டஈடு | 14 | 34 | -20 | 15 | 66 | -51 |
| முதலீட்டு வருமானம் | 128 | 1,327 | -1,199 | 133 | 1,899 | -1,767 |
| நேரடி முதலீடு | 15 | 446 | -431 | 22 | 774 | -751 |
| பங்கிலாபம் | 15 | 200 | -185 | 22 | 422 | -400 |
| மீள் முதலீட்டு வருவாய் | | 246 | -246 | | 352 | -352 |
| சொத்துப் பட்டியல் முதலீடு | - | 408 | -408 | - | 576 | -576 |
| வட்டி | - | 408 | -408 | - | 576 | -576 |
| குறுங்காலம் | - | 46 | -46 | - | 48 | -48 |
| நீண்டகாலம் | - | 362 | -362 | - | 528 | -528 |
| ஏனைய முதலீடு | 23 | 473 | -450 | 20 | 550 | -530 |
| ஒதுக்கு சொத்துக்கள் | 90 | - | 90 | 91 | - | 91 |
| **இரண்டாந்தர வருமானம்** | **6,038** | **646** | **5,392** | **6,428** | **788** | **5,639** |
| பொது அரசாங்கம் | 53 | - | 53 | 21 | - | 21 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 5,985 | 646 | 5,339 | 6,407 | 788 | 5,619 |
| **நடைமுறை கணக்கு** | 19,754 | 23,736 | -3,982 | 21,655 | 24,262 | -2,607 |
| **மூலதன கணக்கு** | 146 | 15 | 130 | 90 | 19 | 71 |
| மூலதன மாற்றல்கள் | 146 | 15 | 130 | 90 | 19 | 71 |
| பொது அரசாங்கம் | 98 | - | 98 | 39 | - | 39 |
| கூட்டுத்தாபன மற்றும் வீட்டுத்துறை | 47 | 15 | 32 | 51 | 19 | 32 |
| **நடைமுறை மற்றும் மூலதன கணக்கு** | 19,900 | 23,751 | -3,851 | 21,745 | 24,281 | -2,536 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) வதியாதோருக்கு வழங்கப்பட்ட பயணிகள் பணிகள் போக்குவரத்து பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

ஒப்பிடுகையில் 23.3 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. பணிகள் கணக்கில் காணப்பட்ட மேம்பட்ட செயலாற்றத்திற்கு போக்குவரத்து, பயணம், தொலைத் தொடர்பூட்டல், கணனி, மற்றும் தகவல் பணிகள் துணைத் துறைகளிலிருந்தான உயர்ந்த பெறுகைகளே முக்கிய காரணமாகும். இப்பிராந்தியத்தில் பணிகளின் ஏற்றுமதிப் பொருளாதாரமாக தோற்றம் பெறுவதற்கான உள்ளார்ந்த வளத்தினை இலங்கை கொண்டிருப்பதனை பிரதிபலிக்கின்ற விதத்தில் ஏனைய பணிகளிலுள்ள துணைத் துறைகளும் இவ்வாண்டுப் பகுதியில் கணிசமான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களைப் பெற்றன.

## போக்குவரத்துப் பணிகள்

**பணிகள் கணக்கிலுள்ள முக்கிய துறையான போக்குவரத்துப் பணிகள் இவ்வாண்டு காலப்பகுதியில் விரைந்து வளர்ச்சி கண்டன.** போக்குவரத்துப் பணிகளின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல் பயணிகள் கட்டணங்கள், சரக்குக் கட்டணங்கள், துறைமுகம் மற்றும் வானூர்திநிலையங்களுடன் தொடர்பான பணிகளை உள்ளடக்கி 2012இன் ஐ.அ.டொலர் 1,634 மில்லியனிலிருந்து 2013இல் ஐ.அ.டொலர் 1,784 மில்லியனுக்கு 9.2 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேநேரம் 2013இல் போக்குவரத்துப் பணிகளின் பேரிலான வெளிப்பாய்ச்சல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,382 மில்லியனுக்கு 17.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் இலங்கையரின் அதிகரித்த வெளிநாட்டு பயணங்கள் ஆகியனவே காரணங்களாகும்.

**2013இல் பயணிகள் கட்டணங்களின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல்கள், முன்னைய ஆண்டினைவிட ஐ.அ.டொலர் 791 மில்லியனுக்கு 10.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உயர்ந்த சுற்றுலா வருகைகளே காரணமாகும்.** சிறிலங்கன் எயார்லையின்ஸ் மூலம் பயணம் செய்த பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தமையும் இவ்வாண்டுப் பகுதியில் வான் பயணக் கட்டணம் மேல் நோக்கித் திருத்தப்பட்டமையும் இதற்கு ஆதரவாக அமைந்தன. தற்பொழுது, சிறிலங்கன் எயார்லையின்ஸ் உலகம் முழுவதிலுமுள்ள 35 நாடுகளிலுள்ள 65 சேரிடங்களுக்கு தொழிற்படுத்தப்படுகிறது. அதேவேளை மிகின் லங்கா 2013 நவெம்பரில் பதினோராவது சேரிடமாக சீசெல்ஸ் இற்கு நேரடி பறப்பினைத் தொழிற்படுத்தியதன் மூலம் ஆசியப் பிராந்தியத்தில் கூடுதலான பயணிகளைக் கொண்டு செல்லக்கூடிய மேலதிக வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**விமானச் சரக்குக் கட்டணம், துறைமுகம், வானூர்தி நிலையம் என்பன தொடர்பான நடவடிக்கைகளிலிருந்தான வருவாய்கள் 2013இல் ஐ.அ.டொலர் 993 மில்லியனுக்கு 8.3 சதவீதத்தினால் அதிகரித்தன.** இவ்வளர்ச்சிக்கு கப்பற் சரக்குகளின் அளவு மற்றும் இவ்வாண்டுப் பகுதியில் கையாளப்பட்ட கொள்கலன் என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாக அமைந்தது. 2013 ஓகத்தில் கொழும்பு தெற்கு துறைமுகத்தில் புதிய கொள்கலன் முனைக்கோடி நிறைவு செய்யப்பட்டமையானது தற்போதுள்ள இயலளவை 2.14 மில்லியன் இருபது அடிக்குச் சமனான கொள்கலன் அலகுகளால் விரிவடையச் செய்தது. மேலும் துறைமுகம் மற்றும் வானூர்தி நிலையத்துடன் தொடர்பான நடவடிக்கைகளை விரிவாக்கும்


நோக்குடன், அரசாங்கம் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களை சுதந்திர துறைமுகங்களாகவும் மத்தள ராஜபக்ஷ பன்னாட்டு வானூர்திநிலையத்தினை சுங்கம் செலுத்தாது பொருட்களை களஞ்சியப்படுத்தி வைக்கும் பிரதேசமாகவும் பிரகடனம் செய்திருக்கிறது. தற்பொழுது இடம்பெற்றுவரும் துறைமுக மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் நிறைவடைந்ததும் இனிவரும் ஆண்டுகளில் இன்னமும் கூடுதலான பாய்ச்சல்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பயணம் மற்றும் சுற்றுலா


**நாட்டில் நிலவும் சமாதானம் நிரம்பிய சூழல் சுற்றுலாத் துறையில் இடம்பெற்றுவரும் உபாயம் மிக்க முதலீடுகள், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் புதிய விடயங்கள் மற்றும் பாரிய மேம்பாட்டுப் பிரச்சாரங்கள் என்பனவற்றுடன் சேர்ந்து 2013இல் இலங்கைக்கு குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்தது.** 2013இல் சுற்றுலாப் பயணிகளின் வருகை ஆரம்ப இலக்கான 1.2 மில்லியனை விஞ்சி 1.27 மில்லியன் வருகைகளைப் பதிவு செய்ததுடன் இது முன்னைய ஆண்டினை விட 26.7 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். மேற்கு ஐரோப்பா இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் காணப்பட்ட போதும் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகை 2013இல் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. இதன் விளைவாக, மொத்த சுற்றுலாப் பணிகளின் வருகையில் மேற்கு ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலாப் பயணங்களின் பங்கு 2012இன் 37.1 சதவீதத்திலிருந்து 2013இல் 33 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கிடையிலும் இப்பிராந்தியத்திலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2013இல் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 12.9 சதவீதத்தினால் அதிகரித்தது. மறுபுறத்தில், கிழக்காசியா, தென்னாசியா, கிழக்கு ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் பங்கு அதிகரித்தமைக்கு, தோற்றம் பெற்றுவரும் சந்தைகளை முக்கிய கவனத்தில் கொண்டு இவ்வாண்டுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட காத்திரமானதும் உபாயம் மிக்கதுமான ஊக்குவிப்புப் பிரச்சாரங்களே காரணமாகும். 2013இல் இரண்டாவது முக்கிய சந்தையான தென்னாசிய பிராந்தியம் சுற்றுலா வருகைகளில் 2012இன் 24.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 25.6 சதவீதத்திற்கு வகைகூறியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013இல் அனைத்துப் பிராந்தியங்களும் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும். அதேவேளை இந்தியா சுற்றுலாப் பயணிகளை உருவாக்கும் முன்னணி நாடாகத் தொடர்ந்தும் விளங்குவதுடன் அதனை அடுத்து ஐக்கிய இராச்சியம், சேர்மனி, மாலைதீவு, பிரான்ஸ் என்பன காணப்பட்டன. இவ்வைந்து நாடுகளும் ஒன்றுசேர்ந்து 2013ஆம் ஆண்டின் இலங்கைக்கான சுற்றுலா வருகைகளில் 45.1 சதவீதத்திற்கு வகைகூறின. வருகைக்கான நோக்கங்களின் நியதிகளில் நாட்டிற்கு விஜயம் செய்த சுற்றுலாப் பயணிகளில் பெரும்பான்மையானோர் (76.9 சதவீதம்) விடுமுறை நோக்கங்களுக்காக விஜயம் செய்த வேளையில் 7.4 சதவீதம் வியாபார நோக்கங்களுக்கானதாக இருந்தது.

**2013இல் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடைந்தன.** சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான அதிகரிப்பு மற்றும் சுற்றுலாப் பயணியொருவருக்கான சராசரிச் செலவிடலின் அதிகரிப்பு என்பவற்றின் விளைவாக வருவாய்கள் 2012இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,039 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 1,715 மில்லியனுக்கு அதிகரித்தது. மேலும், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின்படி,

வரைபடம் 5.9 நாடுகளின்படி சுற்றுலாப் பயணிகளின் வருகை - 2013




வரைபடம் 5.10 சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்



அட்டவணை 5.7 சுற்றுலாவின் செயலாற்றம்

| விடயம் | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 (அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) 2013 (அ) |
|---|---|---|---|---|---|---|
| சுற்றுலா பயணிகளின் வருகை (எண்ணிக்கை) | 447,890 | 654,476 | 855,975 | 1,005,605 | 1,274,593 | 26.7 |
| பொழுதுபோக்கு | 358,188 | 516,538 | 663,343 | 748,436 | 980,162 | 31.0 |
| வியாபாரம் | 38,473 | 83,270 | 68,097 | 90,040 | 94,320 | 4.8 |
| ஏனையவை | 51,229 | 54,668 | 124,535 | 167,129 | 200,111 | 9.0 |
| சுற்றுலா விருந்தாளிகளின் இரவுகள் ('000) | 4,076 | 6,548 | 8,559 | 10,056 | 10,961 | 27.1 |
| தங்கும் அறை குடியிருப்பு விகிதம் (%) | 48.4 | 70.2 | 77.1 | 71.2 | 71.7 | 0.7 |
| மொத்தச் சுற்றுலா பெறுகைகள் (ரூ.மில்லியன்) | 40,133 | 65,018 | 91,926 | 132,427 | 221,720 | 67.4 |
| தலைக்குரிய சுற்றுலா பெறுகைகள் (ரூ) | 89,605 | 99,344 | 107,393 | 131,688 | 173,954 | 32.1 |
| மொத்த தொழில்நிலை (எண்ணிக்கை) | 124,970 | 132,055 | 138,685 | 162,869 | 270,150 | 65.9 |
| நேரடி தொழில்வாய்ப்புக்கள் | 52,071 | 55,023 | 57,786 | 67,862 | 112,550 | 65.9 |
| மதிப்பிடப்பட்ட மறைமுக தொழில்வாய்ப்புக்கள் | 72,899 | 77,032 | 80,899 | 95,007 | 157,600 | 65.9 |

(அ) தற்காலிகமானது

மூலங்கள் : இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி

நாளொன்றுக்கான சுற்றுலாப் பயணியொருவருக்கான சராசரிச் செலவிடல் 2012இன் ஐ.அ.டொலர் 103 இலிருந்து 2013இல் ஐ.அ.டொலர் 156.5 இற்கு அதிகரித்த அதேவேளை, சுற்றுலாப் பயணியொருவருக்கான சராசரி தங்கும் காலம் 2012இன் 10 நாட்களிலிருந்து 2013இல் 8.6 நாட்களுக்குக் குறைவடைந்தது. மேலும், மேம்பட்ட சுற்றுலா விடுதிகள் மற்றும் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உயர்தர சுற்றுலாப் பயணிகளின் வருகை என்பன 2013இல் சுற்றுலா வருவாய்கள் அதிகரிப்பதற்குப் பங்களித்தன. அதேவேளை, பயணத்தின் பேரிலான வெளிப்பாய்ச்சலும் 2013இல் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமைக்கு கல்வி, பொழுதுபோக்கு, வியாபாரம் மற்றும் நல நோக்கங்களுக்காக இலங்கையர் மேற்கொண்ட அதிகரித்த பயணமே காரணமாகும்.

**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையும் ஏனைய தொடர்பான அதிகாரசபைகளும் 2016இல் 2.5 மில்லியன் கொண்ட சுற்றுலாப் பயணிகளைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.** வேறுபட்ட தொனிப்பொருட்களுடன் சுற்றுலாவினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் கல்பிட்டி, குச்சவெளி மற்றும் யால ஆகிய இடங்ளிலுள்ள சுற்றுலா அபிவிருத்தி வலயங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பந்தியில், வெள்ளை மற்றும் உச்சாமுனை ஆகிய தீவுகள் மூன்று முதலீட்டாளர்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டதுடன் முன்னோடிச் செயற்றிட்டமொன்றாக வெள்ளைத் தீவில் நான்கு நீர் பங்களாக்களை அமைப்பதற்கு கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் ஒப்புதல் வழங்கப்பட்டது. ஆசிய பசுபிக் ஆடம்பர சுற்றுலா விடுதி சங்கிலிகளில் ஒன்றான சங்கிறி-லா ஏசியா லிமிடெட் மற்றும் கயாட், மூவென்பிக் மறியட் மற்றும் செறட்டன் போன்ற ஏனைய பன்னாட்டுச் சுற்றுலாச் சங்கிலிகளும் இவ்வாண்டுப் பகுதியில் நிர்மாணத்தின் கீழ் இருந்ததுடன் மிக விரைவில் இலங்கையில் தொழிற்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இவ்வாண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 372 மில்லியன் முதலீட்டுடன் 2,547 அறைகளை உள்ளடக்கிய 36 புதிய சுற்றுலா விடுதிகளை செயற்றிட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நாட்டிற்குக் கூடியளவு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பொருட்டும், முதலீடுகளை ஊக்குவிக்கும் பொருட்டும் நேரடியானதும் மறைமுகமானதுமான தொழில்வாய்ப்புக்களை உருவாக்கும் பொருட்டும் அம்பாறை, கம்பகா மற்றும் புத்தளம் மாவட்டங்களில் குறைந்தளவிற்கே அறியப்பட்ட அமைவிடங்கள் மேம்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. சமூகங்களைக் காண்பதற்கான விஜயங்கள் போன்ற புதிய முயற்சிகள் மற்றும் பண்ணைகள், மீன்பிடி, திருவிழாக்கள், சமய மற்றும் கலாச்சார நிகழ்ச்சித்திட்டங்கள், விளையாட்டு, பறவைகள் மற்றும் வனவிலங்குகளை ரசித்தல் போன்ற நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட்டன. மேலும், புறநகும போன்ற உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் கட்டுநாயக்கா விரைவுப் பாதை போன்றனவும் இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் மனதை எடுத்த எடுப்பிலேயே கவரத்தக்கனவாக இருக்கின்றன.

**சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான மேம்பாட்டு நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தினை பரிசீலனையில் கொண்டு 2013இல் பல பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.** "இலங்கையர் ஆகுங்கள்" என்ற பெயரிலான அரச மற்றும் தனியார் துறையுடனான இலங்கையின் முதலாவது பாரிய இணைந்த ஊக்குவிப்புப்

பிரச்சாரமானது இந்தியாவில் நடத்தப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து உயர் பிரச்சார ஊடக மாநாடு, சுற்றுலா மற்றும் வர்த்தகம் தொடர்பான வியாபாரங்களுக்கிடையிலான கூட்டங்கள் மற்றும் கடைத்தொகுதி செயற்படுத்தல்களும் இடம்பெற்றன. இப்பிரச்சாரத்தின் முதன்மை நோக்கம் யாதெனில் தோற்றம் பெற்றுவரும் சந்தைகளில் இலங்கையை மிக முன்னுரிமை வாய்ந்த பயண நாடாக நிலைப்படுத்துவதேயாகும். மேலும், ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் ருசிஷயா மற்றும் ஏனைய சுதந்திர பொதுநலவாய நாடுகளிலும் அதேபோன்று சீனா போன்ற தோற்றம் பெற்றுவருகின்ற உயர் உள்ளார்ந்த வளத்தினைக் கொண்ட சந்தைகளிலும் நடத்தப்பட்டன. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் இலங்கை பயணம் மற்றும் சுற்றுலாத் துறையுடன் இணைந்து ஆண்டுக் காலத்தில் வெளிநாடுகளில் நடந்த 35 பயண விழாக்காட்சிகளிலும் கண்காட்சிகளிலும் பங்கேற்றது. மேலும், நாட்டினை மேம்படுத்துவதில் வெற்றிகரத்தன்மையினை நிரூபித்த 'விஜயம் செய்யும் பத்திரிகையாளர் நிகழ்ச்சித்திட்டம்' இன் கீழ் 30 நாடுகளிலிருந்தான பத்திரிகையாளர்களுக்காக 72 ஊடக அறிமுகப்படுத்தல் சுற்றுலாக்கள் நடத்தப்பட்டன. இதற்குப் புறம்பாக, பன்னாட்டு சுற்றுலாச் சந்தைகளில் பங்கேற்றமை மற்றும் 2014 பிரான்ஸ் அழகு ராணிப் போட்டி தொடர்பான இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட 33 பேருக்கு அனுசரணை வழங்கியமை போன்றவற்றினூடாக தனியார் துறை நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. மேலும், பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்ட விருந்தினர்களுக்காக "இலங்கையின் பிரதிபலிப்பு" என்ற தலைப்பிலான பொருட்காட்சியும் ஒழுங்கமைக்கப்பட்ட பல சுற்றுலாக்களும் ஒழுங்குசெய்யப்பட்டமையானது அமைவிடயங்கள், கவர்ச்சிகள் மற்றும் இலங்கையின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் என்பனவற்றை அவர்கள் கண்டுகளிப்பதனை இயலச் செய்தது. இது பன்னாட்டு நிகழ்வுகளை நடத்துவதற்கான இடமொன்றாக இலங்கையை நோக்குவதற்கு மாநாடுகளை ஒழுங்குசெய்வோரிடையே ஆர்வத்தினை உருவாக்குமெனவும் பொதுநலவாய நாடுகளிடையே சுற்றுலா அமைவிடமொன்றாக இலங்கையை மேம்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுலாத் துறை முன்னோக்கிச் செல்வதற்கு சந்தையின் வேறுபட்ட பிரிவுகளுக்கு பணிகளை வழங்குவதற்காக உற்பத்திகளைப் பன்முகப்படுத்தல் வேண்டும்.

**தொலைத் தொடர்பூட்டல்கள் கணனி மற்றும் தகவல் பணிகள்**

**தொலைத் தொடர்பூட்டல்கள் மற்றும் கணனிப் பணிகளின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல்கள் 2012இன் ஐ.அ.டொலர் 673 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 719 மில்லியனைப் பதிவு செய்தன.** 2013இல் ஐ.அ.டொலர் 114 மில்லியன் கொண்ட மொத்த உட்பாய்ச்சலுடன் தொலைத் தொடர்பூட்டல் பணிகள் துணைத் துறை 2013இல் மிதமாக அதிகரித்தது. தொலைத் தொடர்பூட்டல் துறையில் காணப்பட்ட உயர்ந்த போட்டி அண்மைய ஆண்டுகளில் பன்னாட்டு குரல் அழைப்புக் கட்டணத்தின் உள்நாட்டு விலைகளின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு வழிவகுத்த போதும் இணையத்தள பணிகளின் பெருமளவு பயன்பாடு பன்னாட்டு நேரடி அழைப்புடன் உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் குரல் அழைப்பு நிமிடங்கள் இரண்டிலும் 2012 உடன் ஒப்பிடுகையில் 2013இல் சிறிதளவு குறைப்பினைத் தோற்றுவித்தது. இரண்டு இலங்கைத் தொழிற்பாட்டாளர்கள் ஏற்கனவே நான்காவது பரம்பரை நீண்ட கால பரிணாமத்தினை மேற்கொண்டதுடன் இலங்கையின் தொலைத் தொடர்பூட்டல் தொழில்துறை இப்பிராந்தியத்திலுள்ள அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் உறுதியான முறையில் முதிர்ச்சி நிலையினை அடைந்திருப்பதுடன் கிட்டிய எதிர்காலத்தில் இன்னும் பலர் சந்தைக்குள் நுழைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2013இல் கணனி மற்றும் தகவல் பணிகளின் செயலாற்றம் மேம்பட்டிருக்கிறது.** 2013இல் கணனி மற்றும் தகவல் பணிகள் துணைத் துறைக்கான மொத்த உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 604 மில்லியனுக்கு 7.2 சதவீதத்தினால் அதிகரித்தன. வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் வெளியிலிருந்து அறிவினைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப இயலுமைப் பணிகள், இலங்கையில் காணப்பட்டன. உயர் வளர்ச்சிக்கான உள்ளார்ந்த வளத்தைக் கொண்டிருக்கும் துறையொன்றாக தோற்றம் பெற்று முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013இல் குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சலை உருவாக்கியது. இதன் விளைவாக, 2013 ஒத்தோபரில் ஐக்கிய இராச்சியத்தின் தேசிய வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் அமைப்பினால் வழங்கப்படும் "ஆண்டிற்கான வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் நாடு" என்ற விருதினை இலங்கை பெற்றுக் கொண்டது. இலங்கை தகவல் தொழில்நுட்பம், வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வெளியிலிருந்து அறிவினைப் பெற்றுக் கொள்ளுதல் என்பனவற்றிற்குத் தேவையான தேர்ச்சி பெற்ற மனித மூலவளங்களை உற்பத்தி செய்யக்கூடியதாக இருப்பதன் காரணமாக, வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் பணிகளில் ஈடுபட்டுள்ள கம்பனி முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் முன்மொழிவுகளை முன்வைத்த வேளையில் புதிதாக தொழில்களை தொடங்கும் முயற்சிகளுக்கு 5 ஆண்டுகள்

அரை வரி விடுப்பு வழங்கப்பட்டது. மேலும், தென்னாசியாவின் தோற்றம் பெற்றுவரும் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப மையமாக அம்பாந்தோட்டையில் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப வலயத்தை அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

### 5.4.2 முதலாந்தர வருமானம்

**வங்கித்தொழில் மற்றும் தனியார் துறையின் கடன்கள், அரச பிணையங்கள் மற்றும் மீதான உயர்ந்த வட்டிக் கொடுப்பனவுகள் முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறையில்[2] குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைத் தோற்றுவித்தது.** முதலாந்தர வருமானத்தின் பற்றாக்குறை 2012இன் ஐ.அ.டொலர் 1,219 மில்லியனிலிருந்து 2013இல் ஐ.அ.டொலர் 1,817 மில்லியனுக்கு அதிகரித்தது. மத்திய வங்கியின் ஒதுக்கு முதலீட்டின் மீது உழைக்கப்பட்ட வருமானம் (வர்த்தகப்படுத்தல் இலாபம் நீங்கலாக) 2012இன் ஐ.அ.டொலர் 90 மில்லியனுடன் ஒப்பிடுகையில் பெருமளவிற்கு மாற்றமெதுமின்றி 2013இல் ஐ.அ.டொலர் 91 மில்லியனாகக் காணப்பட்டது. முதலாந்தர வருமானக் கணக்கிலுள்ள ஏனைய முதலீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட வர்த்தக வங்கிச் சொத்துக்கள் மீது உழைக்கப்பட்ட வருமானம் 2012இன் ஐ.அ.டொலர் 23 மில்லியனிலிருந்து 2013இல் ஐ.அ.டொலர் 20 மில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. மத்திய வங்கி மற்றும் வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள் மீது உழைக்கப்பட்ட வருமானம் 2012 மற்றும் 2013 ஆகிய இரு ஆண்டுகளிலும் ஒப்பீட்டு ரீதியில் குறைந்தளவு மட்டத்தில் காணப்பட்டமைக்கு உலகளாவிய நிதியியல் சந்தைகளில் நிலவிய தாழ்ந்த வட்டி வீதங்களே காரணமாகும்.

**முதலாந்தர வருமானக் கணக்கின் வெளிப்பாய்ச்சல் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவு செய்தமைக்கு வெளிநின்ற படுகடன் மீதான உயர்ந்த வட்டிக் கொடுப்பனவுகளே முக்கிய காரணமாகும்.** 'ஏனைய முதலீடுகள்' இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அரசாங்கம், வங்கித்தொழில் துறை, தனியார் துறை, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் மத்திய வங்கியின் (துணைநில் ஒழுங்கு நிகழ்ச்சித்திட்டத்தின் பேரிலான ப.நா.நிதியத்திற்கான வட்டிக் கொடுப்பனவுகள்) நீண்ட கால கடன்பாடுகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2012இன் ஐ.அ.டொலர் 473 மில்லியனிலிருந்து 2013இல் ஐ.அ.டொலர் 550 மில்லியனுக்கு உயர்ந்து 16.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவு செய்தது. மேலும், 'சொத்துப்பட்டியல் முதலீடுகள்' மீதான வட்டிக் கொடுப்பனவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட வெளிநின்ற அரச பிணையங்களுக்கான நறுக்கு கொடுப்பனவுகளின் நியதிகளில் வட்டிச் செலவு 2012இன் ஐ.அ.டொலர் 408 மில்லியனிலிருந்து 2013இல் ஐ.அ.டொலர் 576 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு அரச திறைசேரி முறிகள் மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பன மீதான உயர்ந்த வட்டிக் கொடுப்பனவுகளே முக்கிய காரணமாகும். அதேவேளை, இலங்கைக் கம்பனிகளினால் நேரடி முதலீட்டாளர்களுக்கான பங்கிலாபக் கொடுப்பனவுகள் மற்றும் மீள் முதலீடு செய்யப்பட்ட வருவாய்கள்[3] என்பனவற்றை உள்ளடக்கிய நேரடி முதலீடுகளுடன் தொடர்பான வெளிப்பாய்ச்சல்கள் 2013இல் முறையே ஐ.அ.டொலர் 422 மில்லியனாகவும் ஐ.அ.டொலர் 352 மில்லியனாகவும் காணப்பட்டன. 2012 உடன் ஒப்பிடுகையில் பங்கிலாபக் கொடுப்பனவின் உயர்ந்த மட்டம் அதேபோன்று மீள்முதலீட்டு வருவாய்களின் உயர்ந்த விகிதம் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளில் அதிகரித்த இலாபத்தினை பிரதிபலித்தது. மீள்முதலீடு செய்யப்பட்ட வருவாய்களின் உயர்ந்த விகிதமும் பொருளாதாரத்தில் நிலவிய சாதகமான தோற்றப்பாட்டின் ஒரு அடையாளமாகும்.

### 5.4.3 இரண்டாந்தர வருமானம்

**தொழிலாளர் பணவனுப்பல்களையும் பொது அரச மாற்றல்களையும் உள்ளடக்கிய இரண்டாந்தர வருமானக் கணக்கிற்கான[4] உட்பாய்ச்சல்கள் 2012இன் ஐ.அ.டொலர் 6,038 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 6,428 மில்லியனுக்கு 6.5 சதவீதத்தினால் அதிகரித்தன.** இரண்டாந்தர வருமானக் கணக்கிற்கான மொத்த உட்பாய்ச்சலில் 99 சதவீதத்திற்கு மேல் வகைகூறும் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2013இன் மேம்பாட்டிற்கு முக்கியமாகப் பங்களித்தன. இதன்படி, 2012இன் ஐ.அ.டொலர் 5,985 மில்லியனிலிருந்து 2013இல் ஐ.அ.டொலர் 6,407 மில்லியனுக்கு 7.0 சதவீதத்தினால் அதிகரித்த தொழிலாளர் பணவனுப்பல்கள் நாட்டிற்கான வெளிநாட்டுச் செலாவணியின் உறுதியான மூலமொன்றாக மாறியிருக்கிறது. தொழில்சார் நிபுணத்துவம் மற்றும் தேர்ச்சி வகைகளின் கீழ் புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை

---

2 சென்மதி நிலுவை கைநூல் 6 சமர்ப்பித்தல் வடிவமைப்பு பின்பற்றப்பட்டமையுடன், முன்னைய வடிவமைப்பின் "வருமானக் கணக்கு", "முதலாந்தர வருமானகக் கணக்கு" இனால் பதிலிடப்பட்டது. முதலாந்தர வருமானக் கணக்கானது முன்னைய வடிவமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த அனைத்து மதிப்பீட்டு மாற்றங்களையும் (உதாரணமாக: மத்திய வங்கி ஒதுக்குகளின் வர்த்தகப்படுத்தல் இலாபங்கள்) தற்பொழுது நீக்குகிறது.

3 முதலாந்தர வருமானக் கணக்கில் வெளிப்பாய்ச்சலொன்றாகக் கருதப்படுவதுடன் நிதியியல் கணக்கில் நேரடி முதலீடுகளின் வடிவில் உட்பாய்ச்சலொன்றாகக் கருதப்படுகிறது.

4 இரண்டாந்தர வருமானம் என்பது சென்மதி நிலுவைக் கைநூல் வடிவமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சொற்பதமாக இருப்பதுடன் இது முன்னைய வடிவமைப்பிலுள்ள "நடைமுறை மாற்றல்கள் கணக்கு" இனைப் பதிலீடு செய்கிறது.

அதிகரித்தமை, முறையான வழிப்படுத்தல்களினூடாக பணத்தினை அனுப்புவதற்கான கூடியளவான வசதிகள் மற்றும் விழிப்புணர்வு மற்றும் புதிய வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட பணம் மாற்றல் செய்யும் முறைகளின் அறிமுகம் என்பன தொழிலாளர் பணவனுப்பல்கள் அதிகரிப்பதற்குப் பங்களித்த முக்கிய காரணிகளாகும். வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்காக புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 2012இன் 282,447 இலிருந்து 2013இல் 293,105 இற்கு 3.8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் தேர்ச்சி மற்றும் தொழில்சார் நிபுணத்துவ வகையின் கீழ் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காகச் சென்ற வேலையாட்களின் எண்ணிக்கை 2013இல் 24.6 சதவீதத்தினால் அதிகரித்தது.

## 5.5 நடைமுறைக் கணக்கு மீதி

**நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2012இன் ஐ.அ.டொலர் 3.982 மில்லியனிலிருந்து 2013இல் ஐ.அ.டொலர் 2,607 மில்லியனுக்குக் கணிசமாக வீழ்ச்சியடைந்தமைக்கு, வர்த்தகப் பற்றாக்குறை சுருக்கமடைந்தமை, தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் உயர்வடைந்தமை என்பன காரணங்களாக விளங்கின.** 2013ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை 2012இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் விரிவடைந்து காணப்பட்ட போதும், முக்கிய ஏற்றுமதி நாடுகளில் காணப்பட்ட படிப்படியான மீட்சியின் காரணமாக உலகளாவிய கேள்வி அதிகரித்தமை குறிப்பாக குறைவடைந்த பெற்றோலிய இறக்குமதிகளின் காரணமாக இறக்குமதிகளின் மீதான செலவினம் கடுமையாக வீழ்ச்சியடைந்தமை என்பன ஆண்டின் பின்னரைப் பகுதியில் வர்த்தகக் கணக்கில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைத் தோற்றுவித்தது. தொழிலாளர் பணவனுப்பல்கள் சுற்றுலாவிலிருந்தான வருவாய்களுடன் சேர்ந்து வர்த்தகப் பற்றாக்குறையின் தாக்கத்தினைக் குறைத்ததன் மூலம் 2013இல் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை ஒடுக்கமடைந்தது. இதற்கமைய, நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2012இன் மொ.உ.உற்பத்தியின் 6.7 சதவீதத்திலிருந்து 2013இன் மொ.உ.உற்பத்தியில் 3.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து சேமிப்பு - முதலீட்டு இடைவெளியினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 42 சதவீதத்தினால் குறைவடையச் செய்தது.

## 5.6 மூலதனக் கணக்கு மீதி

**மூலதன மாற்றல்கள் வடிவில் ஏற்பட்ட குறைந்த உட்பாய்ச்சல்கள் மூலதனக் கணக்கின் மீதியைக் குறைத்துவிட்டன.** மூலதனக் கணக்கு 2012இன் ஐ.அ.டொலர் 130 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐஅ.டொலர் 71 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவு செய்தது. மூலதனக் கணக்கிற்கான பெரும்பாலான உட்பாய்ச்சல்கள் அரசாங்கத்தினால் பெறப்பட்ட மூலதனக் கொடைகளின் வடிவிலேயே காணப்பட்டன. இலங்கை குறைந்த நடுத்தர வருமான நாடாக அந்தஸ்து உயர்வடைந்தமையின் காரணமாக மூலதனக் கொடைகளின் அளவு வீழ்ச்சியடைந்தது. நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையில் குறிப்பிடத்தக்க குறைப்பு காணப்படுவதன் காரணமாக, நடைமுறை மற்றும் மூலதனக் கணக்குகளின் மீதி 2012இன் ஐ.அ.டொலர் 3,851 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 2,536 மில்லியன் கொண்ட குறைந்தளவு பற்றாக்குறையினைப் பதிவு செய்தது.


## 5.7 நிதியியல் கணக்கு

**2013இல் நிதியியல் கணக்கிற்கு குறிப்பிடத்தக்களவு உட்பாய்ச்சல் அவதானிக்கப்பட்டிருக்கிறது.** சென்மதி நிலுவை கைநூல் 6 தொகுப்பு முறையியல் பின்பற்றப்பட்டதுடன், நிதியியல் கணக்கும் நேரடி முதலீடுகளுக்குப் புறம்பாக, ஒதுக்குச் சொத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் சொத்துப்பட்டியல் முதலீடுகள், நிதியியல் பெறுதிகள் மற்றும் ஏனைய முதலீடுகள் என்பனவற்றையும் உள்ளடக்கியிருந்தன. வெளிநாட்டுக் கடன்கள், படுகடன் பிணையங்களின் வழங்கல்களிலிருந்தான பெறுகைகள், நேரடி முதலீடுகள் என்பனவற்றின் வடிவில் அரசாங்கம், வங்கித்தொழில் மற்றும் தனியார் துறைக்கு ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சலை வலுப்படுத்தி 2013இல் ஐ.அ.டொலர் 4,081 மில்லியன் கொண்ட தேறிய நிகழத்தக்க பொறுப்பினைத் தோற்றுவித்திருக்கிறது. இருப்பினும் இது, 2012இன் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 5,440 மில்லியனைவிட குறைவானதாகும். அதேவேளை, ஒதுக்குச் சொத்துக்களின் கொடுக்கல் வாங்கல்களில் கணிசமான அதிகரிப்பின் போதும் நிதியியல் சொத்துக்களின் தேறிய கையேற்பு 2012இன் ஐ.அ.டொலர் 1,177 மில்லியனிலிருந்து 2013இல் ஐ.அ.டொலர் 955 மில்லியனுக்கு 18.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு வங்கித்தொழில் துறையினால் வைத்திருக்கப்பட்ட நாணயம் மற்றும் வைப்புக்களிலேற்பட்ட வீழச்சியே முக்கிய காரணமாகும்.

### 5.7.1 நேரடி முதலீடுகள்

**உலகளாவிய பொருளாதாரத்தில் ஏற்பட்ட படிப்படியான மீட்சி, மேம்பட்ட முதலீட்டாளர் மனோபாவம் என்பனவற்றின் காரணமாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2013இல் பலமானதாக விளங்கியதுடன் உறுதியான பேரண்டப் பொருளாதாரச் சூழல் இதற்கு பக்கபலமாக விளங்கியது.** 2013இல் மொத்த நேரடி முதலீடுகள்[5]

**வரைபடம் 5.11 நிதியியல் கணக்குகளுக்கான உட்பாய்ச்சல்கள்**




2012இன் ஐ.அ.டொலர் 941 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 916 மில்லியனாகக் காணப்பட்டது. மொத்த நேரடி முதலீடுகள் முதலீட்டுச் சபைக் கம்பனிகளினால் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 887 மில்லியனையும் முதலீட்டுச் சபையல்லா கம்பனிகளினால் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 24 மில்லியனையும் மற்றும் முதலீட்டுச் சபையுடன் பதிவு செய்யப்படாமல் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 7 மில்லியனையும் உள்ளடக்கியிருந்தன. 2013இன் ஐ.அ.டொலர் 887 மில்லியன் கொண்ட நேரடி முதலீடுகளுக்குப் புறம்பாக, முதலீட்டுச் சபைக் கம்பனிகளும் ஐ.அ.டொலர் 505 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கடன்களை பெற்று, இதன் மூலம் கடன்கள் உட்பட முதலீட்டுச் சபைக் கம்பனிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2012இன் ஐ.அ.டொலர் 1,279 மில்லியனிலிருந்து 2013இல் 1,391 மில்லியனுக்கு அதிகரித்தது. இவ்வுட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 16 மில்லியன் கொண்ட பங்குரிமை மூலதனத்தையும் பங்குடமையாளர்களினால் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 370 மில்லியன் கொண்ட கடன்கள் மற்றும் முற்பணங்களையும் உள்ளகக் கம்பனிகளின் ஐ.அ.டொலர் 149 மில்லியன் கொண்ட கடன்பாடுகளையும் ஐ.அ.டொலர் 350 மில்லியன் கொண்ட பிடித்துவைக்கப்பட்ட வருவாய்களின் மீள்முதலீடுகளையும் ஐ.அ.டொலர் 505 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கடன்களையும் உள்ளடக்கியிருந்தது. இதன் விளைவாக, வெளிநாட்டுக் கடன்களையும் உள்ளடக்கிய மொத்த நேரடி முதலீடு 2012இன் ஐ.அ.டொலர் 1,382 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 1,421 மில்லியனாகக் காணப்பட்டது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, முதலீட்டுச் சபைக் கம்பனிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உள்ளிட்ட மொத்த நேரடி முதலீடுகள் 2013இல் 2.1 சதவீதமாகக் காணப்பட்டது.

**2013இல் உட்கட்டமைப்பு மற்றும் தயாரிப்புத் துறைகள் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்களில் உயர்ந்த அளவினைக் கவர்ந்து கொண்டன.** தொலைபேசி மற்றும் தொலைத் தொடர்பூட்டல் வலையமைப்பு, வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி மற்றும் துறைமுகங்கள் மற்றும் கொள்கலன் முனைக்கோடிகள் என்பனவற்றிற்கான முக்கிய முதலீடுகளுடன் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சலில் உட்கட்டமைப்பிற்கான பங்கு மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் 56.5 சதவீதமாக விளங்கியது. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் இரசாயனங்கள், நிலக்கரி மற்றும் பெற்றோலிய கைத்தொழில்களில் செய்யப்பட்ட முக்கிய முதலீடுகளுடன் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் தயாரிப்புத் துறை 25.9 சதவீதத்தினைக் கவர்ந்து கொண்டது. அதேவேளை, சுற்றுலாக் கைத்தொழில், கல்வித் துறையில் காணப்பட்ட அதிகரித்த வெளிநாட்டு முதலீடுகள், தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளில் காணப்பட்ட தொடர்ச்சியான விரிவாக்கத்துடன் பணிகள் துறை 2013இன் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் 17.0 சதவீதத்தினைக் கவர்ந்து கொண்டது. அதேவேளை வெளிநாட்டு நேரடி முதலீட்டின் வெளிப்பாய்ச்சல்கள் 2012இன் ஐ.அ.டொலர் 64 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 65 மில்லியனாகக் காணப்பட்டது. புதிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெறுவதற்கான குறிப்பிடத்தக்க சாத்தியங்கள் காணப்படுவதனைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் மூலதனக் கடப்பாடுகள் 2012 உடன் ஒப்பிடுகையில் 2013இல் 15.3 சதவீதத்தினால் அதிகரித்தன. மேலும், 2014 இற்காக ஆயத்த நிலையிலிருக்கும் செயற்றிட்டங்களும் 2013 இற்காக ஆயத்த நிலையிலிருந்த செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தன.

## 5.7.2 சொத்துப்பட்டியல் முதலீடு

### பங்குரிமை மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள்

**'பங்குரிமை மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள்' வடிவிலான உட்பாய்ச்சல்கள் 2013இல் பாரிய மீளெழுச்சியைக் காட்டின.** கொழும்புப் பங்குச் சந்தையின் மொத்த வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 270 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இதில், ஐ.அ.டொலர் 263 மில்லியன் பங்குரிமை மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள்[6] வடிவில் காணப்பட்ட வேளையில்

5 வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவர் இலங்கைக் கம்பனியொன்றில் 10 சதவீதம் அல்லது அதற்குக் கூடுதலான வாக்குரிமையுள்ள பங்குகளைக் கொண்டிருப்பாராயின், அத்தகைய வெளிநாட்டு முதலீடானது சென்மதி நிலுவை கைநூல் 6 இன்படி நேரடிய முதலீடாக வகைப்படுத்தப்படும். மேலும், எந்தவொரு தொடர்பற்ற மூலங்களிலிருந்தும் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளினால் பெறப்படும் வெளிநாட்டுக் கடன்கள் வெளிநாட்டு நேரடி முதலீட்டிலிருந்து நீக்கப்பட்டதுடன் கடன்களின் கடன்களின் கீழ் பதியப்பட்டது.

சிறப்பு குறிப்பு 6


## வெளிநாட்டு கணக்கு தொகுத்தலில் மிகப்பிந்திய சென்மதி நிலுவை கையேட்டிற்கு இலங்கையின் நிலைமாற்றம்

பன்னாட்டு நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்ட சென்மதி நிலுவை கையேடானது பன்னாட்டு வெளிநாட்டு கணக்கு தொகுத்தலிற்கு பிரயோகிக்கக்கூடிய பன்னாட்டு நியமங்கள் மற்றும் விதிமுறைகள் என்பவற்றைக் குறிப்பிடுகின்றது. 1948 ஆம் ஆண்டிலிருந்து பன்னாட்டு நாணய நிதியமானது ஆறு பதிப்புக்களை வெளியிட்டுள்ளதுடன் ஒவ்வொரு வெளியீடும் உலகலாவிய பொருளாதார மற்றும் நிதியியல் அபிவிருத்திகள், பகுப்பாய்வு சட்டகங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் கடந்த ஆண்டுகளில் தொகுப்பாளர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்கள் என்பவற்றுக்கு இணங்க அறிமுகப்படுத்தப்பட்டன.

சென்மதி நிலுவை புள்ளிவிபரங்கள், பன்னாட்டு முதலீட்டு நிலை (International Investment Position - IIP) மற்றும் நிதிச்சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கணக்குகளில் ஏற்படுகின்ற ஏனைய மாற்றங்கள் என்பன பன்னாட்டு கணக்கு கூறுக்களின் பிரதான கூறுகளாகும். வரைபடம் சி.கு. 6.1 ஆனது பன்னாட்டு கணக்குகளில் எவ்வாறு மூன்று வகையான புள்ளிவிபரங்களும் ஒன்றிற்கொன்று இணைக்கப்பட்டுள்ளன என்பதனைக் காட்டுகின்றது.

வரைபடம் சி.கு. 6.1

**பன்னாட்டு கணக்குகள்**




மிகப்பிந்திய சென்மதி நிலுவை கையேட்டில் சென்மதி நிலுவை மற்றும் பன்னாட்டு முதலீட்டு நிலை என்பவற்றின் ஆறாவது பதிப்பு கையேடானது பிரதான புதிய பகுதிகளில் கவனம் செலுத்துகிறது. ஆறாவது சென்மதி நிலுவை கையேடானது ஏனைய பேரண்டப் பொருளாதார புள்ளிவிபரங்களுடன் வெளிநாட்டுத்துறை புள்ளி விபரங்களை ஒருங்கிணைத்தலை பலப்படுத்தல், சிறப்பியல்புவாய்ந்த கையேடுகள் மற்றும் வகைப்படுத்தல் முறைமைகளை கவனத்திற் கொள்ளல் (உ.ம்., தேசிய கணக்கீட்டு முறைமை 2008) என்பவற்றுடன் பன்னாட்டு முதலீட்டு நிலை மற்றும் ஐந்தொகை அணுகுமுறையுடன் தொடர்புபட்ட அபிவிருத்திகளை அடையாளப் படுத்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், ஆறாவது சென்மதி நிலுவை கையேடானது உலகலாவிய நிதியியல் மற்றும் தொழில்நுட்பவியல் புத்துருவாக்கங்களை உள்ளடக்குவதுடன் தெரிவு செய்யப்பட்ட பரப்புக்களை தெளிவுபடுத்துவதோடு (உ.ம்., குடியிருப்பு, பொருளாதார உரிமை மற்றும் நேரடி முதலீட்டின் பரப்பு) விசேட விடயங்களினுடனும் ஈடுபடுகிறது. ஆறாவது சென்மதி நிலுவை கையேடானது பன்னாட்டு முதலீட்டு நிலைக்கு மிகவும் முக்கியத்துவத்தை வழங்கியிருந்தபோதிலும் (தயவுசெய்து சிறப்புக் குறிப்பு 7இனைப் பார்க்கவும்) சென்மதி நிலுவை கையேட்டின் ஐந்தாவது பதிப்பின் அடிப்படை சட்டகங்களானது ஆறாவது சென்மதி நிலுவை கையேட்டில் மாற்றமடையாதிருந்திருந்ததுடன் நடைமுறை, மூலதன மற்றும் நிதிக்கணக்குகளின் சமர்ப்பிப்பும் பேணப்பட்டிருந்தது.

ஆறாவது சென்மதி நிலுவை கையேடானது 2009 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப் பட்டிருப்பினும் அநேகமான நாடுகள் இதனைப் பின்பற்றுவதில் இன்னமும் அதனது மாற்றத்திற்குள்ளாகும் கட்டத்திலேயே காணப்படுகின்றன. ஆறாவது சென்மதி நிலுவை கையேட்டின் அடிப்படையில் சென்மதி நிலுவை மற்றும் பன்னாட்டு முதலீட்டு நிலை என்பவற்றின் வெளியீட்டுடன் இக்கையேட்டினை பிராந்தியத்தில் பின்பற்றுகின்ற முதல் சில நாடுகளின் வரிசையில் இலங்கையும் இணைந்துள்ளது. இலங்கைக்கு பிரயோகிக்கக்கூடிய தன்மை மற்றும் தரவுகளின் கிடைப்பனவு என்பவற்றிற்கேற்ப இலங்கையானது ஆறாவது சென்மதி நிலுவை கையேட்டின் பரிந்துரைகளை செயற்படுத்துவதில் இயன்றளவில் முற் போக்கான அனுகுமுறையினை பின்பற்றுகின்றது. ஆறாவது சென்மதி நிலுவை கையேட்டுப் பின்பற்றுதலுடன் இலங்கையில் சென்மதி நிலுவையின் பகுப்பாய்வு சமர்ப்பிப்பானது முன்னைய வடிவமைப்புடன் ஒப்பிடுமிடத்து பின்வரும் பிரதான மாற்றங்களை கொண்டுள்ளது.

### பொருட்கள் மற்றும் பணிகள் கணக்கு

பொருட்கள் மற்றும் பணிகள் கணக்கானது உற்பத்தி நடவடிக்கைகளின் வெளியீடுகள் தொடர்பான விடயங்கள் தொடர்பில் வதிவுள்ளோர் மற்றும் வதிவற்றோருக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களை காட்டுகின்றது. பொருட்கள் கணக்கானது பொது வணிகப்பொருட்கள் மற்றும் நாணயமற்ற தங்கம் என்பவற்றை காட்டுவதுடன் பணிகள் கணக்கானது போக்குவரத்து, பயணம், கட்டடவாக்கம், காப்புறுதி மற்றும் ஓய்வூதிய சேவைகள், நிதிச் சேவைகள், தொலைத்தொடர்பூட்டல், கணணி மற்றும் தகவல் சேவைகள், ஏனைய வியாபார சேவைகள் மற்றும் அரசாங்க பண்டங்கள் மற்றும் பணிகள் (வேறு இடத்தில் உள்ளடக்கப்படாத) என்பவற்றை காட்டுகின்றது.

- **பொருட்கள்:** பொருளாதார உரிமைகளில் எவ்விதமான மாற்றங்களும் ஏற்படாததன் விளைவாக புலம்பெயர்ந்தோரின் தனிப்பட்ட விளைவுகள் பொதுவான வியாபார சேவைகளிலோ அல்லது பன்னாட்டு கணக்குகளின் ஏதாவதொரு இடத்திலோ உள்ளடக்கப்படவில்லை.

- **பணிகள்:** முன்னைய சமர்ப்பிப்பின் பணிகள் கணக்கின் உப வகைப்படுத்தல்களுக்கு மேலதிகமாக தற்போதைய வெளிப்படுத்தலின் கீழ் **நிதியியல் பணிகள் தனியானதொரு உபவகையாகக் காணப்படுகிறது, உ.ம்., வங்கிக்கட்டணம் மற்றும் தரகுகள்.**

### முதன்மை வருமான கணக்கு

முதன்மை வருமான கணக்கானது வதிவுள்ளோரின் உற்பத்தி செயன்முறைக்கான பங்களிப்பு அல்லது நிதிச் சொத்துக்களின் ஒதுக்கீடு மற்றும் வதிவற்றோருக்கு வழங்கப்படுகின்ற இயற்கை வளங்களுக்கான வாடகை என்பவற்றிற்காக சேரவேண்டிய

வரவினை காட்டுகின்றது. அதற்கிணங்க, முதன்மை வருமான கணக்கானது ஊழியர்களின் நட்டஈடு மற்றும் முதலீட்டு வருமானம் என்பவற்றை உள்ளடக்குகின்றது. **முன்னைய புள்ளிவிபர சமர்ப்பிப்பில் காணப்பட்ட வருமான கணக்கீடானது தற்போதைய ஆறாவது சென்மதி நிலுவை கையேட்டில் முதன்மை வருமான கணக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது.**

**இரண்டாம் வருமான கணக்கு**

இரண்டாம் வருமான கணக்கானது வதிவுள்ளோர் மற்றும் வதிவற்றோருக் கிடையிலான நடைமுறை மாற்றல்களை காட்டுகின்றது. மாற்றல்கள் காசாகவோ அல்லது பொருளாகவோ இருக்கலாம். **முன்னைய வடிவமைப்பில் காணப்பட்ட "நடைமுறை மாற்றல்கள்"ஆறாவது சென்மதி நிலுவை கையேட்டில் இரண்டாம் வருமானம் என பிரதியீடு செய்யப்பட்டுள்ளது.**

**மூலதன கணக்கு**

மூலதன கணக்கானது (அ) வதிவுள்ளோர் மற்றும் வதிவற்றோருக்கு இடையில் பெற வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய மூலதன மாற்றல்கள் மற்றும் (ஆ) வதிவுள்ளோர் மற்றும் வதிவற்றோருக்கு இடையில் உற்பத்தி செய்யப்படாத, நிதியியல் சாராத சொத்துக்களின் கையகப்படுத்தல் மற்றும் விற்பனை என்பவற்றை காட்டுகின்றது.

- **தனியாள் விளைவுகள், நிதியியல் சொத்துக்கள், மற்றும் வதிவினை மாற்றுகின்ற தனியாளின் பொறுப்புக்கள் என்பன மூலதன மாற்றல்களில் இனிமேல் உள்ளடக்கப்படமாட்டாது.**
- **மூலதன கணக்கானது நிதியியல் கணக்குடன் மென்மேலும் வகைப்படுத்தப்படவில்லை.** அதற்கு பதிலாக அது நடைமுறை கணக்குடன் பிணைக்கப்பட்டுள்ளது. நடைமுறை மற்றும் மூலதன கணக்கின் நிலுவையானது பொருளாதாரத்தின் தேறிய கடன் வழங்கல் அல்லது தேறிய கடன்பாட்டை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.


**நிதியியல் கணக்கு**

நிதியியல் கணக்கானது வதிவுள்ளோர் மற்றும் வதிவற்றோருக்கு இடையில் மேற்கொள்ளப்படுகின்ற நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் ஈடுபடும் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்கின்றது.

- நடைமுறை மற்றும் மூலதன கணக்கின் நிலுவை எண்ணக்கரு ரீதியல் நிதிக்கணக்கிற்கு சமனாவதுடன் நிதிக்கணக்கின் நிலுவைக்கு வதிவற்றோரிலிருந்து பெறப்பட்ட தேறிய கடன்வழங்கல் அல்லது கடன்பாடுகள் எவ்வாறு நிதியிடப்படுகின்றது என்பதனை அளவிடுகின்றது.
- நிதியியல் கணக்கானது **'வரவு'** மற்றும் **'செலவு'** என்வற்றிற்கு பதிலாக **'நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப்படுத்துகை'** மற்றும் **'பொறுப்புக்களின் தேறிய நிகழ்வுகள்'** போன்ற தலைப்புக்களைப் பயன்படுத்துகின்றது.
- நிதியியல் கணக்கானது வெவ்வேறாக காட்டப்பட்டுள்ள நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கான கொடுக்கல்வாங்கல்களை தேறிய நியதிகளில் காட்டுகின்றது. (உ.ம்., நிதியியல் சொத்துக்களின் தேறிய கொடுக்கல் வாங்கல்களானது சொத்துக்களின் தேறிய பொறுப்பினை அல்லாமல் சொத்துக்களின் கையகப்படுத்துகை கழி சொத்துக்களின் குறைப்பினை காட்டுகிறது).
- முன்னைய மற்றும் தற்போதைய வெளியீடுகளின்படி நிதிக் கணக்கில் காணப்படுகின்ற அடிப்படையான மாற்றம் யாதெனில் முன்னைய வெளியீடானது 'நிறுவன ரீதியிலான துறையை' அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் அது சில வகைகள் முதிர்வின் அடிப்படையில் 'நீண்டகாலம்' மற்றும் ' குறுங்காலம்' என மேலும் பிரிக்கப்பட்டிருந்த அதேவேளை நிதியியல் கணக்கிலான புதிய வெளிப்படுத்துகை நேரடி முதலீடு, சொத்துப் பட்டியல் முதலீடு, நிதியியல் பெறுதிகள், ஏனைய முதலீடுகள் மற்றும் ஒதுக்கு சொத்துக்கள் போன்ற பெயர்களைக் கொண்ட 'நிதியியல் கருவிகளை' அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கருவி வகைக்குள்ளும், 'நிறுவன ரீதியிலான துறைகளும்' உப துறைகளாகத் தோன்றுகின்ற அதேவேளை அவை முதிர்வின் அடிப்படையில் ஒன்றில் 'நீண்டகாலம்' அல்லது 'குறுங்காலம்' என மேலும் பிரிக்கப்பட்டுள்ளன. ஆகையால், முன்னைய வடிவமைப்பில் காணப்பட்ட அநேகமான தரவு வகைகள் கூறுபடுத்தப்பட்டுள்ளதுடன் புதிய வடிவமைப்பின்படி வேறுபட்ட உப வகைகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. வரைபடம் 1 இல் காட்டப்பட்டிருந்த பிரதான மாற்றங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன:

அ) முன்னைய சமர்ப்பிப்பின் கீழான **'அரசாங்கம்: நீண்டகாலம்'** கொடுக்கல் வாங்கல்கள் நீண்டகால படுகடன் பிணையங்களாக நிதியியல் பாய்ச்சல்கள் மற்றும் அரசாங்கத்திற்கான செயற்றிட்ட கடன்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. புதிய வடிவமைப்புடன், நீண்டகால படுகடன் பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்கல்கள் 'பொது அரசாங்கத்தின்' நீண்டகால 'படுகடன் பிணையங்களின்' கீழ் காணப்படுகின்ற சொத்துப் பட்டியல் முதலீட்டின்

**வரைபடம் சி.கு. 6.2 சென்மதி நிலுவை வெளிப்படுத்துகைப் பகுப்பாய்வின் பிரதான மாற்றங்கள்**



கீழ் தோன்றுகின்ற அதேவேளை 'அரசாங்கத்திற்கான செயற்றிட்ட கடன்கள்' 'ஏனைய முதலீட்டு' வகையின் கீழாகக் காணப்படுகின்ற 'பொது அரசாங்கத்தின்' நீண்டகால 'கடன்கள்' என்பதன் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன.

ஆ) முன்னைய சமர்ப்பிப்பில் 'குறுங்கால - சொத்துப் பட்டியல் முதலீடு' என வகைப்படுத்தப்பட்டிருந்த சொத்துப் பட்டியல் முதலீடானது கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் வெளிநாட்டு முதலீடுகளுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கியிருந்தது. புதிய வடிவமைப்புடன், முதலீட்டாளர் 10 சதவீதம் அல்லது அதற்கு மேலான உரிமையினை உள்நாட்டு நிறுவனங்களுடன் வாக்குப் பலத்துடன் கொண்டிருப்பதன் அடிப்படையில் சொத்துப் பட்டியல் முதலீடானது ஒன்றில் 'நேரடி முதலீடு' அல்லது 'இருப்பு மற்றும் முதலீட்டு நிதி பங்குகள்' சொத்துப் பட்டியல் முதலீட்டின் கீழ் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அத்தகைய முதலீடுகள் 'நேரடி முதலீடு' என கருதப்படுகின்றது. 10 சதவீதத்தை காட்டிலும் குறைவாகக் காணப்படுமாயின் அத்தகைய முதலீடுகள் 'சொத்துப் பட்டியல் முதலீடு' என்ற வகையின் கீழ் 'இருப்பு மற்றும் முதலீட்டு நிதி பங்குகள்' என பதியப்படும்.

இ) முன்னைய சமர்ப்பிப்பில் 'தனியாள் - குறுங்காலம்' என்ற வகையின் கீழான கொடுக்கல் வாங்கல்கள் வர்த்தக கொடுகடன்கள் மற்றும் தனியார் துறையினரால் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. தற்போது அவை 'ஏனைய முதலீடுகள்' என்ற வகையின் கீழ் 'வர்த்தகக் கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள்' என்பதன் கீழும் பதியப்படுகின்றன.

ஈ) முன்னைய சமர்ப்பிப்பின்படி வர்த்தக வங்கிகளின் சொத்துக்களும் பொறுப்புக்களும் 'நிதியியல் கருவிகள்' என்பவற்றின் அடிப்படையில் கூறுபடுத்தப்படவில்லை. புதிய சமர்ப்பிப்பு வடிவமைப்பில், பொருத்தமான நிதியியல் கருவிகளின் பிரகாரம் 'வர்த்தக வங்கிகள்' மாத்திரமன்றி ' சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்' மற்றும் 'பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்' என்பவை வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன் விளைவாக, பொருத்தமான நிதியியல் கருவிகளின் வகைப்படுத்தலின்படி வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் தேறிய கொடுக்கல் வாங்கள்கள் 'கடன்கள்', 'படுகடன் பிணையங்கள்', 'நாணயம் மற்றும் வைப்புக்கள்' அல்லது 'ஏனைய கணக்கு பெறுவனவுகள்/செலுத்தல்கள்' என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

உ) முன்னைய சமர்ப்பிப்பின் கீழ் தனியான வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ள 'நாணய அசைவுகள்' மத்திய வங்கியினால் முகாமை செய்யப்படும் 'ஒதுக்குச் சொத்துக்கள்' மற்றும் ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்புக்கள் என்பவறின் கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கியிருந்தது. புதிய வடிவமைப்புடன், 'நாணய அசைவுகளானவை' மத்திய வங்கியினால் முகாமை செய்யப்படும் நிதியியல் சொத்துக்களுடன் 'ஒதுக்குச் சொத்துக்கள்' என தனியாக உள்ளடக்கப்பட்டு வருகின்ற அதேவேளை, மத்திய வங்கியின் வெளிநாட்டு பொறுப்புக்கள் 'நாணயம் மற்றும் வைப்புக்களின்' கீழ் பன்னாட்டு நிறுவனங்களுடனான வைப்புப் பொறுப்புக்களிலும், 'கடன்கள்' என்பதன் கீழ் ப.நா.நிதியத்துடன் கொடுகடன் மற்றும் கடன்கள், 'ஏனைய செலுத்தத்தக்க கணக்குகளின்' கீழ் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியப் பொறுப்புக்கள் பொருத்தமான நிதிக் கருவியின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன.

நிதியியல் கணக்கின் ஒவ்வொரு கூறுகளிற்கும் ஆறாவது சென்மதி நிலுவை கையேட்டிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் மாற்றங்களானவை இவ்வாண்டறிக்கையின் 'இலங்கைக்கான பன்னாட்டு முதலீட்டு நிலையை தொகுத்தல்' எனும் தலைப்பின் கீழான சிறப்புக் குறிப்பு 7இல் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளது.

ஐ.அ.டொலர் 7 மில்லியன் நேரடி முதலீடுகளாக இருந்தது. கொழும்புப் பங்குச் சந்தைக்கான பங்குரிமை மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகளிலிருந்தான தேறிய உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 172 மில்லியன் கொண்ட இரண்டாந்தரச் சந்தை தொழிற்பாடுகளையும் முதலாந்தரச் சந்தைக்கான உட்பாய்ச்சல்களான ஐ.அ.டொலர் 91 மில்லியனையும் உள்ளடக்கியிருந்தது. முதலாந்தரச் சந்தைக்கான உட்பாய்ச்சல்கள் முக்கியமாக ஐ.அ.டொலர் 83 மில்லியன் கொண்ட உரிமை வழங்கல்களிலிருந்தான உட்பாய்ச்சல்களை உள்ளடக்கியிருந்தது.

## படுகடன் பிணையங்கள்

**அரசாங்கத்தினதும் வங்கித்தொழில் துறையினதும் படுகடன் பிணையங்களின் வழங்கல்களிலிருந்து நிதியியல் கணக்கிற்கு கணிசமான உட்பாய்ச்சல்கள் பெறப்பட்டன.** பன்னாட்டு பிணையங்கள் சந்தையில் இலங்கை வங்கித்தொழில் துறையின் நிலைமையைப் பலப்படுத்துவதற்காக ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் இரண்டு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் 2012இல் வழங்கிய ஐ.அ.டொலர் 500 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 1.35 பில்லியன் பெறுமதியான பன்னாட்டுப் பிணையங்களை வழங்கின. இது தேசிய சேமிப்பு வங்கியினால் வழங்கப்பட்ட 5 ஆண்டு ஐ.அ.டொலர் 750 மில்லியன் கொண்ட பன்னாட்டு முறிகளையும் இலங்கை வங்கியினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 500 மில்லியனையும் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 100 மில்லியனையும் உள்ளடக்கியிருந்தது. அதேவேளை, திறைசேரி உட்பாய்ச்சல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட முதலீடு 2013இல் அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகளுக்கான உச்ச அளவினை முழுமையாகப் பலப்படுத்தும் மட்டத்தினை அடைந்து ஐ.அ.டொலர் 493 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல்களைத் தோற்றுவித்தது.

6 இலங்கை கம்பனியொன்றின் 10 சதவீதத்திற்கும் குறைவான வாக்குரிமையுள்ள பங்குகளைக் கொண்டிருக்கும் தனிப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 'உரிமை மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள்' ஆகக் கருதப்படுவதுடன் முதலீட்டுச் சொத்துப்பட்டியல் வகையின் கீழ் அறிக்கையிடப்பட்டன.

அட்டவணை 5.8 அ

**நிதியியல் கணக்கு**

**(பீ.பி.எம்.6 சமர்ப்பிப்பு வடிவமைப்பு)**

ஐ.அ.டொ.மில்லியன்

| வகை | 2012 (அ) நிதியியல் சொத்துக்களில் தேறிய கைப் படுத்துகை | 2012 (அ) பொறுப்புக்களின் தேறிய செலவீடு | 2013 (ஆ) நிதியியல் சொத்துக் களில் தேறிய கைப் படுத்துகை | 2013 (ஆ) பொறுப்புக்களின் தேறிய செலவீடு |
|---|---|---|---|---|
| நிதியியல் கணக்கு | 1,177 | 5,440 | 955 | 4,081 |
| நேரடி முதலீடுகள் | 64 | 941 | 65 | 916 |
| மூலதனம் மற்றும் முதலீட்டு நிதி பங்குகள் | 64 | 360 | 65 | 373 |
| வருமானத்தின் மீள் முதலீடு தவிர்ந்த மூலதனப் பங்கு | 64 | 111 | 65 | 23 |
| நேரடி முதலீட்டு முயற்சிகளில் நேரடி முதலீட்டாளர் | 64 | 111 | 65 | 23 |
| பீஓஐ கம்பனிகள் | - | 12 | - | 16 |
| சிஎஸ்ஈ கம்பனிகள் (பீஓஐ உடன் பதியப்படாதவை) | - | 33 | - | 7 |
| ஏனைய கம்பனிகள் | - | 67 | - | - |
| வருமானத்தின் மீள் முதலீடு | - | 249 | - | 350 |
| படுகடன் கருவிகள் | - | 581 | - | 542 |
| நேரடி முதலீட்டு முயற்சிகளில் நேரடி முதலீட்டாளர் | - | 581 | - | 542 |
| பீஓஐ கம்பனிகள் | - | 581 | - | 518 |
| பங்குதாரர் முற்பணங்கள் | - | 364 | - | 370 |
| கம்பனிகளுக்கிடையிலான கடன்கள் | - | 217 | - | 150 |
| சிஎஸ்ஈ கம்பனிகள் (பீஓஐ உடன் பதியப்படாதவை) | - | - | - | 22 |
| சொத்துப்பட்டியல் முதலீடுகள் | | | | |
| மூலதனம் மற்றும் முதலீட்டு நிதி பங்குகள் | -10 | 2,116 | ... | 2,106 |
| சிஎஸ்ஈ கம்பனிகள் (பீஓஐ உடன் பதியப்படாதவை) | - | 272 | - | 263 |
| படுகடன் கருவிகள் | - | 272 | - | 263 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | -10 | 1,844 | ... | 1,843 |
| நீண்ட காலம் | -10 | 500 | ... | 1,350 |
| பொது அரசாங்கம் | -10 | 500 | ... | 1,350 |
| குறுங்காலம் (திறைசேரி உண்டியல்கள்) | - | 1,343 | - | 493 |
| நீண்டகாலம் | - | 38 | - | -80 |
| திறைசேரி முறிகள் | - | 1,306 | - | 572 |
| நாட்டுக்கான முறிகள் | - | 806 | - | 572 |
| | - | 500 | - | - |
| நிதியியல் பெறுதிகள் | | | | |
| | - | - | - | - |
| ஏனைய முதலீடு | | | | |
| நாணயமும் வைப்புக்களும் | 363 | 2,384 | -222 | 1,060 |
| மத்திய வங்கி | 162 | 447 | -459 | 108 |
| குறுங்காலம் | - | -24 | - | -199 |
| நீண்ட காலம் | - | - | - | -200 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | -24 | - | 1 |
| குறுங்காலம் | 162 | 471 | -459 | 307 |
| நீண்ட காலம் | 52 | 471 | -221 | 307 |
| | 110 | - | -238 | - |

பக்கம் 198 இல் தொடர்கிறது.

| விசேட விடயங்கள் | 2012 (அ) | 2013 (ஆ) |
|---|---|---|
| சீஎஸ்ஈ இற்கான மொத்த தேறிய உட்பாய்ச்சல்கள் | 305 | 270 |
| நேரடி முதலீடுகள் | 33 | 7 |
| சொத்துப்பட்டியல் முதலீடுகள் | 272 | 263 |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் மீதான தேறிய முதலீடுகள் (நாட்டுக்கான முறிகள் நீங்கலாக) | 843 | 493 |
| வெளிநாட்டு கொள்வனவுகள் | 2,236 | 2,434 |
| வெளிநாட்டு விற்பனைகள் | 1,393 | 1,941 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
குறிப்பு: பீஓஐ = முதலீட்டுச்சபை
சீஎஸ்ஈ = கொழும்புப்பங்கு பரிவர்த்தனை

## 5.7.3 ஏனைய முதலீடுகள்

### நாணயம் மற்றும் வைப்புக்கள்

**2013இல் நாணயம் மற்றும் வைப்புக்களின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான சொத்துக்கள் வீழ்ச்சியடைந்த வேளையில் பொறுப்புக்கள் அதிகரித்தன.** நாணயம் மற்றும் வைப்புக்கள் 2012இன் ஐ.அ.டொலர் 162 மில்லியன் கொண்ட தேறிய அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் சொத்துக்களில் ஐ.அ.டொலர் 459 மில்லியன் கொண்ட தேறிய வீழ்ச்சியைப் பதிவு செய்தமைக்கு வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் நாணயம் மற்றும் வைப்புச் சொத்து நிலைமையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகளே காரணமாகும். மேலும், மத்திய வங்கியின் பொறுப்புக்கள் ஐ.அ.டொலர் 199 மில்லியனால் குறைவடைந்தமையின் விளைவாக நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்புக்கள் 2013இல் ஐ.அ.டொலர் 108 மில்லியன் கொண்ட தேறிய அதிகரிப்பொன்றினைப் பதிவு செய்தமைக்கு பன்னாட்டு நாணய பரஸ்பர பரிமற்றல் ஒழுங்குகளின் மீள்கொடுப்பனவுகளும் வர்த்தக வங்கிகளின் பொறுப்புக்களில் ஏற்பட்ட ஐ.அ.டொலர் 307 மில்லியன் கொண்ட அதிகரிப்புமே (முக்கியமாக வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குப் பொறுப்புக்கள்) முக்கிய காரணங்களாகும்.

### கடன்கள்

**வெளிநாட்டுக் கடன்களின் உட்பாய்ச்சல்கள் 2013இலும் தொடர்ந்து இடம்பெற்றன.** அரசாங்கம், மத்திய வங்கி வைப்புக்களை ஏற்கின்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை என்பனவற்றிற்கான வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்கள் 2012இன் ஐ.அ.டொலர் 4,234 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 2,922 மில்லியனாக விளங்கியது. ப.நா. நிதியம் - துணைநில் ஒழுங்குகளின் கொடுப்பனவு வடிவில் இடம்பெற்ற உயர்ந்த படுகடன் மீள்கொடுப்பனவுகள் மற்றும் தனியார் துறையின் மீள்கொடுப்பனவுகள் என்பனவற்றின் விளைவாக நிதியியல் கணக்கிலுள்ள மொத்தக் கடன்களின் தேறிய அதிகரிப்பு 2013இல் ஐ.அ.டொலர் 1,018 மில்லியனாக விளங்கியது. இது 2012இல் தேறிய பெறுகையான ஐ.அ.டொலர் 3,070 மில்லியனுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவானதாகும். மொத்த வெளிநாட்டுக் கடன் பெறுகைகளில் 90 சதவீதம் நீண்ட காலக் கடன்பாடுகள் வடிவிலேயே காணப்பட்டன. அரசாங்கத்திற்கான மொத்தக் கடன் உட்பாய்ச்சல்கள் 2012இன் ஐ.அ.டொலர் 1,854 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 1,677 மில்லியனாக விளங்கின. தேறிய அடிப்படையில் 2012இன் ஐ.அ.டொலர் 992 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 821 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல் காணப்பட்டதன் காரணமாக அரசாங்கத்திற்கான கடன் உட்பாய்ச்சல்கள் 17.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தன. அரசாங்கத்திற்கான மொத்தக் கடன் உட்பாய்ச்சலில் ஐ.அ.டொலர் 1,451 மில்லியன் சலுகை நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் பெறப்பட்ட வேளையில் ஐ.அ.டொலர் 226 மில்லியன் சலுகையல்லாக் கடன்கள், வர்த்தகக் கடன்கள் மற்றும் ஏற்றுமதிக் கடன்களின் கீழ் பெறப்பட்டன.

**அட்டவணை 5.8 ஆ**

## நிதியியல் கணக்கு
### (பீ.பி.எம்.6 சமர்ப்பிப்பு வடிவமைப்பு)

ஐ.அ.டொ.மில்லியன்

| வகை | 2012 (அ) | | 2013 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத்துக்களில் தேறிய கைப் படுத்துகை | பொறுப்புக்களின் தேறிய செலவீடு | நிதியியல் சொத்துக் களில் தேறிய கைப் படுத்துகை | பொறுப்புக்களின் தேறிய செலவீடு |
| ஏனைய முதலீடு (பக்கம் 197இலிருந்து தொடர்கிறது) | | | | |
| கடன்கள் | - | 3,070 | - | 949 |
| மத்திய வங்கி | - | 780 | - | -453 |
| ப.நா.நி. உடனான கொடுகன் மற்றும் கடன்கள் | - | 780 | - | -453 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | 579 | - | 124 |
| குறுங்காலம் | - | - | - | -124 |
| நீண்ட காலம் | - | 579 | - | 248 |
| பொது அரசாங்கம் | - | 992 | - | 821 |
| நீண்ட காலம் | - | 992 | - | 821 |
| ஏனைய துறைகள் (இ) | - | 719 | - | 456 |
| நீண்ட காலம் | - | 719 | - | 456 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | 90 | -571 | 195 | -54 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | -24 | - | 15 | - |
| குறுங்காலம் | -24 | - | 15 | - |
| ஏனைய துறைகள் (ஈ) | 114 | -571 | 180 | -54 |
| குறுங்காலம் | 114 | -571 | 180 | -54 |
| பெறவேண்டிய/செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள் | 111 | -563 | 42 | 58 |
| மத்திய வங்கி | - | -563 | - | 58 |
| குறுங்காலம் (உ) | - | -563 | - | 58 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 111 | - | 42 | - |
| குறுங்காலம் | 111 | - | 42 | - |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் (சிஎஉ) | - | - | - | - |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **760** | | **1,112** | |
| நாணயவியல் தங்கம் | 178 | | 351 | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | -0.5 | | 12 | |
| பா.நா. நிதியத்தில் ஒதுக்கு நிலைமை | - | | - | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | 583 | | 749 | |
| நாணயமும் வைப்புக்களும் | -801 | | 1,297 | |
| நாணய அதிகார சபைகள் மீதான பெறுகைகள் | -817 | | 1,462 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான பெறுகைகள் | 15 | | -165 | |
| பிணையங்கள் | 1,384 | | -548 | |
| படுகடன் பிணையங்கள் | 1,384 | | -548 | |
| நீண்ட காலம் | 1,384 | | -548 | |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **4,263** | | **3,126** | |
| **விசேட விடயங்கள்** | | | | |
| **அரசாங்கத்திற்கான நீண்டகால கடன்கள் (தேறிய)** | | **992** | | **821** |
| உட்பாய்ச்சல்கள் (பகிர்ந்தளிப்புக்கள்) | | 1,854 | | 1,677 |
| மீள்கொடுப்பனவுகள் | | 862 | | 856 |

(அ) திருத்தப்பட்டது

(ஆ) தற்காலிகமானது

(இ) அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் தனியார்துறை கம்பனிகளை உள்ளடக்குகின்றது

(ஈ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளின் வர்த்தக கொடுகடன்களை உள்ளடக்குகின்றது.

(உ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் தேறிய கொடுக்கல்வாங்கல்கள்

மூலம் : இலங்கை மத்திய வங்கி

மத்திய வங்கிக்கான பெறுகைகளின் நியதிகளில், 2012இன் ஐ.அ.டொலர் 780 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 453 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல் பதிவு செய்யப்பட்டமைக்கு ப.நா.நிதியம் துணைநில் ஒழுங்கு நிகழ்ச்சித்திட்டத்தின் மீள்கொடுப்பனவுகளே முக்கிய காரணமாகும்.

**வைப்புக்களை ஏற்கின்ற நிறுவனங்களின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் இவ்வாண்டுப் பகுதியில் தேறிய உட்பாய்ச்சலைப் பதிவு செய்தன.** உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் என்பனவற்றை உள்ளடக்கிய வைப்புக்களை ஏற்கின்ற நிறுவனங்களின் தேறிய கடன் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 124 மில்லியனாக விளங்கின. இது 2012இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 579 மில்லியனைவிட குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவானதாகும். 2013இல் கடன்பாடுகளில் ஏற்பட்ட குறைவிற்கு, வைப்புக்களை ஏற்கின்ற பெரும்பாலான நிறுவனங்கள் படுகடன் பிணையங்களை வழங்குவதன் மூலம் நீண்ட கால நிதியிடலைப் பெறுவதற்கு விருப்பம் கொண்டிருந்தமையே முக்கிய காரணமாகும். வைப்புக்களை ஏற்கின்ற நிறுவனங்களின் தேறிய கடன்பாடுகளில் ஐ.அ.டொலர் 225 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 23 மில்லியன் முறையே உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம் பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகளினாலும் பெறப்பட்ட நீண்ட காலக் கடன்பாடுகளாக இருந்த வேளையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் குறுங்காலக் கடன்பாடுகள் 2013இன் மொத்தத்தில் ஐ.அ.டொலர் 124 மில்லியனால் வீழ்ச்சியடைந்தன. 2013இல் தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான கடன்களின் உட்பாய்ச்சல்கள் 2012இன் ஐ.அ.டொலர் 964 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,120 மில்லியனாகக் காணப்பட்டன. இது அரசிற்குச் சொந்தமான நிறுவனங்களினால் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 425 மில்லியனையும் தனியார் துறையினால் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 695 மில்லியனையும் உள்ளடக்கியிருந்தது. தனியார் துறையினால் பெறப்பட்ட மொத்தக் கடன்களில் ஐ.அ.டொலர் 505 மில்லியன் முதலீட்டுச் சபையுடன் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளுக்குரியனவாகும். தனியார் துறைக்கான முக்கியமாக கடன் உட்பாய்ச்சல்கள் துறைமுகத்துடன் தொடர்பான பணிகள், தொலைத் தொடர்பூட்டல் பணிகள், நிதி மற்றும் குத்தகைப் பணிகள் மற்றும் தயாரிப்புத் துறைகளிலுள்ள கம்பனிகளுக்குரியனவாக இருந்தன. 2013இல் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான உட்பாய்ச்சல்கள் புத்தளம் நிலக்கரி வலுச் செயற்றிட்டத்தின் பொருட்டு லங்கா நிலக்கரி கம்பனி லிமிடெட்டிற்கான ஐ.அ.டொலர் 125 மில்லியனையும் மத்தள இராஜபக்ஷ பன்னாட்டு வானூர்திநிலையச் செயற்றிட்டத்தின் பொருட்டு வானூர்தி, வான் போக்குவரத்துப் பணிகள் (இலங்கை) லிமிடெட்டிற்கான ஐ.அ.டொலர் 26 மில்லியனையும் மற்றும் மகம் றுகுணுபுர மகிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் கட்டம் II

**அட்டவணை 5.9 2013இல் வெளிநாட்டுக் கடன் பெறுகைகளின் மூலம் நிதியிடப்பட்ட பிரதான செயற்றிட்டங்கள்**

| கடன் வழங்குநரும் செயற்றிட்டமும் | வழங்கப்பட்ட தொகை ஐ.அ.டொலர்கள் மில்லியன் |
|---|---|
| **சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கி** | 810 |
| இதில்; | |
| அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செயற்றிட்டம் - கட்டம் II | 236 |
| புத்தளம் நிலக்கரி செயற்றிட்டம் - கட்டம் II | 110 |
| மாத்தறை கதிர்காமம் புகையிரத விரிவாக்கல் செயற்திட்டம் | 85 |
| இலங்கை புகையிரத செயற்றிட்டத்திற்காக 13 டீசல் பல்புடை அலகுகளின் வழங்கல் | 43 |
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | 279 |
| இதில்; | |
| மோதலில் பாதிக்கப்பட்ட பிராந்தியத்திற்கான அவசர செயற்றிட்டம் | 41 |
| வடக்கு வீதி இணைப்புச் செயற்றிட்டம் | 35 |
| தூய சக்தி மற்றும் நுழைவு முன்னேற்ற செயற்றிட்டம் | 25 |
| தேசிய நெடுஞ்சாலை துறை செயற்றிட்டம் (மேலதிக நிதியிடல்) | 24 |
| கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 20 |
| **ஜப்பானிய அரசாங்கம்** | 265 |
| இதில்; | |
| கொழும்பு பெரும்பாக போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டம் - கட்டம் II | 93 |
| கொழும்பு பெரும்பாக போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டம் | 26 |
| மாகாண/கிராமிய வீதி அபிவிருத்தி செயற்றிட்டம் (மத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம் | 22 |
| நீர்த்துறை அபிவிருத்தி செயற்றிட்டம் - கட்டம் II | 17 |
| அவசர இயற்கை அனர்த்த மறுசீரமைப்பு செயற்றிட்டம் | 17 |
| **இந்திய அரசாங்கம்** | 189 |
| இதில்; | |
| ஓமந்தை - பளை, மடு - தலைமன்னார் மற்றும் மதவாச்சி புகையிரதப் பாதை | 130 |
| வடக்கு புகையிரத சேவைகளின் சீராக்கம் | 50 |
| **பன்னாட்டு அபிவிருத்தி சம்மேளனம்** | 171 |
| இதில்; | |
| வீதித்துறை உதவி செயற்றிட்டத்திற்கான இரண்டாவது மேலதிக நிதியிடல் | 35 |
| மாகாண வீதிகள் செயற்றிட்டம் | 27 |
| **சீன அபிவிருத்தி வங்கி கூட்டுத்தாபனம்** | 129 |
| இதில்; | |
| முன்னுரிமை வீதிகளின் முன்னேற்றம் மற்றும் மறுசீரமைப்பு | 81 |
| மொரகஹாகந்த அபிவிருத்தி செயற்றிட்டம் | 24 |
| **ருசியா அரசாங்கம்** | 65 |
| இதில்; | |
| ருசியாவின் கொடுகடன் வரிசை | 65 |
| **நெதர்லாந்தின் ரபோபாங்க்** | 55 |
| இதில்; | |
| இலங்கையின் தேசிய குருதியேற்றல் சேவைகளை மேம்படுத்தல் | 18 |
| அம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலை அபிவிருத்தி | 16 |
| **கொரிய குடியரசின் அரசாங்கம்** | 36 |
| இதில்; | |
| ருகுனுபுற நீர்வழங்கல் அபிவிருத்தி செயற்றிட்டம் | 15 |
| **மீள்கட்டுமான மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி** | 32 |
| இதில்; | |
| கொழும்புநகர அபிவிருத்தி செயற்றிட்டம் | 32 |

மூலம்: நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்

இன் பொருட்டு இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கான ஐ.அ.டொலர் 275 மில்லியனையும் உள்ளடக்கியிருந்தன. மேலும், 2013இல் நீண்ட காலப் படுகடன்களைத் திரட்டுவதற்கு 8 தனியார் துறைக் கம்பனிகளுக்கு மத்திய வங்கி ஒப்புதலை வழங்கியது. 2013இல் உயர்ந்த உட்பாய்ச்சல்கள் காணப்பட்ட போதும் மீள்கொடுப்பனவில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் தேறிய நீண்ட காலக் கடன்பாடுகளில் வீழ்ச்சியைத் தோற்றுவித்தது. இதன் விளைவாக, தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான தேறிய கடன் உட்பாய்ச்சல்கள் 2012இன் ஐ.அ.டொலர் 719 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 456 மில்லியனாகக் காணப்பட்டது.

## பெறத்தக்க/ கொடுபடத்தக்க வர்த்தகக் கொடுகடன் மற்றும் ஏனைய கணக்குகள்

**2013ஆம் ஆண்டுப் பகுதியில் பெறத்தக்க வர்த்தகக் கொடுகடன் அதிகரித்த வேளையில் கொடுபடத்தக்க வர்த்தகக் கொடுகடன் வீழ்ச்சியடைந்தது.** வதிவற்ற தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் ஐ.அ.டொலர் 195 மில்லியன் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்த வேளையில் இலங்கை கம்பனிகளினால் பெறப்பட்ட தேறிய வர்த்தகக் கொடுகடன் 2013இல் ஐ.அ.டொலர் 54 மில்லியனால் வீழ்ச்சியடைந்தது. பெறப்பட்ட தேறிய வர்த்தகக் கொடுகடனில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் எண்ணெய் இறக்குமதிச் செலவுகள் உயர்ந்தளவில் தீர்ப்பனவு செய்யப்பட்டமையே முக்கிய காரணமாகும். மேலும், மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்பட்ட ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியப் பொறுப்புக்களாக இருக்கும் ஏனைய செலுத்தத்தக்க கணக்குகள் 2013இல் ஐ.அ.டொலர் 58 மில்லியன் கொண்ட தேறிய அதிகரிப்பினைப் பதிவு செய்தவேளையில், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளினால் பெறத்தக்க ஏனைய பெறத்தக்க கணக்குகள் ஐ.அ.டொலர் 42 மில்லியன் கொண்ட அதிகரிப்பை 2013இல் பதிவு செய்தன.

## 5.7.4 ஒதுக்குச் சொத்துக்கள்

**2013இல் ஒதுக்குச் சொத்துக்களிலான கொடுக்கல்வாங்கல்கள் தேறிய அதிகரிப்பொன்றினைப் பதிவு செய்தன.** ஒதுக்குச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு முறையே ஐ.அ.டொலர் 1,297 மில்லியன், ஐ.அ.டொலர் 351 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 12 மில்லியன் கொண்ட நாணயம் மற்றும் வைப்புக்கள், நாணயத் தங்கம் மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமைகளை உள்ளடக்கியிருந்தன. அதேவேளை, மத்திய வங்கியின் நிலையான வருமான பிணையங்கள் 2012இன் ஐ.அ.டொலர் 1,384 மில்லியன் கொண்ட தேறிய கொள்வனவுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 548 மில்லியன் கொண்ட தேறிய விற்பனையைப் பதிவு செய்தன. நிலையான வருமானப் பிணையங்களின் உயர்ந்தமட்ட தேறிய விற்பனைகள் மத்திய வங்கி வசமிருந்த நாணயம் மற்றும் வைப்புக்களில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைத்

தோற்றுவித்து 2012இன் ஐ.அ.டொலர் 801 மில்லியன் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 1,297 மில்லியன் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன.

## 5.8 சென்மதி நிலுவை

**2013இல் வலுவடைந்த வெளிநாட்டுத் துறை அதிகரித்த கொண்ட சென்மதி நிலுவை மிகையைத் தோற்றுவித்தது.** நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் மற்றும் நிதியியல் கணக்கிற்கு ஏற்பட்ட கணிசமான உட்பாய்ச்சல் என்பன திரண்ட நிலுவையின் பாரிய மிகைக்குப் பங்களித்தது. இதன்படி, சென்மதி நிலுவை, 2012இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 151 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஐ.அ.டொலர் 985 மில்லியனைக் கொண்ட மிகையைப் பதிவு செய்தது.

## 5.9 பன்னாட்டு முதலீட்டு நிலைமை

**பன்னாட்டு முதலீட்டு நிலைமையானது, குறிப்பிட்ட காலப்பகுதியின் இறுதியில் உலகின் எஞ்சிய பகுதிகளுக்கெதிராக நாட்டின் வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதியினையும் உள்ளமைப்பினையும் காட்டுகின்றது.** 2013 திசெம்பர் இறுதியில், இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 9.4 பில்லியன் கொண்ட வெளிநின்ற பெறுமதியினைப் பதிவு செய்து 2012 திசெம்பர் இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 9.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2.5 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. வதிவற்றோர் வசமிருந்த இலங்கையின் சொத்துக்களில் பெரும்பாலும் 80 சதவீதம் மத்திய வங்கி வசமிருந்த ஒதுக்குச் சொத்துக்களின் வடிவில் காணப்பட்ட வேளையில், ஏனைய வைப்புக்களை ஏற்கின்ற நிறுவனங்கள் வசம் மொத்த வைப்புக்களில் ஏறத்தாழ 11 சதவீதம் இருந்தது. அதேவேளை, பன்னாட்டு முதலீட்டு நிலைமையின் கருத்தில் பொறுப்புக்களாக இருக்கும். வெளிநாட்டு முதலீடுகளின் உட்பாய்ச்சலில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் வெளிநாட்டுப் பொறுப்புக்களில் அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்ததன் மூலம் ஐ.அ.டொலர் 48.7 பில்லியன் கொண்ட வெளிநின்ற நிலைமையை உருவாக்கியது. இது முன்னைய ஆண்டிலிருந்து 6.8 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். இலங்கையின் மொத்தப் பொறுப்பு நிலைமை நியதிகளில் 50 சதவீத அண்ணளவான கடன் பொறுப்புக்கள் வடிவில் காணப்பட்ட வேளையில் 22 சதவீதமும் 18 சதவீதமும் முறையே சொத்துக்களின் முதலீட்டின் பேரிலும் நேரடி முதலீடுகளின் பேரிலும் காணப்பட்டன. இதன்

அட்டவணை 5.10

**பன்னாட்டு முதலீட்டு நிலைமை**
**(பீ.பி.எம்.6 சமர்ப்பிப்பு வடிவமைப்பு)**

ஐ.அ.டொ.மில்லியன்

| வகை | 2012 (அ) | | 2013 (ஆ) | |
|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| **நேரடி முதலீடுகள் (இ)** | 475 | 8,087 | 540 | 8,987 |
| மூலதனம் மற்றும் முதலீட்டு நிதிப் பங்குகள் | 472 | 6,311 | 537 | 6,670 |
| படுகடன் கருவிகள் | 3 | 1,776 | 3 | 2,318 |
| **சொத்துப்பட்டியல் முதலீடுகள்** | 0.3 | 9,242 | ... | 10,725 |
| மூலதனம் மற்றும் முதலீட்டு நிதிப் பங்குகள் | - | 2,188 | - | 2,293 |
| ஏனைய துறைகள் | - | 2,188 | - | 2,293 |
| படுகடன் கருவிகள் (ஈ) | 0.3 | 7,055 | ... | 8,432 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 0.3 | 542 | ... | 1,954 |
| நீண்ட காலம் | - | 542 | - | 1,954 |
| பொது அரசாங்கம் | - | 6,508 | - | 6,479 |
| குறுங்காலம் | - | 576 | - | 507 |
| நீண்ட காலம் | - | 5,932 | - | 5,971 |
| **நிதியியல் பெறுதிகள்** | - | - | - | - |
| **ஏனைய முதலீடு** | 1,611 | 28,273 | 1,390 | 28,991 |
| **நாணயமும் வைப்புக்களும்** | 741 | 1,778 | 283 | 1,886 |
| மத்திய வங்கி | - | 205 | - | 6 |
| குறுங்காலம் | - | 5 | - | 6 |
| நீண்ட காலம் | - | 200 | - | - |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 741 | 1,574 | 283 | 1,880 |
| குறுங்காலம் | 467 | 1,574 | 246 | 1,880 |
| நீண்ட காலம் | 274 | - | 37 | - |
| **கடன்கள்** | - | 23,749 | - | 24,355 |
| மத்திய வங்கி | - | 2,510 | - | 2,056 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | - | 2,510 | - | 2,056 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | 2,800 | - | 2,924 |
| குறுங்காலம் | - | 2,127 | - | 2,003 |
| நீண்ட காலம் | - | 673 | - | 921 |
| பொது அரசாங்கம் | - | 15,616 | - | 15,806 |
| நீண்ட காலம் | - | 15,616 | - | 15,806 |
| ஏனைய துறைகள் (உ) | - | 2,823 | - | 3,570 |
| நீண்ட காலம் | - | 2,823 | - | 3,570 |
| **வர்த்தக கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள்** | 234 | 1,910 | 429 | 1,856 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 103 | - | 118 | - |
| குறுங்காலம் | 103 | - | 118 | - |
| ஏனைய துறைகள் (ஊ) | 132 | 1,910 | 312 | 1,856 |
| குறுங்காலம் | 132 | 1,910 | 312 | 1,856 |
| **பெறவேண்டிய/செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள்** | 635 | 228 | 678 | 285 |
| மத்திய வங்கி (எ) | - | 228 | - | 285 |
| குறுங்காலம் | - | 228 | - | 285 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 635 | - | 678 | - |
| குறுங்காலம் | 635 | - | 678 | - |
| **சிறப்பு எடுப்பனவு உரிமைகள்** | - | 608 | - | 609 |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | 7,106 | - | 7,495 | - |
| நாணயவியல் தங்கம் | 727 | - | 884 | - |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 4 | - | 16 | - |
| ப.நா.நி. இல் ஒதுக்கு நிலைமை | 74 | - | 74 | - |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | 6,301 | - | 6,522 | - |
| நாணயமும் வைப்புக்களும் | 2,012 | - | 3,309 | - |
| நாணய அதிகார சபைகள் மீதான பெறுகைகள் | 1,381 | - | 2,843 | - |
| ஏனைய நிறுவனங்கள் மீதான பெறுகைகள் | 631 | - | 465 | - |
| பிணையங்கள் | 4,290 | - | 3,213 | - |
| படுகடன் பிணையங்கள் | 4,290 | - | 3,213 | - |
| **மொத்த சொத்துக்கள்/பொறுப்புக்கள்** | 9,193 | 45,602 | 9,425 | 48,704 |
| தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை | | -36,409 | | -39,279 |
| **விசேட விடயங்கள்** | | | | |
| பமுநி-முதிர்ச்சி அடிப்படையிலான பகுப்பாய்வு | | | | |
| குறுங்காலம் | 4,149 | 5,843 | 5,619 | 6,030 |
| நீண்ட காலம் | 5,039 | 29,073 | 3,802 | 31,321 |

(அ) திருத்தப்பட்டது

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(ஆ) தற்காலிகமானது

(இ) முதலீட்டு சபை, கொழும்புப் பங்கு பரிவர்த்தனை மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளின் நேரடி முதலீட்டு நிலைமைகளினை உள்ளடக்குகின்றது.

(ஈ) உள்நாட்டு நாணய வெளியீடுகள் புத்தகம் பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட அதேவேளை வெளிநாட்டு நாணய படுகடன் வெளியீடுகள் சந்தைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

(உ) அரசிற்கு சொந்தமான நிறுவனங்களால் பெறப்பட்ட செயற்திட்ட கடன்களின் வெளிநின்ற கடன்களை உள்ளடக்குகின்றது.

(ஊ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகள் என்பவற்றின் வெளிநின்ற வர்த்தக கொடுகடன் நிலைமையை உள்ளடக்குகின்றது.

(எ) மத்திய வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள்

குறிப்பு: பமுநி = பன்னாட்டு முதலீட்டு நிலைமை

சிறப்புக் குறிப்பு 7

## இலங்கையின் பன்னாட்டு முதலீட்டு நிலை

### அறிமுகம்

பன்னாட்டு முதலீட்டு நிலை எனப்படுவது இலங்கையின் வதிவுள்ளோரின் நிதியியல் சொத்துக்களான வதிவற்றோரின் கோரல்கள் மற்றும் வதிவற்றோருக்கான இலங்கையில் வதிவுள்ளோரின் பொறுப்புக்கள் என்பவற்றின் உள்ளடக்கத்தினையும் பெறுமதியினையும் குறிப்பிட்ட நேரத்தில் வெளிப்படுத்தும் ஓர் புள்ளிவிபரவியல் கூற்று ஆகும். இலங்கையின் பன்னாட்டு முதலீட்டு நிலை பன்னாட்டு நாணய நிதியத்தினால் வெளியிட்ட 6ஆவது திருத்தப்பட்ட சென்மதி நிலுவை மற்றும் பன்னாட்டு முதலீட்டுநிலைக் கைநூலின் வழிகாட்டல்களுக்கிணங்க தொகுக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டதுடன் பன்னாட்டு நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்டது. பன்னாட்டு முதலீட்டுநிலை வெளியீட்டுடன் சிறப்புத் தரவு பரம்பல் தொடர்பான இன்னொரு நியமத் தேவைப்பாட்டினையும் பூர்த்தி செய்துள்ளது. இது ப.நா. நிதியத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட மேம்பட்ட தரவு பரப்பல் முறைகளாக இருப்பதுடன் இதனை பன்னாட்டு மூலதனச் சந்தைக்கான அணுகுமுறைக்கு எதிர்பார்க்கும் அநேக நாடுகள் பின்பற்றுகின்றன.

### பன்னாட்டு முதலீட்டு நிலையின் உள்ளடக்கங்கள்

இலங்கையின் பன்னாட்டு முதலீட்டுநிலை, முக்கியமாக நியம சமர்ப்பித்தல் படிவத்தினைப் பின்பற்றி தொழிற்பாட்டு வகையினடிப்படையில் வெளியிடப்பட்டது. முக்கிய தொழிற்பாட்டு வகைகள் நேரடி முதலீடுகள், சொத்துப்பட்டியல் முதலீடுகள், நிதியியல் பெறுதிகள், ஏனைய முதலீடுகள் மற்றும் ஒதுக்க சொத்துக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. ஒவ்வொரு தொழிற்பாட்டு வகையும் உரிமை மூலதனம் மற்றும் முதலீட்டு நிதிய பங்குகள், படுகடன் சாதனங்கள் மற்றும் ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வடிவிலான ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிதியியல் சாதனங்களைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு நிதியியல் சாதனங்களும் மேலும் மத்திய வங்கி, அரசாங்கம், மத்திய வங்கி தவிர்ந்த வைப்புக்களை ஏற்றுக்கொள்ளும் கூட்டுத்தாபனங்கள் (உரிமம் பெற்ற வர்த்தக வங்கி, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்) மற்றும் ஏனைய துறைகளை (வீட்டுத்துறைகள், நிதியியல் மற்றும் நிதியியல் அல்லா கூட்டுத் தாபனங்கள் மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள்) உள்ளடக்கிய வதியும் நிதியியல்துறை ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களும் நிதியியல் சாதனங்களின் முதிர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்பட்டதுடன் ஒரு வாரத்திற்கு குறைவான முதிர்ச்சியையுடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறுங்காலம் எனவும் ஒரு வருடத்திற்கு மேற்பட்டவை நீண்டகாலம் எனவும் வகைப்படுத்தப்பட்டன. 2013 மற்றும் 2012 திசெம்பர் இறுதியில் உள்ளவாறான நியம தொழிற்பாட்டு வகை அடிப்படையிலான இலங்கையின் பன்னாட்டு முதலீட்டு நிலைகள் பகுதி I மற்றும் பகுதி II இல் அட்டவணை 5.10 இல் தரப்பட்டுள்ளது.

### பன்னாட்டு முதலீட்டு நிலையின் முக்கிய தொழிற்பாட்டு வகைகள்

**நேரடி முதலீடுகள்:** சென்மதி நிலுவை கைநூல் 6 நியம வரைவிலக்கணங்களின்படி நேரடி முதலீட்டாளர் எனப்படுபவர் வதிவற்ற முதலீட்டாளராக இருப்பதுடன் இலங்கை தொழில்முயற்சியில் 10 சதவீதத்திற்கு மேற்படாத வாக்களித்தல் உரிமை மூலதன பங்குகளில் முதலிட்டுள்ள ஒருவராவர். 10 சதவீதத்திற்கும் மேற்பட்ட முதலீடு வதிவற்றோர் நேரடி முதலீட்டாளராக உள்நாட்டு முயற்சி முகாமைத்துவத்தில் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கினை வழங்குவர் எனக் கருதப்படுவதால் பன்னாட்டு விதியாக 10 சதவீத அடிப்படை அளவு உருவாக்கப்பட்டுள்ளது. சென்மதி நிலுவைக் கைநூல் 6 படிவத்தின் அறிமுகத்துடன் நியம அடிப்படையளவுக் குறியீட்டு வரைவிலக்கணம் நேரடி முதலீடுகள் மற்றும் சொத்துப்பட்டியல் முதலீடுகளிற்கிடையேயான எல்லை நிர்ணயித்தலுக்குப் பயன்படுத்தப்படும். அதேவேளை கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல்கள் ஏற்படுமிடத்து கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனியின் ஒவ்வொரு தனிப்பட்ட வெளிநாட்டு முதலீட்டாளர்களினதும் உரிமை மூலதனப் பங்குகளின் சதவீதத்தினடிப்படையில் மீளவகைப்படுத்தப்படுகின்றன. மேலும் நேரடி முதலீடுகளுக்குப் புறம்பாக மேலதிகமாகப் பெற்றுக்கொண்ட வெளிநாட்டுக் கடன்களை உள்ளடக்கிய முதலீட்டுச் சபைக் கம்பனிகளுக்கான மொத்த உட்பாய்ச்சல் இலங்கை விடயத்தினைப் பொறுத்தவரை குறிப்பிடத்தக்க வெளிநாட்டுச் செலாவணியாகையால் அதன் முக்கியத்துவத்தின் காரணமாக ஓர் விஞ்ஞாபன விடயமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**சொத்துப் பட்டியல் முதலீடுகள்:** சொத்துப் பட்டியல் முதலீடுகள், உரிமை மூலதன முதலீடுகள், முதலீட்டு நிதியப் பங்குகள் மற்றும் இலங்கை வதிவோரால் வழங்கப்பட்ட படுகடன் பிணையங்களின் வெளிநாட்டு முதலீடுகள் என்பவற்றைக் கொண்டுள்ளன. சொத்துப் பட்டியல் முதலீடுகளின் இருப்பு நிலையானது கொழும்பு பங்குபரிவர்த்தனையால் வெளியிடப்பட்ட மொத்த வெளிநாட்டு முதலீட்டு இருப்பு நிலைகளிலிருந்து, கொழும்பு பங்குபரிவர்த்தனைக்கான நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களைக் கழித்த பின் பெறப்படுகின்றது. சொத்துப் பட்டியல் கொடுக்கல்வாங்கல்கள் கொழும்பு பங்குபரிவர்த்தனையின் இரண்டாம்தர சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள், ஆரம்பப் பொதுமக்களுக்கான பங்கு வழங்கலின் வெளிநாட்டு முதலீடுகள், உரித்து வழங்கல்கள் மற்றும் வர்த்தகப்படுத்தப்பட்ட கம்பனித் தொகுதிக்கடன்களின் வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் ஏனைய வாக்குகளற்ற பங்குகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. படுகடன் பிணையங்கள் வடிவிலான பொறுப்புக்களானவை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பிணையங்கள் மற்றும் மத்திய வங்கி தவிர்ந்த, ஏனைய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளும் கம்பனிகளால் வழங்கப்பட்ட பிணையங்களாகும். சென்மதி நிலுவைக் கைநூல் 6இன் பரிந்துரைகளிற்கமைய அனைத்துப் படுகடன் பிணையங்களும் சந்தை விலையினை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்படுவதுடன் அவற்றின் முகப்பெறுமதிகள் விஞ்ஞாபன விடயங்களின் கீழ் வேறாக வழங்கப்பட்டுள்ளது. சென்மதி நிலுவைக் கைநூல் 6இன் பரிந்துரைகளின்படி படுகடன் பிணையங்களின் குறுகிய மற்றும் நீண்டகால இயல்புகள் ஆரம்ப முதிர்ச்சிக் காலத்தினை அடிப்படையாகக் கொண்டவையாகும். அதன் விளைவாக அரசாங்கத்தினால் வதிவற்ற முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மட்டுமே குறுங்காலமாகக் கருதப்படுகின்றது.

**ஏனைய முதலீடுகள்:** ஏனைய முதலீடுகள் எனப்படுபவை ஏனைய உரிமை மூலதனங்கள், நாணயம் மற்றும் வைப்புக்கள், கடன்கள், வர்த்தக கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள், ஏனைய கிடைக்கத்தக்கவைகள் மற்றும் கொடுபடத்தக்கவைகள் மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் என்பனவற்றை உள்ளடக்கிய ஓர் விரிவான வகையாகும். நாணயம் மற்றும் வைப்புக்கள் வடிவிலான

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மத்திய வங்கி மற்றும் ஏனைய வைப்புக்களை ஏற்றுக் கொள்ளும் கம்பனிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாகும். உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நாணய ஆய்விலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் அதேவேளை உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் வெளிநின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலை மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட நிதியியல் ஆய்விலிருந்து பெறப்பட்டவையாகும்.

இலங்கையின் மொத்த பொறுப்புக்கள் நிலையில் 50 சதவீதத்திற்கும் அதிகமான வெளிநின்ற கடன்கள் மத்திய வங்கி, வைப்புக்களை ஏற்றுக்கொள்ளும் கூட்டுத்தாபனங்கள் அரசாங்கம் அத்துடன் தனியார் துறை என்பனவற்றின் கடன் பொறுப்புக்களைக் கொண்டுள்ளது. மத்திய வங்கியின் அனைத்து வெளிநின்ற கடன் பொறுப்புக்களும் ப.நா.நிதியத்திற்கான வெளிநின்ற பொறுப்புக்களின் வடிவமாக காணப்பட்ட வேளை அரச கடன்கள் அரசாங்கத்தினால் வெளிநாட்டு மூலங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட சலுகை மற்றும் சலுகையல்லா செயற்றிட்டக் கடன்களைக் கொண்டுள்ளது. "ஏனைய துறைகள்" இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட கடன் வெளிநின்றவைகள் தனியார்துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான முயற்சிகளிலிருந்தான கம்பனிக் கடன்பாடுகளைக் கொண்டுள்ளன.

இலங்கை கம்பனிகளினால் வதிவற்றோருக்கு கொடுக்கப்பட்ட வர்த்தக கொடுகடன்கள் மற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் கழிவிடல் ஏற்றுமதி உண்டியல்கள் வர்த்தக கொடுகடன்கள் வடிவில் சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்படும். அதேவேளை இலங்கை வதிவோரால் பெற்றுக்கொண்ட வர்த்தக கொடுகடன்கள், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற வர்த்தக கொடுகடன் நிலையின் பெரும்பகுதி, வர்த்தக கொடுகடன் வடிவில் பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. தனியார் துறை கூட்டுத்தாபனங்களின் வர்த்தகக் கொடுகடன் நிலைமைகள் இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த பன்னாட்டு முதலீட்டு அளவீடுகள் மூலம் அளவிடப்பட்ட வேளையில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தரவுகள் காலாண்டு அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டன.

ஏனைய பெறத்தக்க கணக்குகளின் சொத்து நிலையானது அடிப்படையில் பன்னாட்டு வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான வர்த்தக வங்கிகளின் குறுங்கால சொத்துக்களாக விளங்கும். அதேவேளை அவற்றின் பொறுப்பு நிலையானது இலங்கை மத்திய வங்கியினால் முகாமை செய்யப்படும் கொடுக்கல்வாங்கல்களைக் கொண்ட ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய தீர்ப்பனவுகளைக் கொண்டுள்ளன.

சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பன்னாட்டு நாணய நிதியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் உறுப்பு நாடுகளிற்கு தற்போதைய குறைநிரப்பு அலுவல்சார் ஒதுக்குகளும் ஒதுக்கப்பட்டன. சென்மதி நிலுவைக் கைநூல் 6 இன்படி சிறப்பெடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கீடு அவற்றைப் பெற்றுக் கொள்ளும் சில சந்தர்ப்பங்களில் ஒதுக்கீடுகளின் மீளச் செலுத்துகைகளிற்கு காணப்படும் குறைவான சாத்தியப்பாடுகள் காரணமாக உறுப்பு நாடுகளின் நிகழத்தக்க பொறுப்புக்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2009 இல் அனைத்து நாடுகளிற்கும் சிறப்பெடுப்பனவு உரிமைகள் ஒதுக்கப்பட்டன. அதன் விளைவாக 2013 திசெம்பரில் இலங்கையின் வெளிநின்ற சிறப்பெடுப்பனவு உரிமை ஒதுக்கீடு ஐ.அ.டொலர் 608 மில்லியனாகக் காணப்பட்டது.

**ஒதுக்குச் சொத்துக்கள்**

நாட்டின் ஒதுக்குச் சொத்து நிலையானது உடனடியாக கிடைக்கத்தக்கதும் நாணய அதிகார சபையினால் சென்மதி நிலுவைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல், செலாவணி வீதத்தில் மிதமிஞ்சிய தளம்பல்களைத் தடுப்பதற்கு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையீடு செய்தல், நாணயம் மற்றும் பொருளாதாரத்தின் நம்பிக்கைத் தன்மையினைப் பேணல் மற்றும் வெளிநாட்டு கடன்பாடுகளுக்கான ஓர் அடிப்படையாகச் செயற்படல் என்பவற்றிற்காக உடனடியாகக் கிடைக்கத்தக்கதும் கட்டுப்படுத்தத்தக்கதுமான வெளிநாட்டுச் சொத்துக்களினைப் பிரதிபலிக்கின்றது. சென்மதி நிலுவை கைநூல் 6 அறிக்கையிடும் படிவம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் மத்திய வங்கி முன்னர் நடைமுறைப்படுத்தலை அறிக்கையிடும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள் தொடர்பான "உடன்" மற்றும் "உடனின்றி" என்ற சொற்களை 2014 சனவரியிலிருந்து நிறுத்தப்பட்டதுடன் ப.நா. நிதியத்தின் ஒதுக்குச் சொத்துக்களின் வரைவிலக்கணத்தின் கீழ்வரும் அனைத்து நிதியியல் சாதனங்களும் உள்ளடக்கப்பட்டன. மேலும், மத்திய வங்கியினதும் அதேபோன்று வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களினதும் வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களை உள்ளடக்கும் "மொத்த பன்னாட்டு ஒதுக்குகள்" என்ற பதம் "மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள்" என்ற பதத்தின் மூலம் நீக்கப்படும்.

உசாத்துணை:

Balance of Payments and International Investment Position Manual – Sixth Edition (BPM6), International Monetary Fund, 2009.

விளைவாக, 2013 இறுதியில் இலங்கையின் தேறிய பன்னாட்டு முதலீடுகள் 2012இன் ஐ.அ.டொலர் 36.4 பில்லியன் கொண்ட தேறிய பொறுப்பு நிலைமையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 39.3 பில்லியன் கொண்ட தேறிய பொறுப்பு நிலைமையினைப் பதிவு செய்தன.

## 5.9.1 நேரடி முதலீட்டு நிலைமை

**நேரடி முதலீடுகளின் குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்கள் 2013 இறுதியில் வெளிநாட்டு நேரடி முதலீட்டு இருப்பு நிலைமையில் அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தது.** குறிப்பாக 2009 முதல், வதிவற்ற முதலீட்டாளர்களிடமிருந்தான நேரடி முதலீட்டிலிருந்தான தொடர்ச்சியான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களின் விளைவாக நேரடி முதலீட்டின் வெளிநின்ற பொறுப்புக்களின் நிலைமை 2012 இறுதியில் இருந்த ஐ.அ.டொ. 8,087 மில்லியனிலிருந்து 2013 இறுதியில் ஐ.அ.டொ. 8,987 மில்லியனாக அதிகரித்தது. மொத்த நேரடி முதலீட்டு பொறுப்பு நிலைமையில் 74 சதவீதம் பங்குரிமை மூலதன வடிவில் காணப்பட்ட வேளையில் 26 சதவீதம் உள்ளகக் கம்பனிக் கடன்பாடுகள் மற்றும் பங்குடமையாளர் முற்பணங்களின் வடிவில் காணப்பட்டது. கொழும்புப் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நேரடி முதலீட்டாளர்களின் வெளிநின்ற இருப்பு குறிப்பிடத்தக்க சந்தை விலை இலாபத்தினை எடுத்துக்காட்டி வதிவற்றோரினால் வைத்திருக்கப்படும் பங்குரிமையின் நேரடி முதலீட்டு இருப்பு நிலைமையில் 2013 இறுதியில் ஐ.அ.டொலர் 6.7 சதவீதம்

கொண்ட அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தது. அதேவேளை, வசதியும் இலங்கையர்களினால் வெளிநாட்டில் செய்யப்பட்ட நேரடி முதலீடுகள் 2013 இறுதியில் ஐ.அ.டொலர் 540 மில்லியன் கொண்ட வெளிநின்ற சொத்து நிலைமையொன்றினைப் பதிவு செய்து முன்னைய ஆண்டிலிருந்து 13.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. இம்முதலீடுகளில் பெரும்பாலானவை பட்டியலிடப்பட்ட இலங்கைக் கம்பனிகளினால் செய்யப்பட்ட முதலீடுகளாக, முக்கியமாக, தென்கிழக்காசிய நாடுகளில் குறிப்பாக, சிங்கப்பூர் மற்றும் மலேசியாவிலுள்ள தனிப்பட்ட பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் செய்யப்பட்டவையாக இருந்தன.

### 5.9.2 சொத்துப்பட்டியல் முதலீட்டு நிலைமை

**சொத்துப்பட்டியல் முதலீட்டின் இருப்பு நிலைமை 2013 இறுதியில் அதிகரித்தது.** பங்குரிமை மூலதனம், முதலீட்டு நிதியப் பங்குகள் மற்றும் படுகடன் பிணையங்கள் என்பனவற்றின் வடிவில் காணப்பட்ட சொத்துப்பட்டியல் முதலீடுகளின் வெளிநின்ற நிலைமை 2013 திசெம்பர் இறுதியில் 16 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவு செய்து ஐ.அ.டொலர் 10.7 பில்லியனை அடைந்தது. கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட இலங்கைக் கம்பனியொன்றில் எவரேனும் வதிவற்ற தனிப்பட்ட பங்குடமையாளரினால் செய்யப்படுகின்ற 10 சதவீதத்திற்கும் குறைவான வெளிநாட்டு முதலீட்டினை முக்கியமாகக் கொண்ட பங்குரிமை மூலதன முதலீடுகள், 2012 இறுதியின் ஐ.அ.டொலர் 2.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2.3 பில்லியனாகக் காணப்பட்டன. இவ்வதிகரிப்பிற்கு பங்குகளின் சந்தை விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பிலிருந்து தோன்றிய மதிப்பீட்டு இலாபங்களும் தேறிய கொடுக்கல்வாங்கல்களிலேற்பட்ட அதிகரிப்பும் முக்கிய காரணங்களாக விளங்கி, அதிகரித்த முதலீட்டாளர் நம்பிக்கையினை பிரதிபலித்தது. அரசாங்கத்தினாலும் வங்கித்தொழில் துறையினாலும் வழங்கப்பட்ட படுகடன் பிணையங்களில் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2012இன் ஐ.அ.டொலர் 7.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013 இறுதியில் ஐ.அ.டொலர் 8.4 பில்லியனாகக் காணப்பட்டது. அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மொத்தப் படுகடன் பிணையங்களில் 94 சதவீதம் நீண்ட காலத் திறைசேரி முறிகளாகவும் பன்னாட்டு நாட்டிற்கான முறிகளாகவும் காணப்பட்ட வேளையில் 8 சதவீதம் திறைசேரி உண்டியல்களாகக் காணப்பட்டது. அதேவேளை, வைப்புக்களை ஏற்கின்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பன்னாட்டு படுகடன் பிணையங்கள் வழங்கல் 2013இல் ஐ.அ.டொலர் 1.35 பில்லியனாக விளங்கி, 2013 இறுதியில் ஐ.அ.டொலர் 1.95 பில்லியன் கொண்ட நீண்ட காலப்படுகடன் பிணையங்களின் வெளிநின்ற நிலைமையினைத் தோற்றுவித்தது.

### 5.9.3 ஏனைய முதலீட்டு நிலைமை

#### நாணயம் மற்றும் வைப்புக்கள்

**சொத்துக்களின் நாணயம் மற்றும் வைப்புக்களின் சொத்து நிலைமை 2012 உடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்த வேளையில் 2013இல் பொறுப்புக்களின் நிலைமை தேறிய அதிகரிப்பினைப் பதிவு செய்தது.** 2013ஆம் ஆண்டுப் பகுதியில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைத்திருக்கப்பட்ட நாணயம் மற்றும் வைப்புக்கள் அதிகரித்து 2013 இறுதியில் ஐ.அ.டொலர் 283 மில்லியன் கொண்ட வெளிநின்ற வெளிநாட்டுச் சொத்து நிலைமையொன்றினைப் பதிவு செய்தது. நாணயம் மற்றும் வைப்புக்கள் வடிவிலான வெளிநின்ற வெளிநாட்டுப் பொறுப்புக்கள் 2012இன் ஐ.அ.டொலர் 1.7 பில்லியனிலிருந்து 2013 திசெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 1.9 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு, மத்திய வங்கியின் பொறுப்புக்கள் மாற்றமின்றியிருந்தமையினால் வங்கித்தொழில் துறையின் நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

#### கடன்கள்

**அரசாங்கம், வைப்புக்கள் பெறும் கூட்டுத்தாபணங்கள் மற்றும் தனியார் துறைக்கான தேறிய வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்களின் விளைவாக மொத்தப் பன்னாட்டு பொறுப்பு நிலைமையில் 50 சதவீதத்திற்கும் கூடுதலான அளவிற்கு வகைகூறும் வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்கள் 2012இன் இறுதியின் ஐ.அ.டொலர் 23.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013 திசெம்பரில் இறுதியில் 2.6 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொலர் 24.4 பில்லியனை அடைந்தது.** இதில், ஐ.அ.டொலர் 15.8 பில்லியன் அரசாங்கத்தின் வெளிநின்ற நீண்ட கால கடன்களாக இருந்ததுடன் இது 2012 இலிருந்து 1.2 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவு செய்தது. அதேவேளை, மத்திய வங்கி, மத்திய வங்கி தவிர்ந்த வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை (ஏனைய துறைகளாக வகைப்படுத்தப்பட்டது) என்பவற்றின் வெளிநின்ற கடன் பொறுப்புக்கள் 2013 இறுதியில் முறையே ஐ.அ.டொலர் 2.1 பில்லியன், ஐ.அ.டொலர் 2.9 பில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 3.6 பில்லியனாகக் காணப்பட்டன. மத்திய வங்கியின் அனைத்து வெளிநின்ற கடன் பொறுப்புக்களும் ப.நா. நிதியத்திற்கான வெளிநின்ற பொறுப்புக்களின், முக்கியமாக ப.ந.நிதியம் - துணைநில் ஒழுங்குவிதி நிகழ்ச்சித்திட்டத்தின் வெளிநின்ற பொறுப்பு நிலைமையின் பேரில் இருந்தன. இவை 2016இல் முழுமையாகச் செலுத்தப்படும். மத்திய வங்கியினால்

நடைமுறைப்படுத்தப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் படிப்படியான தளர்த்தல் 2013இல் வெளிநாட்டு நிதியிடலை எதிர்பார்ப்பதற்கு தனியார் துறை நிறுவனங்கள் பலவற்றையும் தூண்டியமையானது ஏனைய துறைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள கம்பனிகள் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான முயற்சிகளின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் அதிகரிப்பதற்குப் பகுதியளவில் பங்களித்தது.

## வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள்

**வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் வெளிநின்ற நிலைமை அதிகரித்த வேளையில் பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் 2013 இறுதியில் வீழ்ச்சியடைந்தன.** இலங்கைக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் 2013 திசெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 429 மில்லியன் கொண்ட வெளிநின்ற நிலைமையொன்றினைப் பதிவு செய்தது. அதேவேளை, இலங்கைக் கம்பனிகளினால் பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள் 2013 இறுதியில் 2.8 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 1.9 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கு மொத்த வெளிநின்ற வர்த்தகக் கொடுகடன்கள் மற்றும் முற்பணங்களின் கணிசமான விகிதத்திற்கு வகைகூறிய பெற்றோலிய செலவுகள் தீர்ப்பனவு செய்யப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

## பெறத்தக்க/கொடுபடத்தக்க ஏனைய கணக்குகள்

**2013 இறுதியில் பெறத்தக்க மற்றும் கொடுபடத்தக்க கணக்குகளின் சொத்து மற்றும் பொறுப்பு நிலைமைகள் அதிகரித்துள்ளன.** பெறத்தக்க ஏனைய கணக்குகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட தரவுகள் முக்கியமாக 2013 இறுதியில் ஐ.அ.டொலர் 678 மில்லியன் வெளிநின்ற பெறுமதியினைப் பதிவு செய்த பன்னாட்டு வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான வர்த்தக வங்கிகளின் குறுங்காலச் சொத்து நிலைமைகளை உள்ளடக்கியிருந்தது. கொடுபடத்தக்க ஏனைய கணக்குகள் இனைப் பொறுத்தவரை, 2013 இறுதியில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 285 மில்லியன் மத்திய வங்கியின் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் தொடர்பான பொறுப்புக்களை குறிப்பிடுகின்றது.


## சிறப்பு எடுப்பனவு உரிமைகள்

**செலாவணி வீத மாற்றங்களினால் சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் வெளிநின்ற பொறுப்பு நிலைமை 2013 இறுதியில் சிறிதளவால் மாறியது.** சென்மதி நிலுவைக் கைநூல் 6 இன்படி, சிறப்பு எடுப்பனவு உரிமையின் ஒதுக்கு, ப.நா.நிதியத்தின் உறுப்பு நாடுகளின் நிகழத்தக்க பொறுப்பாக பதிவு செய்யப்படுகிறது (ஏனெனில் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் ஒதுக்குகளை மீளச் செலுத்தும் தேவைப்பாடு). 2013 இறுதியில் இலங்கையின் வெளிநின்ற சிஎஉ ஒதுக்கு ஐ.அ.டொலர் 609 மில்லியனாகக் காணப்பட்டது.

## 5.9.4 ஒதுக்குச் சொத்து நிலைமை

**நாணய அதிகாரசபையினால் கிடைப்பதற்கு ஆயத்த நிலையிலிருக்கும் வெளிநாட்டுச் சொத்துக்களை பிரசன்னப்படுத்துகின்ற நாட்டின் ஒதுக்குச் சொத்து நிலைமை 2013 இறுதியில் ஐ.அ.டொலர் 7.5 பில்லியனாகக் காணப்பட்டது.** சென்மதி நிலுவைக் கைநூல் 6இன் அறிக்கையிடல் படிவம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியப் பொறுப்புக்கள் 'உடன்' மற்றும் 'இல்லாமல்' என்ற மத்திய வங்கியின் ஒதுக்குச் சொத்துக்களை அறிக்கையிடுகின்ற முன்னைய நடைமுறைகள் இடைநிறுத்தப்பட்டு, ப.நா. நிதியத்தின் ஒதுக்குச் சொத்துக்களின் வரைவிலக்கணத்திற்குள்வரும் அனைத்து நிதியியல் சொத்துக்களும் ஒதுக்குச் சொத்தின் கீழ் உள்ளடக்கப்படும். மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்படும் ஒதுக்குச் சொத்துக்களையும் அதேபோன்று வைப்புக்களை ஏற்கின்ற நிறுவனங்களின் வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களையும் உள்ளடக்கிய "மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள்" 2013 இறுதியில் ஐ.அ.டொலர் 8.6 பில்லியனுக்கு அதிகரித்தன. 2013 இறுதியிலுள்ளவாறான மேம்பட்ட ஒதுக்குச் சொத்து நிலைமை பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 3 மாத இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் 5.0 மாத பொருட்களின் இறக்குமதிக்கும் 4.2 மாத பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிக்கும் சமனானதாகக் காணப்பட்டது. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 5.7 மாத பொருட்களின் இறக்குமதிக்கும் 4.8 மாத பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிக்கும் சமனானதாக இருந்தது. குறுங்காலப்

வரைபடம் 5.12 மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் வெளிநாட்டுச் சொத்துக்களும்



**அட்டவணை 5.11 இலங்கையின் நிதியியல் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் வெளிநாட்டுச் சொத்துக்கள்**

கால இறுதியிலான நிலைமை

| | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா.மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 (அ) | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 (அ) |
| 1. அரசு | 113 | 88 | 615 | 631 | 465 | 12,920 | 9,747 | 70,088 | 80,209 | 60,857 |
| 2. மத்திய வங்கி | 5,244 | 7,109 | 6,134 | 6,475 | 7,030 | 599,880 | 788,722 | 698,666 | 823,375 | 919,171 |
| 3. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (1+2) | 5,357 | 7,196 | 6,749 | 7,106 | 7,495 | 612,799 | 798,469 | 768,754 | 903,584 | 980,028 |
| 4. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 1,673 | 1,424 | 1,241 | 1,480 | 1,078 | 191,373 | 158,031 | 141,394 | 188,195 | 141,008 |
| 5. மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் (3+4) (ஆ) | 7,030 | 8,621 | 7,991 | 8,586 | 8,574 | 804,173 | 956,500 | 910,148 | 1,091,779 | 1,121,036 |
| 6. திரண்ட அலுவல்சார் ஒதுக்குகள், மாதங்ளின்படி | | | | | | | | | | |
| 6.1 பொருட்களின் இறக்குமதிகள் | 6.3 | 6.4 | 4.0 | 4.4 | 5.0 | | | | | |
| 6.2 பொருட்கள், பணிகளின் இறக்குமதிகள் | 5.5 | 5.7 | 3.6 | 3.9 | 4.2 | | | | | |
| 7. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மாதங்களின்படி | | | | | | | | | | |
| 7.1 பொருட்களின் இறக்குமதிகள் | 8.3 | 7.7 | 4.7 | 5.4 | 5.7 | | | | | |
| 7.2 பொருட்கள், பணிகளின் இறக்குமதிகள் | 7.2 | 6.8 | 4.3 | 4.7 | 4.9 | | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) 'வெளிநாட்டில் நேரடி முதலீடு' மற்றும் 'வழங்கப்பட்ட வர்த்தக்கடன் மற்றும் முற்பணங்கள்' வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக

மூலம்: இலங்கை மத்திய வங்கி

படுகடன் மற்றும் பொறுப்புக்களின் நியதிகளில் ஒதுக்குப் போதுமை 2012 இறுதியின் 64 சதவீதத்திலிருந்து 2013 இறுதியில் 63 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு வங்கித்தொழில் துறையின் குறுங்காலப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். அதேவேளை, திறைசேரி முறிகள் நீங்கலான குறுங்காலப் படுகடனுக்கான மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2012 இறுதியின் 83 சதவீதத்திலிருந்து 2013 இறுதியில் 85 சதவீதத்திற்கு அதிகரித்தது.


## 5.10 வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவு

### 5.10.1 வெளிநாட்டுப் படுகடன்

**தனியார் துறைக்கும் வைப்புக்களை ஏற்கின்ற நிறுவனங்களுக்குமான உயர்ந்தளவு உட்பாய்ச்சல் 2013இல் மொத்த வெளிநாட்டு படுகடன் நிலைமையில் அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தது.** சென்மதி நிலுவை கைநூல் 6இன் வழிகாட்டல்களின்படி, முன்னர் வெளிநாட்டு படுகடனுக்கு கீழ் அறிவிக்கப்படாத வெளிநாட்டுப் படுகடன் சிஎஉ இல் வெளிநின்ற நிலைமையினையும் நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளின் கம்பனிகளுக்குள்ளேயான கடன் வழங்கலையும் உள்ளடக்குகிறது. இவையிரண்டும் முன்னர் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களின் புதிய வகைகள் மற்றும் மீள்பகுப்பாய்வு என்பன சேர்க்கப்பட்டமையின் காரணமாக நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் நிலைமை 2013 இறுதியில் ஐ.அ.டொலர் 39.4 பில்லியன் கொண்ட வெளிநின்ற தொகையைப் பதிவு செய்தது. இது, 2012 இறுதியில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 37.1 பில்லியனை விட, 7.1 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். இவ்வதிகரிப்பிற்கு வெளிநாட்டுக் கடன்பாடுகள் வடிவில் தனியார் துறைக்கு ஏற்பட்ட உயர்ந்த உட்பாய்ச்சல்களும் வைப்புக்களை ஏற்கின்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பன்னாட்டுப் படுகடன் பிணையங்களும் முக்கிய காரணங்களாக அமைந்தன. 2012 இறுதியில் பதிவு செய்யப்பட்ட 64 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013 இறுதியில் மொத்த வெளிநாட்டுக் கடன்பாட்டில் 61 சதவீதம் வெளிநின்ற கடன் பொறுப்புக்களின் வடிவில் காணப்பட்டது. வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரத்தில் புதிய தரவு வகைகள் உள்ளடக்கப்பட்டிருப்பதன் காரணமாக, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2012 இறுதியின் 62.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013 இறுதியில் 59.2 சதவீதமாக விளங்கி வெளிநாட்டுப் படுகடனின் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் மொ.உ. உற்பத்தியின் அதிகரிப்பினைப் பிரதிபலித்தது.

**இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படுகடனில்**

**வரைபடம் 5.13 வெளிநாட்டுப் படுகடன்**



**அட்டவணை 5.12 வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலை (பீபிஎம் 6 வெளிப்படுத்துகை கட்டமைப்பு)**

ஐ.அ.டொ.மில்லியன்
கால இறுதியிலான நிலைமை

| வகை | 2012 (அ) | 2013 (ஆ) |
|---|---|---|
| **பொது அரசாங்கம்** | 22,123 | 22,284 |
| குறுங்காலம் | 576 | 507 |
| படுகடன் பிணையங்கள் | 576 | 507 |
| திறைசேரி உண்டியல்கள் (இ) | 576 | 507 |
| நீண்ட காலம் | 21,547 | 21,777 |
| படுகடன் பிணையங்கள் | 5,932 | 5,971 |
| திறைசேரி உண்டியல்கள் (இ) | 2,067 | 2,486 |
| நாட்டுக்கான பன்நாட்டு முறி (ஈ) | 3,864 | 3,485 |
| கடன்கள் | 15,616 | 15,806 |
| **மத்திய வங்கி** | 3,550 | 2,956 |
| குறுங்காலம் | 232 | 291 |
| கொடுக்கவேண்டிய ஏனைய கணக்குகள் | 228 | 285 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள் | 228 | 285 |
| நாணயமும் வைப்புக்களும் | 5 | 6 |
| நீண்ட காலம் | 3,318 | 2,665 |
| சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்குகள் | 608 | 609 |
| கடன்கள் | 2,510 | 2,056 |
| ப.நா.நி உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | 2,510 | 2,056 |
| துணைநில் ஒழுங்குகள் (ப.நா.நி- து.நில் வசதி) | 2,502 | 2,056 |
| பிஆர்ஜிஎப் கடன் இல. 2 | 6 | - |
| விரிவாக்கப்பட்ட நிதி வசதிகள் மற்றும் அவசர உதவிகள் | 3 | - |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | 200 | - |
| பன்னாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குபடுத்தல்கள் (இ) | 200 | - |
| **வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்** | 4,916 | 6,758 |
| குறுங்காலம் | 3,701 | 3,884 |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் (உ) | 1,574 | 1,880 |
| வர்த்தக வங்கிகள் | 1,574 | 1,880 |
| கடன்கள் | 2,127 | 2,003 |
| வர்த்தக வங்கிகள் | 2,127 | 2,003 |
| நீண்ட காலம் | 1,215 | 2,875 |
| படுகடன் பிணையங்கள் (ஈ) | 542 | 1,954 |
| வர்த்தக வங்கிகள் | 542 | 990 |
| ஏனைய வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | 964 |
| கடன்கள் | 673 | 921 |
| வர்த்தக வங்கிகள் | 600 | 825 |
| ஏனைய வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 73 | 96 |
| **ஏனைய துறைகள் (ஊ)** | 4,733 | 5,425 |
| குறுங்காலம் | 1,910 | 1,856 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் (எ) | 1,910 | 1,856 |
| நீண்ட காலம் | 2,823 | 3,570 |
| கடன்கள் | 2,823 | 3,570 |
| தனியார் துறை கூட்டுத்தாபனங்கள் | 806 | 1,194 |
| அரசிற்கு சொந்தமான நிறுவனங்களும் கூட்டுத்தாபனங்களும் | 2,018 | 2,376 |
| **நேரடி முதலீடு : கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கல் (ஏ)** | 1,776 | 2,318 |
| **மொத்த வெளிநாட்டு படுகடன் நிலமை** | 37,098 | 39,741 |
| **மொ.உ.உ. சதவீதமாக** | | |
| மொத்த வெளிநாட்டு படுகடன் | 62.5 | 59.2 |
| குறுங்கால படுகடன் | 10.8 | 9.7 |
| நீண்டகால படுகடன் | 51.7 | 49.4 |
| **மொத்த வெளிநாட்டு படுகடனின் சதவீதமாக** | | |
| குறுங்கால படுகடன் | 17.3 | 16.4 |
| நீண்டகால படுகடன் | 82.7 | 83.6 |
| **விசேட விடயங்கள்** | | |
| **படுகடன் பிணையங்கள்-முகப்பெறுமதி-துறைவாரியான பகுப்பாய்வு** | 7,131 | 9,001 |
| பொது அரசாங்கம் | 6,631 | 7,151 |
| திறைசேரி உண்டியல்கள் | 631 | 565 |
| திறைசேரி முறிகள் | 2,500 | 3,086 |
| நாட்டுக்கான பன்நாட்டு முறிகள் | 3,500 | 3,500 |
| மத்திய வங்கி தவிர்ந்த, வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனம் | 500 | 1,850 |
| வர்த்தக வங்கிகள் | 500 | 1,000 |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | - | 850 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(ஈ) சந்தை விலையை அடிப்படையாகக் கொண்டது
(உ) வெளிநாட்டு நாணயங்களை வைத்திருக்கும் வதிவற்றோரின் வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது
(ஊ) தனியார் துறை மற்றும் அரசசார் தொழில் முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது
(எ) இலங்கை பெற்றோழிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகளின் வெளிநின்ற வர்த்தக கொடுகடனை உள்ளடக்கியுள்ளது

குறிப்பு: ப.நா.நி = பன்னாட்டு நாணய நிதியம்
து.நில் = துணைநில்
பீஆர்ஜிஎப் = வறுமை குறைப்பு மற்றும் வளர்ச்சி வசதி

மூலம் : இலங்கை மத்திய வங்கி

**பெரும்பாலானவை நீண்ட காலப் படுகடன் வடிவில் காணப்பட்டன.** படுகடன் முதிர்ச்சித் தோற்றப்பாட்டின் படி, படுகடன் சாதனங்களின் ஆரம்ப முதிர்ச்சியின் அடிப்படையில் ஓராண்டிற்கும் கூடுதலான முதிர்ச்சியைக் கொண்ட நீண்ட காலப் படுகடன்கள் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடனில் 84 சதவீதமாகக் காணப்பட்டன. வெளிநாட்டுப் படுகடனின் துறைவாரியான பகிர்ந்தளிப்பின் நியதிகளில் அரச படுகடன்கள் மொத்தப் படுகடனில் 56 சதவீதமாகக் காணப்பட்ட வேளையில், வைப்புக்களை ஏற்கின்ற நிறுவனங்கள், ஏனைய துறைகள் (தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான நிறுவனங்கள்) மத்திய வங்கி, மற்றும் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகள் என்பனவற்றின் வெளிநின்ற படுகடன்கள் முறையே 17 சதவீதமாகவும் 14 சதவீதமாகவும் 7 சதவீதமாகவும் 6 சதவீதமாகவும் காணப்பட்டன. செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் தளர்த்தப்பட்டமை மற்றும் கம்பனி படுகடன் பிணையங்களை வழங்குவதனூடாகவும் நீண்ட காலக் கடன்பாடுகளூடாகவும் வெளிநாட்டு நிதியிடலைப் பெறுவதற்கு வங்கிகளுக்கும் தனியார் தொழில்முயற்சிகளுக்கும் கூடியளவு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட வங்கித் தொழில் மற்றும் தனியார் துறைகளில் கணிசமான அதிகரிப்பினை வெளிநாட்டு கடன் நிலைமையை விளைவித்தது.

## 5.10.2 வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

**2013இல் மொத்த வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் அதிகரித்தன.** முதல் தொகை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2012இன் ஐ.அ.டொலர் 2,673 மில்லியனிலிருந்து 2013இல் ஐ.அ.டொலர் 3,818 மில்லியனுக்கு 42.8 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு மூலதனக் கொடுப்பனவு 50 சதவீதத்தினாலும் வட்டிக் கொடுப்பனவுகள் 27.8 சதவீதத்தினாலும் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். முதல் கொடுப்பனவுகள், ஐ.அ.டொலர் 453 மில்லியன் கொண்ட ப.நா.நிதியம் - துணைநில் ஒழுங்குவசதிகளின் மீள்கொடுப்பனவுகள், ஐ.அ.டொலர் 856 மில்லியன் கொண்ட அரச நீண்ட காலக் கடன்பாடுகளின் மீள்கொடுப்பனவுகள், ஐ.அ.டொலர் 665 மில்லியன் கொண்ட தனியார் துறை கடன் பொறுப்புக்களின் மீள்கொடுப்பனவுகள் மற்றும் ஐ.அ.டொலர் 719 மில்லியன் கொண்ட முதிர்ச்சியடைந்த அரச பிணையங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. வட்டிக் கொடுப்பனவில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு அரச பிணையங்கள் மீதான வட்டிக் கொடுப்பனவில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

**அட்டவணை 5.13** வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் (அ)

| வகை | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா.மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 (ஆ) | 2013 (இ) | 2009 | 2010 | 2011 | 2012 (ஆ) | 2013 (இ) |
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 2,009 | 1,853 | 1,799 | 2,673 | 3,818 | 230,616 | 208,984 | 199,305 | 334,733 | 491,888 |
| 1.1 கடன் தீர்த்தல் | 1,652 | 1,234 | 1,092 | 1,792 | 2,692 | 189,621 | 138,941 | 121,246 | 223,061 | 346,710 |
| (i) பன்னாட்டு நாணய நிதியத்திற்கு | 95 | 46 | 11 | 57 | 453 | 10,941 | 5,238 | 1,238 | 7,413 | 57,683 |
| (ii) ஏனையவற்றிற்கு | 1,557 | 1,188 | 1,081 | 1,735 | 2,239 | 178,680 | 133,703 | 120,008 | 222,973 | 289,026 |
| அரச, நடுத்தர மற்றும் நீண்டகாலம் | 940 | 665 | 789 | 862 | 856 | 107,880 | 74,932 | 87,754 | 110,412 | 110,437 |
| அரசபிணையங்கள் | 307 | 92 | 95 | 628 | 719 | 35,109 | 10,406 | 10,406 | 80,991 | 92,610 |
| அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் துறை | 311 | 431 | 197 | 245 | 665 | 35,691 | 48,365 | 21,848 | 31,570 | 85,978 |
| 1.2 வட்டிக்கொடுப்பனவுகள் | 357 | 619 | 707 | 881 | 1,126 | 40,995 | 70,043 | 78,059 | 111,671 | 145,178 |
| (i) பன்னாட்டு நாணய நிதியத்திற்கு | 6 | 7 | 10 | 36 | 33 | 644 | 803 | 1,081 | 4,639 | 4,298 |
| (ii) ஏனையவற்றிற்கு | 351 | 612 | 697 | 845 | 1,092 | 40,351 | 69,240 | 76,978 | 107,032 | 140,880 |
| மூலதனம் | | | | 437 | 516 | | | | 55,528 | 66,670 |
| படுகடன் பிணையங்கள் | | | | 408 | 576 | | | | 51,415 | 74,210 |
| 2. பொருட்களின் ஏற்றுமதிகள் மற்றும் பணிகளிலிருந்தான வருவாய்கள் | 8,977 | 11,100 | 13,643 | 13,573 | 15,079 | 1,031,289 | 1,254,021 | 1,508,565 | 1,730,467 | 1,949,267 |
| 3. பொருட்களின் ஏற்றுமதிகள், பணிகள், வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்களிலிருந்தான பெறுகைகள் | 12,500 | 15,592 | 19,314 | 19,754 | 21,655 | 1,436,578 | 1,761,613 | 2,135,356 | 2,519,483 | 2,798,774 |
| 4. படுகடன் பணி விகிதம் (இ) | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 22.4 | 16.7 | 13.2 | 19.7 | 25.3 | 22.4 | 16.7 | 13.2 | 19.3 | 25.2 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக | 21.3 | 16.2 | 13.0 | 19.0 | 22.1 | 21.2 | 16.2 | 13.1 | 19.1 | 22.1 |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 16.1 | 11.9 | 9.3 | 13.5 | 17.6 | 16.1 | 11.9 | 9.3 | 13.3 | 17.6 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக | 15.3 | 11.5 | 9.2 | 13.1 | 15.4 | 15.2 | 11.5 | 9.2 | 13.1 | 15.4 |
| 5. அரசபடுகடன் பணிக் கொடுப்பனவுகள் | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (ஈ) | 1,497 | 1,219 | 1,474 | 2,191 | 2,443 | 171,834 | 136,411 | 162,507 | 280,215 | 315,016 |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 74.5 | 65.8 | 82.0 | 82.0 | 64.0 | 74.5 | 65.3 | 81.5 | 83.7 | 64.0 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) ரூபா பெறுமதியிலும் ஐ.அ.டொலர் பெறுமதியிலும் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதமானது ஆண்டு காலப்பகுதியில் நாணய மாற்று விகித வேறுபாடுகள் காரணமாக வேறுபடும்
(ஈ) பன்னாட்டு நாணய நிதிய கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக

மூலங்கள்: வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

இதன்படி, பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளின் சதவீதமாக வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2012இன் 19.7 சதவீதத்திலிருந்து 2013இல் 25.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## 5.11 செலாவணி வீத அசைவுகள்

**செலாவணி வீதக் கொள்கை 2013இல் செலாவணி வீதத்தின் நிர்ணயிப்பில் தொடர்ந்தும் நெகிழ்ச்சித்தன்மையை பேணியது.** 2013 சனவரியிலிருந்து 2013 யூனின் இரண்டாம் வாரம் வரை ரூபாவானது ஐ.அ. டொலருக்கெதிராக 0.55 சதவீதத்தினால் சிறிதளவு உயர்வடைந்த வேளையில் இது, யூனிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 5.01 சதவீதத்தினால் தேய்வடைந்தமைக்கு இறக்குமதிக்கான கேள்வி அதிகரித்தமையும் ஐ.அமெரிக்க முறிகளை வாங்குகின்ற நிகழ்ச்சித்திட்டம் குறைந்து செல்வதற்கான சாத்தியம் எதிர்பார்க்கப்படுவதன் காரணமாக அரச பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வெளியேறுகின்றமைக்கான எதிர்பார்ப்பு என்பன காரணங்களாக அமைந்தன. இலங்கை ரூபாவானது இந்திய ரூபா மற்றும் இந்தோனேசிய ரூபியா போன்ற ஏனைய தோற்றம் பெற்று வருகின்ற நாணயங்களுடனும், கிட்டிய எதிர்காலத்தில் ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வ் வங்கி அதன் கணியம்சார் இலகுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் அளவினைக் குறைக்க இருப்பது பற்றிய அறிவித்தலைத் தொடர்ந்து கடுமையான தேய்விற்கு உட்பட்ட யப்பானிய யென் போன்ற முக்கிய நாணயங்களுடனும் ஒப்பிடுகையில் குறைந்தளவான தளம்பல்களைக் கொண்டிருப்பது முக்கியமானதொரு அம்சமாகும். எனினும், செத்தெம்பர் தொடக்கத்திலிருந்து இலங்கை ரூபா ஐ.அ. டொலருக்கெதிராக உயர்வடையத் தொடங்கியமைக்கு, வங்கித்தொழில் துறைக்கான அதிகரித்த உட்பாய்ச்சல்களும் தேசிய சேமிப்பு வங்கியினாலும் டிஎவ்சிசி வங்கியினாலும் வழங்கப்பட்ட முறிகள் சந்தை எதிர்பார்ப்புக்களை மேலும் பலப்படுத்தியமையும் ஆதரவாக அமைந்தன. பொதுவாக, 2013 இறுதியில், ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 2.75 சதவீதத்தினால் ரூ.130.75 இற்கு தேய்வடைந்த வேளையில் 2013இல் ஐ.அ.டொலருக்கெதிரான ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் 2012இன் ரூ.127.60 உடன் ஒப்பிடுகையில் ரூ.129.11 ஆக விளங்கியது.

**குறுக்கு நாணய செலாவணி வீத அசைவுகளை பிரதிபலிக்கின்ற விதத்தில், இலங்கை ரூபா முக்கிய நாணயங்களுக்கெதிராக 2013இல் கலப்பான செயலாற்றத்தினைக் காட்டியது.** ரூபா, ஸ்ரேலிங் பவுண் (4.69 சதவீதம்), யூரோ (6.83 சதவீதம்) என்பனவற்றிற்கெதிராக தேய்வடைந்த வேளையில் இந்திய ரூபா (10.16 சதவீதம்) மற்றும் யப்பானிய யென் (18.78 சதவீதம்) என்பனவற்றிற்கெதிராக உயர்வடைந்தது. 2013ஆம் ஆண்டுப்பகுதியில் ரூபா, சிஎஉ இற்கெதிராக 3.00 சதவீதத்தினால் தேய்வடைந்து பன்னாட்டுச் சந்தையில் ஐ.அ.டொலருக்கெதிராக யூரோ, யப்பானிய ஸயென் மற்றும் ஸ்டேர்லிங் பவுண் போன்ற முக்கிய நாணயங்களின் அசைவினைப் பிரதிபலித்தது.

### 5.11.1 பெயரளவு மற்றும் உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்

**2013ஆம் ஆண்டுப்பகுதியில், தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் 2012ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்ட தேய்வுடன் ஒப்பிடுகையில் மிதமான உயர்வினைக் காட்டின.** 5 நாணயக் கூடையினை அடிப்படையாகக் கொண்ட பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் நீங்கலாக, ஏனைய அனைத்துச் சுட்டெண்களும் அதாவது 24 நாணயக் கூடையினை அடிப்படையாகக் கொண்ட பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றும் 5 நாணயக் கூடையையும் 24 நாணயக் கூடையையும் அடிப்படையாகக் கொண்ட உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதம் என்பன மிதமான வீதத்தில் அதிகரித்தன. யப்பானிய யென் மற்றும் இந்திய ரூபாவிற்கெதிராக இலங்கை ரூபா கணிசமான பெயரளவு உயர்வினைக் கொண்டிருந்த போதும் கூடையிலுள்ள ஏனைய நாணயங்களான ஐ.அ.டொலர், ஸ்டேர்லிங் பவுண் மற்றும் யூரோ என்பனவற்றிற்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையானது 5 நாணயக் கூடையை அடிப்படையாகக் கொண்ட பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் 0.07 சதவீதத்தினால் சிறிதளவு தேய்வடைவதற்கு வழிவகுத்தது. எனினும், 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டியாளர்களின் பெயரளவு செலாவணி வீதங்களை அடிப்படையாகக் கொண்ட பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் 0.71 சதவீதத்தினால் உயர்வடைந்தது. சில பன்னாட்டு நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா பெயரளவில் உயர்வடைந்தமை மற்றும் வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டு ரீதியில் உள்நாட்டுப் பணவீக்கம் உயர்வாக இருந்தமை என்பனவற்றின் விளைவாக 5 நாணயம் மற்றும் 24 நாணயக் கூடைகள் இரண்டினையும் அடிப்படையாகக் கொண்ட உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதம் 2013ஆம் ஆண்டுப்பகுதியில் முறையே 1.88 சதவீதத்தினாலும் 2.51 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன.

**அட்டவணை 5.14** செலாவணிவீத அசைவுகள்

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கு ரூபா | | | | | | முன்னைய ஆண்டைவிட சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டிறுதி வீதம் | | | ஆண்டுச் சராசரி வீதம் | | | ஆண்டிறுதி | | ஆண்டுச் சராசரி | |
| | 2011 | 2012 | 2013 | 2011 | 2012 | 2013 | 2012 | 2013 | 2012 | 2013 |
| யூரோ | 147.42 | 168.13 | 180.45 | 153.86 | 164.01 | 171.51 | -12.31 | -6.83 | -6.18 | -4.37 |
| இந்திய ரூபா | 2.15 | 2.33 | 2.11 | 2.39 | 2.39 | 2.21 | -7.45 | 10.16 | -0.34 | 8.22 |
| யப்பானிய யென் | 1.47 | 1.48 | 1.25 | 1.39 | 1.60 | 1.32 | -0.88 | 18.78 | -13.26 | 20.74 |
| ஸ்டேர்லிங் பவுண் | 175.45 | 205.47 | 215.58 | 177.23 | 202.28 | 202.08 | -14.61 | -4.69 | -12.38 | 0.10 |
| ஐ.அ.டொலர் | 113.90 | 127.16 | 130.75 | 110.57 | 127.60 | 129.11 | -10.43 | -2.75 | -13.35 | -1.17 |
| சி.எ.உ. | 174.87 | 195.31 | 201.36 | 174.54 | 195.38 | 196.19 | -10.47 | -3.00 | -10.67 | -0.42 |
| தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் (ஆ) (இ) (2010=100) | ஆண்டிறுதி சுட்டெண் | | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | | | முன்னைய ஆண்டை விட சதவீத மாற்றம் | | | |
| | | | | | | | ஆண்டிறுதி சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | |
| | 2011 | 2012 | 2013 | 2011 | 2012 | 2013 | 2012 | 2013 | 2012 | 2013 |
| பெ.தா.செ.வீ - 24 நாணயங்கள் | 101.44 | 90.33 | 90.97 | 99.84 | 90.44 | 91.39 | -10.95 | 0.71 | -9.41 | 1.05 |
| உ.தா.செ.வீ - 24 நாணயங்கள் | 103.83 | 97.85 | 100.31 | 101.84 | 95.80 | 100.61 | -5.76 | 2.51 | -5.93 | 5.02 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி


(அ) இலங்கை ரூபாவிற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. + / - அடையாளங்கள் பெறுமதி உயர்வு / தேய்வை குறிப்பிடுகின்றது.

(ஆ) பெ.தா.செ வீதமென்பது 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் செலாவணி வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். ஒவ்வொரு நாணய கூடைகளிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் ஒப்பீட்டு முக்கியத்துவத்தினை பிரதிபலிக்கும் வர்த்தகப் பங்குகளின் அடிப்படையில் நிறையிடப்பட்டது. நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் தொடர்பின் கூடையில் உள்ளடக்கப்பட்டுள்ள நாணயங்களைக் கொண்ட நாடுகளின் பணவீக்கம் வேறுபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உ.தா.செ.வீதம் கணிக்கப்படுகின்றது. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது. விலைச் சுட்டெண் உண்மை தாக்கமுள்ள செலவாணி வீதத்தை கணிப்பிட பயன்படுத்தப்பட்டது.

(இ) செலாவணி வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதி தேய்வு என்பது தாக்கமுள்ள செலாவணி வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியல் நேரடியாக பிரதிபலித்தது.

குறிப்பு: பெ.தா.செ.வீ = பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம்
உ.தா.செ.வீ = உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம்


வரைபடம் 5.14 செலாவணி வீத அசைவுகள்




## 5.11.2 உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தி

**2013இல் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை 2012இல் அவதானிக்கப்பட்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் கலப்பான செயலாற்றமொன்றினைப் பதிவு செய்தது.** உடன் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2012இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 9,331 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 8,332 மில்லியனுக்கு (மொத்தக் கொடுக்கல்வாங்கல்களில் 61 சதவீதம்) வீழ்ச்சியடைந்தமைக்கு, குறிப்பாக ஆண்டின் தொடக்கப் பகுதியில் நலிவடைந்த உலகளாவிய கேள்வியின் விளைவாக வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் மெதுவடைந்தமையே முக்கிய காரணமாக அமைந்தது. எனினும், முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2012இன் ஐ.அ.டொலர் 4,089 மில்லியனிலிருந்த 2013இல் ஐ.அ.டொலர் 5,373 மில்லியனுக்கு அதிகரித்தது. பொதுவாக, வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு சிறிதளவிலேனும் 2012இன் ஐ.அ.டொலர் 13,420 மில்லியனிலிருந்து 2013ஆம் ஆண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 13,706 இற்கு அதிகரித்தன.

வரைபடம் 5.15 வங்கிகளுக்கிடையிலான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல் அளவுகள்




உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு செலாவணி வீதத்தில் ஏற்படும் குறிப்பிடத்தக்க தளம்பல்களைக் கட்டுப்படுத்துகின்ற அளவிற்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. 2013 ஆம் ஆண்டுப்பகுதியில், மத்திய வங்கியின் தலையீடு 2012இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,166 மில்லியன் கொண்ட தேறிய வழங்கலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 436 மில்லியன் கொண்ட தேறிய ஈர்ப்பினைப் பதிவு செய்தது. இது உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி சந்தையிலிருந்து மத்திய வங்கியினால் ஐ.அ.டொலர் 1,139 மில்லியன் ஈர்க்கப்பட்ட வேளையில் 2013ஆம் ஆண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 703 மில்லியன் நிரம்பல் செய்யப்பட்டமையின் சேர்ந்த விளைவாகும்.

**2013இல் மூன்று மாத மற்றும் ஆறு மாத ஒப்பந்தங்களுக்கான முன்னோக்கிய மிகை மதிப்பு, சராசரியாக, வட்டி வீத வேறுபாடுகளிலும் பார்க்கக் குறைவானதாகக் காணப்பட்டது.** யூன் நடுப்பகுதியிலிருந்து, முன்னோக்கிய மிகை மதிப்பு ஐ.அ. டொலருக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமைக்கு பதிலிறுத்தும் விதத்தில் அதிகரிக்கத் தொடங்கியது. எனினும், உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் உட்பாய்ச்சல்களின் காரணமாக 2013 ஓகத்து இறுதியிலிருந்து மூன்று மாத மற்றும் ஆறு மாத ஒப்பந்தங்களுக்காக முன்னோக்கிய மிகை மதிப்பு வீழ்ச்சியடைந்தன. மேலும், முன்னோக்கிய மிகை மதிப்பு, அண்மைய எதிர்காலத்தில் ரூபா உயர்வடையும் என்ற சந்தை எதிர்பார்ப்புக்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வட்டி வீத வேறுபாடுகளை விடக் குறைவானதாகவே காணப்பட்டது. அதேவேளை, 2013இல் வர்த்தக வங்கிகள் அவற்றின் தேறிய ஆரம்ப நிலைமைகளை சராசரியாக ஆகக் குறைந்த மட்டத்தில் ஆனால் நேர்க்கணிய மட்டத்தில் பேணின. எனினும், செத்தெம்பர் இறுதியிலிருந்து 2013 இறுதியை நோக்கி தேறிய திறந்த நிலைமை எதிர்க்கணியமாக மாற்றமடைந்து சராசரியாக கிட்டிய அண்மைக் காலத்தில் ரூபா மேலும் உயர்வடையுமென்ற சந்தை எதிர்பார்ப்புக்களை எடுத்துக்காட்டியது.